R.R.295/

*Issued* 7-1-1966]

FEB 1966

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

193

# OFFICIAL REPORT

## SATURDAY, 6TH NOVEMBER 1965

## VOLUME XXXII—No. 4

*CONTENTS*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 329–360 |
| II Adjournment Motion—Failure of crops in Kanyakumari district .. | 360–362 |
| III Statement by Minister for Food *re* crop situation in Kanyakumari district .. .. .. .. .. .. .. .. | 362–363 |
| IV Calling attention to non-cultivation of lands in Madurai and Ramanathapuram district .. .. .. .. .. .. | 363–365 |
| V Announcement—The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965. .. .. .. .. .. .. | 365 |
| VI Government Bills— | |
| (1) The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965 .. .. .. .. .. .. .. .. .. | 365 |
| (2) The Madras Preservation of Private Forests (Continuance) Bill, 1965. .. .. .. .. .. | 366 |
| (3) The Madras Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1965 (L.A. Bill No. 34 of 1965). | 366–367 |
| (4) The Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965 (L.A. Bill No. 32 of 1965). .. .. | 367–385 |
| (5) The Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965) .. .. .. | 385–401 |
| (6) The Madras Panchayats (Amendment) Bill, 1965 .. | 401–416 |
| VII Government Motion—Draft Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 .. .. .. | 417–429 |
| VIII Papers laid on the table of the House .. .. .. .. | 429 |


©
GOVERNMENT OF MADRAS
1966

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

PRICE 50

V2 II, 31 N65
N65.32.4
64924

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 6th November 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### ஸ்காட்லந்திலிருந்து இறக்குமதி செய்த உருளைக்கிழங்கு விதைகள் நஷ்டம்

* குறுகியகால கேள்வி எண் 2.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 3-11-1965-ந் தேதியன்று கேள்வி எண் 310-க்கு அளித்த விடையிற் கூறப்பட்டபடி 1965-66-ம் ஆண்டு ஸ்காட்லந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு விதைகள் பயனற்றுப் போனமைக்குக் காரணம் என்ன ;

(இ) இந்த இழப்புக்குக் காரணமானவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஸ்காட்லந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'கிரேட் ஸ்காட்' என்கிற உருளைக்கிழங்கு விதைகள் "கோல்டன் நெமடோட்ஸ்" என்கிற உருளைக் கிழங்கு நோயினாலும், மற்ற நோய்களாலும் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தது.

(இ) இந்த விதைகளை அனுப்பியவர்கள் நோயற்ற விதைகளையே அனுப்ப வேண்டுமென்கிற தங்கள் முதற் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. இது சம்பந்தமாய் இவ்விதைகளை எந்த நிறுவனம் அனுப்பியதோ அதனுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

(a) The consignments of Great Scot seed potatoes imported from the United Kingdom were found to be infested with Golden Nematodes (a potato disease) and other diseases.

(b) The suppliers of the seeds are not absolved of their primary responsibilities to see that disease-free seeds only are supplied. The matter is under correspondence with the firm through which supplies were obtained.

**திரு. து. ப. அழகமுத்து :** ஸ்காட்லண்ட் உருளைக்கிழங்கு விதைகள் வாங்குவது எந்த அடிப்படையில் நிர்மானிக்கப் பட்டது. ஏற்கனவே விதைகள் வாங்கி பயிர் செய்து பலனைக் கொடுத்த காரணத்தினல் வாங்கப்பட்டதா ? அல்லது, வேறு காரணத்தால் வாங்கப்பட்டதா ?

[6th November 1965

**கனம் திரு. பூ. கக்கன்:** வாங்கியது நேரடியாக வாங்கவில்லை. கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியா ஸ்காட்லண்ட் கவர்ன்மெண்டுக்கு எழுதி நமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. முதலிலே ஐயர்லாந்திலிருந்து அனுப்பப்பட்ட விதைகள் நன்றாக இருந்ததினால் அதை வாங்கி சாகுபடி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த முறையில் இந்த விதைகளையும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் காரணமாகத்தான் வாங்கப்பட்டது.

**திரு. து. ப. அழகமுத்து:** இந்த விதைகளை நம்முடைய பிரதிநிதி நேரில் சென்று வாங்கினாரா? அல்லது, எப்படி வாங்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** 'நம்முடைய பிரதிநிதி நேரில் போகவில்லை. ஆனால், அங்கே இருக்கிற அக்ரிகல்சுரல் அண்டு ஃபிஷரீஸ் டிபார்ட்மெண்ட் பரிசீலனை செய்து அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். அதன் பிரகாரம் வாங்கப்பட்டது.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர்:** மேல் நாடுகளிலிருந்து நம்முடைய நாட்டிற்கு இதற்கு முன்னால் விதைகள் அனுப்பப்பட்டிருக்கிறதா? அல்லது, இதுதான் முதல் முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** ஏற்கனவே இதர நாடுகளிலிருந்து விதைகள் வந்திருக்கின்றன.

During 1961–62, 1962–63 and 1963–64 Great Scot variety of potato seeds were imported from the United Kingdom to the extent of 53 tons and 14 cwts., and 10 tons respectively. Excepting small quantities of 4 tons and 250 lb., respectively. Excepting rejected, the balance quantity were used for sowings in the Governmental farms.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இந்த இழப்பு சம்பந்தமாக டிபார்ட்மெண்டல் என்கொயரி நடத்தப்பட்டதா? அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** இந்த விவரம் தெரிந்த உடனே விவசாய இலாக்கா டைரக்டரை வைத்துப் பேசினார்கள். வியாதி வந்த பிறகு வெளியிலே விட்டாலும் நஷ்டம் வரும். பயிர் செய்தாலும் பலன் அளிக்காது என்று தெரிவித்தார்கள். சாப்பாட்டிற்கு உதவுமா என்று நான்கூட கேட்டேன். அது முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான் இந்த இழப்பு ஏற்பட்டது.

**திரு. சா. கணேசன்:** இந்த மாதிரி விதைக் கிழங்குகளுக்கு நோய் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? சீதோஷ்ணஸ்திதி மாறுதல் என்ற காரணத்தால் இந்த நோய் ஏற்பட்டதா? அல்லது, முற்றாத விதை அனுப்பப்பட்டதென்ற காரணத்தால் நோய் ஏற்பட்டதா? என்ன காரணம் என்று அறிந்திருந்தால் தெளிவான விவரம் அறிய விரும்புகிறேன்.



6th November 1965]

**கனம் திரு. பூ. கக்கன்:** முதலிலே அனுப்பும்போது நெமடோட்ஸ் வியாதி இல்லை, வருகிற வழியில் அந்த வியாதி வந்துவிட்டது என்று சொல்லிவிட்டார்கள். ஆகையால் அந்த நஷ்டத்தை அவர்களே ஒத்துக்கொள்ளவேண்டுமென்று கம்பெனியாரைக் கேட்டோம். அவர்கள் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். மண் ஒட்டிக்கொண்டதினால் அந்த நோய் வந்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றிக் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. செ. மாதவன்:** இந்த நிலைமைக்கு யார் பொறுப்பாளி என்று முடிவு செய்யப்பட்டதா? அந்த முடிவின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. பூ. கக்கன்:** யார் பொறுப்பாளி என்று சொல்ல முடியாது. அவர்கள் பார்த்துத்தான் அனுப்பியிருக்கிறார்கள். சமுத்திரத்தில் வரும்போது அந்த வியாதி வந்திருக்கும். ஆகையால் யார் பொறுப்பு என்று சொல்ல முடியாது. டாமேஜ் ஆனதற்கு நஷ்டஈடு கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா எழுதி என்ன முடிவு செய்தார்கள் என்பது பின்னால்தான் தெரியும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** உருளைக்கிழங்கு விதைகளை யுனைட்டட் கிங்டம் அரசாங்கத்திடமிருந்து இந்தக் கம்பெனியார் சுலபமான விலைக்கு வாங்கி அதை நமக்கு அதிகமான விலைக்கு விற்கிறார்கள் என்பதை நமது அரசாங்கம் அறியுமா? அப்படியென்றால் அந்தக் கம்பெனியாரிடமிருந்து அந்தத் தொகையை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்தக் கம்பெனி—பாரி அண்டு கம்பெனி—அப்படி செய்யாது என்று நினைக்கிறேன். அதற்காக கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. டாமேஜுக்குக் காரணம் இருக்கவேண்டும். 'யார் யார் உங்களுக்கு சப்ளை செய்தார்களோ அவர்களிடமிருந்து அந்தத் தொகையை வாங்கி எங்களுக்கு நஷ்டஈடு கட்டவேண்டும்' என்று கம்பெனியாரைக் கேட்டிருக்கிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** ஏற்கனவே லேட் ப்ளைட் வியாதியால் பாதிக்கப்பட்ட உருளைக்கிழங்கு விவசாயிகள் மேலும் பாதிக்கப்படாமல் இருக்க, இந்த வியாதியால் பீடிக்கப்பட்ட விதைகளை கொண்டு வராமல் கடலில் கொட்டியதற்கு நன்றி. ஆனால் கிரேட் ஸ்காட் விதை நீலகிரி ஜில்லாவில் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு மிகவும் முக்கியமான விதையாக இருப்பதால், அந்த விதையை மேற்கொண்டு தருவிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன்:** இப்போது நீலகிரி ஜில்லாவில் விவசாய மக்கள் உருளைக்கிழங்கு அதிகமாக சாகுபடி செய்கிறார்கள். அவர்கள் நன்மையைக் கருதி பல ஆயிரம் ரூபாய் செலவழித்து

[6th November 1965

கிரேட் ஸ்காட் விதை மத்திய சர்க்கார் மூலமாக கிரேட் பிரிட்டன் விவசாயிகளிடமிருந்து வாங்க ஏற்பாடு செய்தோம். ஏற்கனவே வாங்கியதில் நன்மை கண்டோம். நஷ்டமாகி விட்டால் நிறுத்தி விட மாட்டோம். பிரயத்னம் செய்து கிரேட் ஸ்காட் விதையை வாங்க ஏற்பாடு செய்வோம்.

**திரு. வை. சங்கரன் :** நம்முடைய நஷ்டத்திற்கு முழு பொறுப்பு அவர்கள்தான். ஆகவே, பூர்ண நஷ்டஈடு அவர்களிடமிருந்து பெற முடியுமா என்பது சட்ட மூலமாக யோசிக்கப்பட்டதா? அப்படியென்றால், அதன் விவரம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போதுதான் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். சட்ட ஆலோசனை செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதும் யோசிக்கப்படும்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** இவ்வளவு உருளைக் கிழங்கு கெட்டு விட்டு இருப்பதால் கப்பலில் காற்று ஓட்ட வசதி இல்லாமல் இருந்ததால் கெட்டு விட்டு இருக்குமா என்பது ஆலோசனை செய்யப்பட்டதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்த உருளைக் கிழங்குகளை அவைகள் வியாதியால் கெட்டுவிட்டதால் கடலில் கொட்டிவிட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இந்த வியாதி கண்டது எப்போது கண்டுபிடிக்கப் பட்டது? ஏற்றுமதி செய்யப்பட்ட பிறகா, அல்லது கப்பலில் இருக்கும்போதா அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பிறகா? இதைக் கடலில் கொட்டுவதற்கு என்ன செலவாயிற்று?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே நான் முன்பு சொன்னபடி, முதலில் பரீட்சித்து பார்த்து, வியாதி இருக்கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

The first consignment of 15 tons was received on 15th February 1965 but before distribution of imported seeds, the Plant Protection Directorate of the Government of India has to certify that the seeds are disease-free. On examination of the consignment by a team of experts of the Government of India, the seed potatoes were declared to have been affected with Golden Nematodes and the consignment was ordered to be destroyed by the Plant Protection Adviser to the Government of India.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, கப்பலில் வரும் போது மனிதனுக்கு வியாதி ஏற்படுகிறது. உருளைக்கிழங்குக்கு கூடவா வியாதி ஏற்படுகிறது? இந்தத் தவறில் சம்பந்தப்பட்ட அதிகாரி யார்? ஏமாந்து வாங்கப்பட்டதா அல்லது பரிசீலனை செய்து வாங்கப்பட்டதா? இதில் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?



6th November 1965]

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கே பயிரிடும் விவசாய மக்களிடமிருந்து வாங்கப்பட்டது. வாங்கப்பட்ட பிற்பாடு அந்த அரசாங்கத்தில் இருக்கிற அக்ரிகல்சர், ஃபிஷெரிஸ் டிபார்ட்மென்ட்களில் பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனை செய்து கப்பலில் ஏற்றப்பட்டது. வாங்கினது நம் மாகாணம், மத்திய சர்க்கார் உதவி கொண்டு, பாரி கம்பெனி கப்பல் மூலமாக.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சேதம் ஆகி இருப்பது 15 டன் என்று கனம் அமைச்சர் சொன்னார்கள். இதன் மதிப்பீடு 94 ஆயிரம் ரூபாய் என்று நமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது . .

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலில் வந்த 15 டன் விதைக்கு நோய் வந்தது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** முதலில் வந்த 15 டன் வியாதி உற்றது. மறுபடி வந்தது வியாதியற்றது. மறுபடி வந்த கன்சைன்மென்ட் வியாதியுற்றது. இப்படி தொடர்ந்து வியாதியுற்று மொத்தம் 94 ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது என்று சொன்னால், எல்லா உருளைக்கிழங்குக்குமே நோய் கண்டதா, அல்லது 2, 3 டன்னாவது நல்லதாக இருந்ததா, இல்லையா?

**கனம் திரு. பூ. கக்கன் :** 15-2-65-ல் s.s. Clan Malcolm கப்பலில் 15 டன் வந்தது. 29-3-65-ல் Clan Macintosh கப்பலில் 72 டன் வந்தது. 1-4-65-ல் s.s. Clan Maciever கப்பலில் 12.50 டன் வந்தது. மொத்தம் 100 டன் வந்தது. வரும்போது பார்த்து பரிசீலனை முதலில் செய்திருக்கிறார்கள். பின்னர் க்வாரன்டைனில் பார்க்கும்போது கெட்டு இருக்கிறது. ஆகவே, எடுக்கக்கூடாது என்று சமுத்திரத்தில் கொட்டி விடுவது என்று முடிவு எடுத்திருக்கிறார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் இருந்து 3 தடவை 3 தனித்தனி கப்பல்களில் கன்சைன்மென்ட் வந்தது என்று தெரிய வருகிறது. தொடர்ந்து வியாதி வந்து இருக்கிற காரணத்தால், அனுமதிக்கப்பட்ட பிறகு, புறப்பட்ட இடத்திலிருந்தே வியாதி கண்டிருக்கும் என்று ஊகிக்கப்படுகிறது. இதைத் தருவித்த இந்திய சர்க்கார் மூலமாக நஷ்டஈட்டை பெற இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதைத்தான் முன்பு சொன்னேன். கம்பெனியோடு கரெஸ்பான்டென்ஸ் நடந்துகொண்டு இருக்கிறது. கவர்ன்மென்ட் ஆப் இண்டியாவுக்கு தெரிவித்து ஒரு முடிவுக்கு வருவோம்.

**திரு. செ. மாதவன் :** மூன்று கன்சைன்மென்ட் வந்தது என்று கூறுகிறார்கள். முதல் கன்சைன்மென்ட் வந்த உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அப்போதே பரிசீலித்ததாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரிசீலனை செய்த உடனே அந்த முடிவைத் தெரிவித்து மறுபடியும் " இம்போர்ட்டை " தடுக்க அரசாங்கம் தவறியதன் காரணம் என்ன?

[6th November 1965

THE HON. SRI P. KAKKAN : Immediately the suppliers were asked to stop further import, but it was reported by the suppliers that the entire quantity intended for supply was already on the high seas.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லிய பதிலில் இருந்து 100 டன் உருளைக்கிழங்கு விதைகள் ஏற்றப்பட்டு வந்து கடலில் கொட்டப்பட்டது என்று தெரிய வருகிறது. அப்படியெனில் விதைகளை எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு மாற்று பரிகாரமாக அவர்கள் பயிரிட என்ன ஏற்பாடு செய்யப்பட்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விதைகள் நோயுற்று கடலில் கொட்டப்பட்டன. அதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும்? சர்க்கார் வாங்கினது, விவசாயிகள் பணத்தை போட்டு வாங்கினது அல்ல.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, மூன்று தடவை வந்து சேர்ந்ததாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது எவ்வளவு கால அளவில்? மூன்று தடவை வந்ததே, ஒவ்வொன்றிற்கும் இடை வெளி என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலில் 15-2-1965-ல் வந்தது. இரண்டாவது 29-3-1965-ல் வந்தது. பின்னர் வந்தது 1-4-65-ல்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கடலில் கொட்டப்பட்டதாக சொல்லப்பட்டது. எந்தக் கடலில் என்று அறியலாமா ?

**கனம் சபாநாயகர் :** எந்த மீன் சாப்பிட்டது என்று கூடக் கேட்பீர்கள் போல் இருக்கிறதே ?

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** வியாதி வந்ததால் கடலில் கொட்டப்பட்டது என்று சொன்னார்கள். நீலகிரி ஜில்லாவில் 1964-ம் ஆண்டில் "கோல்டன் நெமடோட்ஸ்" என்ற வியாதி ஏற்பட்டு இருக்கிறது. அது நமது நாட்டில் ஏற்பட்டதா அல்லது வெளி நாட்டிலிருந்து கொண்டுவந்த விதையை தெரியாமல் போட்டதினால் இந்த வியாதி நீலகிரி ஜில்லாவில் பரவி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : This question has nothing to do with the main question and let the hon. Member put a separate question.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தருவிக்கப்பட்டது 100 டன் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீலகிரியில் ஒரு வருடத்திற்கு பூர்த்தியாக பயிரிட 2,000 டன் வேண்டும். 20,000 மூட்டைகள் வேண்டும். வரவழைக்கப்பட்ட 100 டன் வியாதியால் பீடிக்கப்பட்டதால் கடலில் கொட்டப்பட்டது. 2,000 டன் ஒட்டு மொத்தமாக வாங்க, எப்போது கேட்டாலும் ஃபாரின் எக்ஸ் சேன்ஜ் இல்லை என்று சொல்லப்படுகிறது. தயவு செய்து முயற்சி செய்து 2,000 டன் விதைகளை வரவழைக்க ஏற்பாடு செய்வார்களா ?



6th November 1965]

193

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 100 டன் 'கிரேட் ஸ்காட்' விதையை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தது பூர்வாங்கமாக. சுத்தமான விதைகள் கொடுக்கவேண்டுமென்பது கருத்து. 2,000 டன் இங்கிலாந்திலிருந்து வரவழைக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்போதைக்கப்போது சுத்தமான விதைகளை மாற்றி போட வேண்டி இருக்கிறது. ஆகவே, 'கிரேட் ஸ்காட்' விதையை 100 டன் அரசாங்கம் வாங்கி அவைகளை விருத்தி செய்வது என்பது திட்டம். ஸ்காட் ஸீட் வேண்டும், இல்லை என்றால் இந்த வியாதியைத் தவிர்க்கமுடியாது. நாம் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தோம். சில சமயங்களில் அந்நியச் செலாவணி கிடைக்கவில்லை. அந்நியச் செலாவணி ஏற்பாடு செய்தாலும் இங்கிலாந்திலேயே பற்றாக்குறை என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். இத்தனை கஷ்டங்களுக்குமிடையே எப்படியாவது 100 டன் கிடைக்கட்டும் என்று இங்கிலாந்திலிருந்து வாங்கினோம். அதற்கு வியாதி வந்துவிட்டது. ஏதோ தவிர்க்கக்கூடிய முறையிலே நடந்திருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் நினைக்கிறார்கள். இதிலே அரசாங்கமோ, விவசாய இலாகாவோ தவிர்க்கக் கூடியது ஒன்றும் இல்லை. ஏதோ வியாதி வந்தது, அந்த வியாதி பரவக்கூடாது என்று விதைகள் கடலில் கொட்டப்பட்டன. எந்தக் கடலில் கொட்டி இருந்தாலும் கடலுக்கு பாதகம் ஒன்றும் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** இந்த விதைகள் வியாதியால் பீடிக்கப் பட்டிருக்கின்றன என்று தெரிந்த உடனே, விதைகளை அனுப்பியவர்களுக்கு 'நீங்கள் தான் பொறுப்பு' என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அனுப்பிய கம்பெனியார் ரூபாய் கேட்டார்கள். ஏற்பட்ட நஷ்டத்திற்கு நீங்கள்தான் பொறுப்பு, அதை நீங்கள்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னோம். ஏற்கனவே விதையைக் கொடுக்கும்போதே பரிசீலனை செய்து பார்த்தபோது வியாதி ஏதும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். யார், யார் உற்பத்தி செய்து விதைகளை அனுப்பினார்களோ அவர்கள்தான் இந்த நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இது கரெஸ்பாண்டென்ஸில் இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மற்றொன்றுகூட கூற விரும்புகிறேன். இப்படி ஸ்காட்லண்டிலிருந்து சுத்த விதைகள் கிடைப்பதில் உள்ள கஷ்டத்தையொட்டி, பம்பாயில் கவர்னராக இருக்கிற டாக்டர் செரியன் அவர்களுடைய மனைவியார் ஸ்ரீமதி செரியன் இங்கிலாந்து போயிருந்தபோது அயர்லாந்திலுள்ளவர்களை அணுகி சுத்தமான உருளைக்கிழங்கு விதைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். அவர்கள் மனமுவந்து உருளைக் கிழங்கு விதைகளை இலவசமாகவே அனுப்பினார்கள். அது நமது துறைமுகத்தில் வந்திருந்தது கப்பலில். கப்பலில் வந்திருக்கிறது அதை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீமதி செரியன் அவர்கள் வற்புறுத்திக்கொண்டு இருந்தார். அவர்கள் இலவசமாக அளித்திருக்கிறார்கள், உடனடியாக கப்பலிலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி, பம்பாயிலிருந்து

எனக்கு ஃபோன் செய்தார்கள். ஆனால், நம் இலாகாவினர் என்ன சொன்னார்கள் என்றால், சுத்தமான விதைகளாக இருக்கிறதா என்று பார்த்துத்தான் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கப்புறம் அது பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனை செய்து பார்த்து, அதிலும் வியாதி இருக்கிறது, அதை எடுக்கமுடியாது என்று சொல்லி விட்டார்கள். விதைகளை அனுப்பியவர்களுக்கு ஏமாற்றம்தான். ஆனால் நாம் ஒன்றும் செய்யமுடியவில்லை.

**திரு. க. ர. நல்லசிவம் :** வெளி நாடுகளிலிருந்து வாங்கும் விதைகள் அநேகமாக வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளவையாக இருக்கின்றன. இந்த நாட்டிலேயே விதைகளை உற்பத்தி செய்வதில் நிலத்தில்தான் கோளாறு இருக்கிறது. நிலத்தில் இருக்கிற நோயை நீக்கி விதைகளை இங்கேயே உற்பத்தி செய்யும் முயற்சியை எடுத்துக்கொண்டால் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இங்கே சிம்லாவில் உருளைக் கிழங்கு விதை கிடைக்கிறது. அதை எடுத்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசாங்கத்தார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் இங்கிலாந்திலிருந்து ஸ்காட் ஸீட்ஸை நாடவேண்டும், இங்கேயே எடுத்துக்கொள்ளுங்கள் என்று மத்திய அரசாங்க விவசாய இலாகாவினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீலகிரி விவசாயிகள், ' இந்தியாவில் இருக்கிற விதைகள் சுத்தமாக இருக்காது, அதிலும் முக்கியமாக ஸ்காட் விதைகளே வேண்டும் ' என்று வற்புறுத்திக் கொண்டு வந்தார்கள். சிம்லாவிலிருந்து வரும் விதை போதாது என்று சொன்னார்கள். அதனால்தான் அன்னிய நாட்டு விதை வரும் என்று பார்த்தோம். அதிலும் வியாதி இருக்கிறது.

### மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடங்கள்

*** தனி நபர் அறிவிப்புக் கேள்வி 2.—திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மருத்துவக் கல்லூரியில் அண்மையில் அதிகப்படியாக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ?

(உ) அவர்களில், பி.யூ.சி., பி.எஸ்ஸி;, படித்தவர்கள் முறையே எத்தனை பேர் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம். 1965 நவம்பரில், மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள 100 மாணவர்கள் கூடுதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(இ) விதிகளுக்கிணங்க 1965 ஜுலையில் பொறுக்குக் குழுவினர் தயாரித்த அதே பட்டியலிலிருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(உ) தேர்தெடுக்கப்பட்ட 100 மாணவர்களும் பி.யூ.சி. (கல்லூரி புகுமுக வகுப்பில்) தேறியவர்களே.





**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஜுலை மாதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பி.யூ.ஸி. படித்தவர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ரிஸர்வ் லிஸ்டில் இருக்கிறார்கள். பி.எஸ்ஸி படித்தவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ரிஸர்வ் லிஸ்டில் இருக்கிறார்கள். எந்த விகிதாசாரத்தில் ஜுலை மாதத்தில் இரண்டு பிரிவிலேயிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அதே விகிதாசாரத்தில் இப்போது தேர்ந்தெடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாதாரணமாக பி.யூ.ஸி படித்தவர்களிலேயிருந்துதான் தேர்ந்தெடுப்பது. பி.எஸ்ஸி. படித்தவர்களுக்குக் கொடுக்க இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பி.யூ.ஸி. படித்தவர்களிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வெய்ட்டிங் லிஸ்டில் ஏராளமாக இருந்தார்கள். 100 ஸ்தானங்களை மத்திய சர்க்கார் ஒதுக்கியபோது, உடனடியாக எடுத்துக் கொள்ள, பாகுபாடு எதும் செய்யாமல், பி.யூ.ஸி; படித்தவர்கள் லிஸ்டிலேயிருந்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று உத்திரவு போடப்பட்டது. ஆனால் 100 பேர்களும் சேரவில்லை. காலி ஸ்தானங்கள் இருக்கின்றன. காலி ஸ்தானங்களுக்கு பி.எஸ்ஸி. வெய்ட்டிங் லிஸ்டிலேயிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்று இப்போது உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, 100 இடங்களிலும் மாணவர்கள் சேர்ந்து விட்டார்கள் என்று பத்திரிகைகளில் தகவல்கள் வந்திருக்கின்றன. அது மாத்திரமல்லாமல் 1965-ம் ஆண்டு விதிகளின் பிரகாரம்தான் இந்த இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அந்த விதிகளிலேயுள்ள முக்கிய விதி பி.எஸ்ஸி. படித்தவர்களுக்கு 10 சதவிகிதம் இடம் ஒதுக்கவேண்டும் என்பதும் ஒன்று. அந்த விதியைப் புறக்கணித்து நம் அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது எக்ஸ்ட்ராார்டினரி; திடீரென்று மத்திய அரசாங்கம் மேலும் 100 ஸ்தானங்கள் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். உடனடியாக சேர்த்துக் கொள்ளுவதற்காக, பி.யூ.ஸி. வெய்ட்டிங் லிஸ்டில் ஏராளமான பேர்கள் இருந்ததால் அதிலேயிருந்து சேர்த்துக்கொள்ளும்படி உத்திரவிடப்பட்டது. சிலர் சேராததால் அந்த ஸ்தானங்களுக்கு பி.எஸ்ஸி. லிஸ்டிலேயிருந்து சேர்த்துக் கொள்ளலாம் என்று இப்போது உத்திரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்குத் தனியாகப் பயிற்சி அளிக்கப்படுமா ? அல்லது ஜுலை மாதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களோடு சேர்த்து பயிற்சி அளிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது கல்லூரி டீன் கவனிக்க வேண்டிய விஷயம்.

[6th November 1965

**திரு. சா. கணேசன்** : பி.யூ.ஸி. மாணக்கர்கள்தான் குறிப்பாக மருத்துவக் கல்லூரிப் படிப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும், "பி.எஸ்ஸி. படித்தவர்களால் பயன் பெரிதும் கிட்டும்; பி.எஸ்ஸி. படித்த பிறகு வைத்தியத் துறைக்குச் செல்லுகிறவர்களுடைய திறமையும் தெளிவும் அதிகமாக இருக்கும்" என்ற காரணத்தினால், குறைந்தபட்சம் 10 சதவிதம் ஒதுக்கவேண்டும் என்ற அடிப்படை விதி இருந்தும், பி.எஸ்ஸி. படித்தவர்களுக்கு இடம் இல்லாது போகும் நிலையில் 100 ஸ்தானங்களையும் பி.யூ.ஸி. மாணக்கர்களுக்குக் கொடுத்தது பொருத்தமாக இருக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் அங்கத்தினருடைய கருத்துத்தான் எனது சொந்தக்கருத்து. அதை ஏற்றுக்கொள்ளுவதாக இருந்தால் முதலில் பி.எஸ்ஸி. படித்தவர்களுக்குக் கொடுத்து விட்டு மீதி இருப்பதைத்தான் பி.யூ.ஸி. படித்தவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அந்தக் கொள்கையை அரசாங்கம் அனுசரிக்கவில்லை. பி.எஸ்ஸி. மாணவர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பு சொன்னப் பிரகாரம், திடீரென்று, அசாதாரண நிலையில் 100 ஸ்தானங்கள் வந்தபோது பி.யூ.ஸி. வெய்ட்டிங் லிஸ்டிலேயிருந்து எடுத்துக்கொள்ளும்படி உத்திரவிடப்பட்டது. காலியாக இருக்கும் இடங்களுக்கு பி.எஸ்ஸி. படித்தவர்களைச் சேர்த்துக்கொள்ளும்படி உத்திரவிடப்பட்டுள்ளது.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்** : வெய்ட்டிங் லிஸ்டில் இருக்கிற ஒருவர் இருவரை இன்னும் அழைக்கவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அவர்கள் எப்படி விடப்பட்டிருக்கிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : குறிப்பிட்டு யார் யார் வெய்ட்டிங் லிஸ்டில் இருந்தவர்கள் எடுக்கப்படவில்லை என்று மருத்துவத் துறை அமைச்சருக்குத் தெரிவித்தால் வேண்டிய பரிகாரத்தைப் பெறலாம்.

9-00 a.m. **திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத் தலைவர் அவர்களே, பி.யூ.ஸி. படித்தவர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இறுதியாக சேருவதற்கான நாள் நான்காம் தேதியன்று பத்திரிகையிலே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வகையிலே சேர்ந்திருக்கிறவர்கள் போக, மீதி காலி இடங்கள் இப்பொழுது எவ்வளவு இருக்கின்றன? அந்த இடங்களுக்கு எவ்வளவு பேர்கள் பி.எஸ்ஸி. படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : நான்கு பேர்கள் சேரவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது. அந்த நான்கு காலி இடங்களை பி.எஸ்ஸி. படித்தவர்களுடைய வெய்டிங் லிஸ்டில் உள்ள மாணவர்களுக்கு கொடுக்கும்படி அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது.



6th November 1965]

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்** : ஜுலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஜாபிதாவில் வெய்டிங் லிஸ்டில் எவ்வளவு பேர்கள் இருந்தார்கள் என்ற கணக்கு தரப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : அது பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற 100 இடங்களுக்கு ஜில்லாவாரியாக எத்தனை பேர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமோ அத்தனை பேர்களை எடுத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொல்ல முடியுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : 100 சீட்டுகளில் எத்தனை பேர்களுக்கு ஜில்லாவாரியாக கொடுக்க வேண்டுமோ அதற்கேற்றபடி தான் கொடுத்திருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்** : தேர்ந்தெடுக்கப்படுகிற 100 மாணவர்களில் 50 மாணவர்கள் சென்னை கல்லூரியிலும், 50 பேர்கள் தஞ்சை கல்லூரியிலும் படிப்பார்கள் என்று தெரிய வருகிறது. பி.எஸ்ஸி. படித்த மாணவர்களுடைய வெய்டிங் லிஸ்டிலுள்ள தொகை 14 தான். அந்த 14 மாணவர்களையும் சேர்த்துக்கொள்வதில் எந்தவிதமான சிரமம் ஏற்படுவதற்கு வழியில்லை. ஆகவே, இந்த 14 பேர்களையும் சேர்த்துக்கொள்ளும்படி அரசாங்கம் உத்திரவிடுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : ஏற்கனவே பி.யு.ஸி. நான்கு பேர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறோம். இப்பொழுது காலியாக இருக்கும் நான்கு இடங்கள் மட்டும் பி.எஸ்ஸி. காண்டிடேட்ஸுக்கு கொடுக்கப்படும். நான்கு பேர்களுக்கு மேலாக பி.எஸ்ஸி. காண்டிடேட்டை எடுக்க இயலாது.

**திரு. ஜே. மாதா கவுடர்** : சேர்க்கப்பட்டிருக்கிற 100 மாணவர்களில் எத்தனை பேர்கள் பார்வேர்டு கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள், எத்தனை பேர்கள் பாக்வேர்டு கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள்? முன்பு போட்டதை அனுசரித்து, எத்தனை சதவிகித விகிதாசாரம் அனுஷ்டிக்கப்பட்டு எடுக்கப்பட்டதோ அப்படி சதவிகித விகிதாசாரம் அனுசரிக்கப்பட்டதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : சதவிகித விகிதாசாரப்படிதான் இந்தக் கமிட்டி செய்திருக்கிறார்கள். அதில் எந்தவிதமான கோளாறும் இல்லை.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்** : 100 பேர்கள் சேர்ந்தவர்களில் எத்தனை பேர்கள் ஆர்மியில் சேருவதாக ஒப்பந்தம் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அறியலாமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : படித்து பாஸ் பண்ணி டாக்டர் ஆனபிறகுதான் பட்டாளத்தில் சேர முடியும். இப்பொழுதுதான் காலேஜில் சேர வந்திருக்கிறார்கள்.

[6th November 1965

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஜூலை மாதத்தில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது காத்திருப்போர் பட்டியல் என்று தயாரிக்கும்பொழுது, 100 மாணவர்களுக்கு மேற்பட்ட தொகை வைத்திருக்கிற அளவுக்கு காத்திருப்போர் பட்டியல் தயாரிக்கப்பட்டதா ? மாவட்ட வாரியாக விகிதாசாரத்தை அனுசரித்து, தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்ததா அந்தப் பட்டியல் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஜூலை மாதத்து லிஸ்டில் 100 பேர்களுக்கு மேலே தயாரிக்கப்பட்டிருந்தது. செலக்ஷன் செய்யும்பொழுது 100 சீட்களுக்கு மாவட்ட வாரியாக எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படித்தான் கொடுத்திருக்கிறது.

## *Tamil Pandits*

* 311 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that unqualified Tamil Pandits in aided higher elementary schools have been thrown out of employment from 5th March 1965 consequent on the orders issued in Proceedings Rc. No. 982-B7/64, dated 17th February 1964 of the Director of Public Instruction, Madras;

(*b*) whether any representations have been received in this regard; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) It has been brought to the notice of Government that unqualified Tamil Pandits have been thrown out of employment.

(*b*) Yes.

(*c*) The matter is under the consideration of Government.

## *இந்தி, தமிழாசிரியர்கள்*

* **312 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

நமது ராஜ்யத்திலுள்ள சர்க்கார், தனியார் போர்டு நிர்வாகங்களின் கீழுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் தற்போது வேலை செய்து வரும் இந்தி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

| Name of management. (1) | Hindi Pandits. (2) | Tamil Pandits. (3) |
|---|---|---|
| Government .. .. | 88 | 229 |
| Municipal .. .. .. | 121 | 346 |
| District Board .. .. | 1,055 | 2,305 |
| Private .. .. .. | 809 | 1,942 |
| Total .. | 2,073 | 4,822 |



6th November 1965]

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** முதல் கிரேடு இந்தி பண்டிட், முதல் கிரேடு தமிழ் பண்டிட் நியமனம் செய்வதிலே எந்த அடிப்படை வகுக்கப்பட்டிருக்கிறது ? அந்த அடிப்படையில் இந்தி பண்டிட் நியமனம் செய்வதற்கும், தமிழ் பண்டிட் நியமனம் செய்வதற்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முதல் கிரேடு தமிழ் பண்டிட், முதல் கிரேடு இந்தி பண்டிட் நியமிப்பது ஸிலபஸைப் பொறுத்தது. இந்தி ஸிலபஸ் வேறு, தமிழ் ஸிலபஸ் வேறு. அந்த அடிப்படையில் எத்தனை பேர்கள் முதல்தர பண்டிட்கள் நியமிப்பது என்பது முடிவு செய்யப்படுகிறது.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, தமிழ் பண்டிட் கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்டிருந்த நேரத்தில், அவருக்கு ஆங்கில அறிவு போதாது என்று கருதி, மறுபடியும் கல்லூரி முதல்வர் பதவியிலிருந்து அவரை நீக்கியது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றுமில்லை. கல்லூரி முதல்வர் நியமனம் செய்வதிலே தமிழ் பண்டிட்டாக இருந்தாலும் அல்லது வேறு ஆசிரியர்களாக இருந்தாலும், தகுதி பார்த்து நியமனம் செய்யப்படுகிறது. சில சமயங்களில் தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகிறது. அதற்குப் பிறகு அவரையே தொடர்ந்து கன்பர்ம் செய்வதும் உண்டு. கன்பர்ம் செய்யாமல் மறுபடியும் அவரை ஆசிரியராகப் போடுவதும் உண்டு.

## *இந்தி ஆசிரியர்கள் நியமனத்திற்கான மான்யம்*

* **313 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) இந்தி ஆசிரியர்களை நியமிப்பதற்காக மத்திய அரசு இம்மாநில அரசுக்கு மான்யம் ஏதேனும் வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், வழங்கிய தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes.

| Year. (1) | | Central grant released. (2) |
|---|---|---|
| | | RS. |
| 1961–62 | .. | 2,80,800 |
| 1962–63 | .. | 8,96,400 |
| 1963–64 | .. | 12,87,540 |
| 1964–65 | .. | 40,00,000 |

**திரு. செ. மாதவன் :** இந்தி ஆசிரியர்களை பராமரிப்பதற்கான முழு செலவும் மத்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா ? அல்லது, அந்த மானியத்தைத் தவிர மாநில சர்க்கார் ஏதாவது தொகை செலவழிக்கிறதா ? அப்படியானால் என்னென்ன செலவு செய்யப்படுகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் குறிப்பிட்ட ஆண்டுகளில் முதல் ஆண்டில் 60 பர்சென்ட் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கப்புறம் 100-க்கு 100 பங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது.

* 314 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

**(அ)** எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் ஒரு முதல் நிலை இந்தி ஆசிரியர் நியமனம் செய்யக்கோரி தட்சிண பாரத இந்தி பிரச்சார சபையிலிருந்து ஏதேனும் முறையீடு வந்திருக்கிறதா?

**(இ)** அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) It is under consideration.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இந்தியைப் பொது மொழியாக வளம் செய்வதற்குரிய அடிப்படையான விஷயமாக இருப்பதால், ஒவ்வொரு ஹைஸ்கூலிலும் குறைந்த பட்சம் முதல் கிரேடு பண்டிட் நியமனம் செய்யவேண்டியது அவசியம்தான் என்பதைக் கொள்கை அளவிலாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். முதல் கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. எங்கு அவசியம் ஏற்படுகிறதோ அங்கே முதல் கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

### இந்தி மொழி வளர்ச்சி

* 315 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

இந்தி மொழி வளர்ச்சிக்காக, தமிழகத்தில் மாநில அரசு செலவிடும் பணம் ஆண்டொன்றுக்கு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The expenditure incurred by the Government towards the promotion of Hinidi in this State is met by the Government of India by way of Central assistance. The grants received from the Government of India for the following schemes during 1961–62 to 1964–65 are given below:—

| Scheme. | 1961-62 | 1962-63 | 1963-64 | 1964-65 |
|---|---|---|---|---|
| 1 Appointment of Hindi Teachers in High Schools | 2,80,800 | 8,96,400 | 12,87,540 | 40,00,000 |
| 2 Regional Hindi Teachers' Training College Gandhigram. | Nil. | 1,49,500 | Nil. | 27,870 |
| 3 Dakshin Bharat Hindi Prachar Sabha. | 32,366 | 20,147 | 18,087 | Under consideration of the Government of India. |



**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் தலைவர் அவர்களே, நாம் இந்தி வளர்ச்சிக்காக நிறைய பணம் செலவு செய்துகொண்டிருக்கிறோம். இந்தி படிக்க வேண்டும் என்று விரும்பக்கூடிய சட்டசபை அங்கத்தினர்களுக்கு சட்டசபை கூட்டம் நடக்கும் பொழுது ஒரு இந்தி ஆசிரியர் வைத்து பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் ஏற்பாடு செய்யலாம். ஆனால், சட்டமன்றம் கூடுகின்ற 4, 5 நாட்களுக்கு மட்டும் பாடம் சொல்லிக்கொடுத்தால், திரும்பியும் பாடம் மறந்து போய் விடும். திரும்பவும் அக்ஷராப்பியாசம் செய்யவேண்டியிருக்கும்.

### தொழில் நிறுவனங்கள்

* 316 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

**(அ)** மாநில அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டு, அவர்களது மேலாதிக்கத்தின்கீழ் உள்ள தொழில் நிறுவனங்களில் ஒழுங்கீனங்களை ஒழிப்பதற்கென, தனிக் கண்காணிப்பு அதிகாரிகளை நியமிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறதா?

**(இ)** ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No. Government are not aware of any graft in the Industries sponsored or controlled by the State Government.

(b) Does not arise.

### *Machine Tool Factory*

* 317 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under consideration of the Government to set up a Machine Tool Factory in Madurai district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Government are investigating the possibilities to set up one or two machine tool plants in this State. Details of the projects and their location have not yet been worked out.

**திரு. வை. சங்கரன்:** மதுரை ஜில்லாவில் எந்தவிதமான கனரகத் தொழிலும் ஏற்படுத்தப்படவில்லை. வெகுகாலமாக இது சம்பந்தமாக 'ரெப்ரெசென்டேஷன்' வந்துகொண்டிருக்கிறது. இந்த ஒன்றையாவது மதுரை ஜில்லாவில் ஆரம்பிப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member is counting the chickens even before they are hatched. No decision has yet been taken even with regard to the organization and establishment of the Machine Tool Factory.

[6th November 1965

### கரும்பு உற்பத்திக்கான ஆராய்ச்சி நிலையங்கள்

*318 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பு உற்பத்திப் பெருக்கத்திற்கான ஆராய்ச்சி நிலையங்கள் நமது மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில்?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) ஆம்.

(இ) தலைமை ஆராய்ச்சி நிலையம், கடலூர்.
உதவி ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி.
உதவி ஆராய்ச்சி நிலையம், குடியாத்தம்.

### *Cashewnut cultivation*

*319 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal under consideration of the Government to expand the area under cashewnut cultivation in the State; and

(b) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) ஆம்.

(இ) நான்காவது திட்டக் காலத்தில், 15,000 ஏக்கர் காட்டு நிலங்களிலும், 10,000 ஏக்கர் காடுகள் அல்லாத பிற நிலங்களிலும் முந்திரி சாகுபடி செய்யும் செயற்குறிப்பு உள்ளது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன இடங்களில், திட்டத்தின் கீழ், எந்தெந்த இடங்களில் முந்திரி பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கமுடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** எந்தெந்த பகுதிகள் தகுதியுள்ளவையாக இருக்கின்றனவோ அந்த நிலங்களில் முந்திரி பயிர்செய்யப் படுகிறது.

### *Package Scheme for Chidambaram taluk*

*320 Q.—SRI A. RAMACHANDRA RAYAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to begin the Package Scheme in Chidambaram taluk, South Arcot district; and

(b) when will the Scheme be implemented?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



6th November 1965]

### *Linking Vellar with Willingdon Reservoir*

*321 Q.—SRI K. NARAYANASWAMY PILLAI: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to construct flood banks connecting Willingdon Reservir and the river Vellar; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) No.

(b) Does not arise.

### மணியாற்றின் குறுக்கே அணை

*322. கேள்வி—திரு. ஆ. தங்கவேலு: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப பதிலளிப்பாரா:—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் பகுதியிலுள்ள மணியாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. தங்கவேலு:** தலைவர் அவர்களே, மணியாற்றில் அணை கட்டுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டு இருப்பதாக சென்ற ஆண்டு சொல்லப் பட்டதே, எப்பொழுது அது நிறைவேற்றப்படும் என்று அறியலாமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய சர்க்காருக்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டு இருப்பது என்றால் அது வேறு திட்டமாக இருக்கும். கனம் அங்கத்தினர் தனிக்கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

### வராக நதியின் குறுக்கே அணை

*323 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) செஞ்சி தாலுகா வராக நதியில் உள்ள கடப்பட்டு அணையை ரிசர்வாயராகக் கட்டுவதற்கு நீர்ப்பாசன இலாகா (திட்டம் பிளானிங் சர்க்கிள்) சூபரின்டென்டிங் இன்சினியர் அவர்கள் பார்வையிட்டு அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பி உள்ளாரா?

(இ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[6th November 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The Superintending Engineer (Planning Circle) after conducting a preliminary investigation into the scheme submitted a report to the Chief Engineer (Irrigation). The Chief Engineer's report in the matter was considered by Government and the scheme has been deferred for the present.

*324 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுகா வராக நதியில் (கடலி கிராமத்தில்) ஏற்கனவே கட்டி உடைந்துபோயுள்ள அணையை நீர்ப்பாசன இலாகா பிளானிங் சர்க்கிள் சூபரின்டெண்டிங் இன்ஜினியர் பார்வையிட்ட ரிப்போர்ட் அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ?

(இ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The Superintending Engineer has submitted his report to the Chief Engineer (Irrigation).

(b) The proosals are under examination by the Chief Enginee (Irrigation).

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த வராக நதி நீர்த்தேக்கத்தை எந்த இடத்தில் கட்ட திட்டம் போட்டு இருக்கிறது என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்வி உடைந்துபோன ஏரியைத் திருப்பிக் கட்டுவது சம்பந்தப்பட்டது. அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

### மன்னி ஆற்றுப்பாசனம்

*325 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுகாவிலுள்ள 'மன்னி' ஆற்றில் பாசன வசதி சரியில்லை என்றும், பாசன வசதி செய்து தரவேண்டுமென்றும் கோரி ரயத்துக்களிடமிருந்து சர்க்காருக்கு அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The paucity of supply in Manniar is due to formation of heavy silt at its head, on account of its bed level being lower than Cauvery. Large amount of silt was removed last year by bull dozers and a silt ejector has been constructed this year which has reduced silt entering the river. Necessary proposals for solving the problem, permanently, are under consideration of the Chief Engineer.



6th November 1965]

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் இந்த வேலைக்கு நிதி ஒதுக்கப்பட்டு, தண்ணீர் வந்துவிட்டதால், அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டது. அந்த வேலையைத் திருப்பிச் செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடத்தில் உள்ள தகவல்படி, சில்ட் படிந்து, அதை நீக்க புல்டோஸர் போன்றவைகள் உபயோகிக்கப்பட்டும், அதோடு அல்லாமல், சில்ட் எஜக்ட்டர் என்ற அமைப்பையும் ஏற்படுத்தி, அதை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், இதெல்லாம் தாற்காலிகப் பரிகாரங்கள்தான். நிரந்தரமாக சில்ட் தங்காமல் இருக்க பூண்டி ரிசர்ச் ஸ்டேஷனிலே ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். அதில் முடிவு ஏற்பட்டவுடனே, வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஆற்றில் ஏறத்தாழ பத்து ஆண்டு காலமாக நீர்ப்பாசன வசதி இல்லாமல் இருக்கிறது என்று ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் நடவடிக்கை எடுப்பதும், தண்ணீர் வந்தவுடன் நிறுத்தி விடுவதும், இப்படி ஆண்டுக்காண்டு நடந்து கொண்டிருக்கிறது. வருகிற பசலிக்குள்ளாகவாவது, நடவடிக்கைகளை நடைமுறைக்கு கொண்டு வந்து, தூர் வாருவதோ, வேறு என்ன செய்வதோ செய்து, வேலைகள் செய்யப்படும் என்கிற உறுதியை அரசாங்கம் அளிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சில்ட்-ப்ராப்ளம் பொருத்தவரை, தாற்காலிகமாக எதையும் செய்வது போதாது, நிரந்தரமாக இருக்கும் வகையில் ஏதாவது செய்தாகவேண்டும். 'Silt has a continuous movement' அதனால், மேலும் மேலும் சில்ட் படிந்துவிடாமல், பாதுகாக்க, நிரந்தரமாக ஆராய்ச்சி செய்யவேண்டும். இப்பொழுது அது 'பூண்டி ரிசர்ச் ஸ்டேஷனில்' நடந்துகொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி நடைபெற்று வேலை இந்த ஆண்டு துவங்கும் என்று தாற்காலிகமாகச் செய்யும் வேலையைக்கூட டிபார்ட்டுமெண்டார் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைகளையாவது உடனடியாகச் செய்து அந்தப் பகுதி நிலங்களுக்கு சாகுபடி செய்ய வசதி செய்துகொடுக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : முன்பு இருந்த நிலையை விட இப்பொழுது இருக்கும் நிலை மாறுபட்டிருக்கிறது. விவசாயிகளுடைய கஷ்டத்தை இலாகாவினர் உணர்ந்து இருக்கிறதனால், தாற்காலிக வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஆனால், நிரந்தரமாக சில்ட் மூவ்மெண்டை தடைசெய்ய ஒரு நிரந்தர அமைப்புத் தேவை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

[6th November 1965

## மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் தேர்வு

* 326 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :
திரு. சி. கோதண்டராம பாகவதர் : } கனம்
திரு. ஆ. கு. சுப்பையா :

சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1965-66-ம் கல்வி ஆண்டில், மருத்துவக் கல்லூரிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுள், ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், எத்தனை சதவீதம்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | Men students | .. | .. | 568 |
| | Women students | .. | .. | 241 |
| | | | | 809 |
| (b) | Men students | .. | .. | 95 |
| | Women students | .. | .. | 24 |
| | | | | 119 |
| | | Percentage | .. | 14·7 |

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து, 14 சதவீதம் தான் என்று தெரிகிறது. சர்க்காரிலே 16 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தும், 2 சதவீதம் குறைந்ததற்குக் காரணம் போதிய மாணவர்கள் வரவில்லையா அல்லது வந்தவர்களைத் தகுதியில்லை என்று தள்ளிவிட்டார்களா என்பதை அறிவிக்க முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது கமிட்டியினுடைய அபிப்பிராயம். அவர்கள் செய்ததற்கு நான் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

திரு. கோ. சி. மணி : அமைச்சர் அது கமிட்டியினுடைய அபிப்பிராயம் என்று சொன்னார்கள். கமிட்டியையாவது இது வரை அரசாங்கம் ஏன் கேட்கவில்லை? இனியாவது கேட்டு முடிவைத் தெரிவிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது கமிட்டி செய்கிற காரியம். அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. கமிட்டி என்று ஏற்படுத்திவிட்டால், முழுக்க முழுக்க அவர்கள் எந்த முறையைக் கையாள்கிறார்களோ அப்படித்தான் செய்கிறார்கள்.



6th November 1965]

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் 2 சதவிகிதம் குறைந்திருக்கிறது, அதற்குக் காரணம் என்ன என்று கனம் அங்கத்தினர் திரு. பாலகிருஷ்ணன் கேட்டதற்கு, அது கமிட்டியார் அபிப்பிராயம் என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். கமிட்டியார் ஒதுக்கப் பட்ட இடங்களையே கொடுக்கவில்லையென்றால்கூட அரசாங்கம் கேட்காமல் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அரிஜனங்களுடைய பங்கு 16 சதவிகிதம் குறையவில்லை. டோடல் பர்செண்டேஜில், மென் அண்ட் விமென் ஸ்டூடெண்ட்ஸ் எத்தனை பர்செண்ட் என்று கேட்டதற்கு, விவரம் கொடுத்திருக்கிறது.

* 327 Q.—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to change the present system of selection of students for admission to the Medical Colleges in the State;

(b) if so, the details thereof; and

(c) whether there is any proposal to hold interviews of the candidates in three centres in the State instead of Madras City alone?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) to (உ) இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குச் சேர்க்கும் முறை சரியில்லை; காரணம் ஒரே மாவட்டம், ஒரே ஜாதியைச் சேர்ந்த மாணவர் இருவரில், ஒருவர் அதிகமான மார்க், அதாவது கிரேடு, டபிள் டிஸ்டிங்ஷன் வாங்கினார். அவர் புறக்கணிக்கப்படுகிறார். இப்படி குறைந்த கிரேட் வாங்கிய மாணவன் தேர்ந்தெடுக்கப்படுவதால் hidden talent- -ஐ கண்டு பிடிக்கமுடியாமல் போகிறது. அதனால் 'பொலிடிகல் புல்' 'இன்ஃப்ளுயன்ஸ்', 'மணி' இவையெல்லாம் விளையாடுவதாக, பலர் சந்தேகிக்கிறார்கள். ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகாவது, தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்களின் பெயரையும், அவர்களுடைய கிரேடு, மதிப்பு எண்ணையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் வெளியிடும்போது, அந்தப் பட்டியலில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கிரேடு, மார்க் மாத்திரம் எடுத்துக்கொள்ளுவதில்லை. இண்டர்வ்யூவில் அவர்களுடைய பர்ஃபாமன்ஸ் எப்படி இருக்கிறது, மெரிட், அவர்களுடைய உடல் கூறு, இவை எல்லாவற்றையும் பார்த்துத்தான் எடுக்கிறார்கள். அதிகப்படியான கிரேடு மட்டும் பெற்ற எல்லா மாணவர்களையும் ஸாடிஸ்ஃபை பண்ண முடியாது. தகுதியுள்ளவர்களை எடுக்க, இண்டர்வ்யூவில் அவர்களுடைய பர்ஃபாமன்ஸ்

[6th November 1965

எப்படியோ அதைப் பார்த்து கமிட்டி செய்கிறது. கமிட்டி என்று ஏற்படுத்திவிட்டு, அதன் மேல் தப்பாகச் சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல என்பதை சொல்ல விரும்புகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்பொழுது ஜனத்தொகை அடிப்படையை வைத்து இந்த ஸ்தானங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதற்குப் பதிலாக அந்தந்த ஜில்லாவிலே எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வைத்தியக் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்ப்பது பற்றி அரசாங்கம் திட்டத்தைத் திருத்தியமைக்குமா? ஜனத்தொகை அடிப்படையை வைத்து ஸ்தானங்கள் ஒதுக்கும் முறை அவ்வளவு நல்லது அல்ல என்பதை அரசாங்கம் உணருமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இப்பொழுது இருக்கிற முறைதான் நல்ல முறை. எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைப் பிரகாரம் வைத்தியக் கல்லூரிகளுக்கு மாணவ, மாணவிகளை எடுப்பது என்றால் இன்னும் கஷ்டமாகப் போய்விடும்.

### சேலத்தில் மருத்துவக் கல்லூரி

*328 கேள்வி—திரு. ம. கமலநாதன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சேலத்தில் புதிதாக மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும் திட்டக் குறிப்பை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளது.

திரு. ஆ. துரையரசன்: அவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழகத்தில் எத்தனை மருந்துவக் கல்லூரிகளைத் திறக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று அறியலாமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** நான்காவது திட்ட காலத்தில் திருச்சி, கோயமுத்தூர், சேலம் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதெல்லாம் முன்பு ஏற்பாடு செய்யப்பட்ட விவரம். இப்பொழுது நெருக்கடி நிலையிலே இதெல்லாம் மீண்டும் ஆலோசனை செய்யவேண்டிய விஷயமாக இருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, முக்கியமான தேவைகளைப் பொறுத்த வரையில், நெருக்கடி நிலை கொஞ்சம் தளர்த்தப்பட்டு, இவைகளெல்லாம் கவனிக்கப்படும் என்று முதல் அமைச்சர் பேசிய நேரத்தில் குறிப்பிட்டார்கள். அந்த வகையில், மிகப் பின்தங்கிய சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதில் முதல் இடம் அளிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?



6th November 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நெருக்கடி நிலையையொட்டிக் கோவைப் பிரமுகர்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். அடுத்த ஆண்டிலே மருத்துவக் கல்லூரியை அமைக்கவேண்டுமென்றால், குறைந்தபட்சமாக 25 லட்ச ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தால் நாங்கள் முதல் ஆண்டிலேயே மருத்துவக் கல்லூரியைக் கோவையில் தொடங்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன். அம்மாதிரி நான் சேலத்திலே எதிர்பார்க்க முடியாது. அது தான் நிலைமை.

திரு. ம. கமலநாதன்: இரயில்வே செஸ் நிதியிலுள்ள 25 லட்சம் ரூபாயை மருத்துவக் கல்லூரிக்காக நாங்கள் ஒதுக்கி வைத்துவிட்டோம். பஞ்சாயத்து யூனியனுடைய சில்லறை வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதை விட, மருத்துவக் கல்லூரியைத் துவக்க அந்தத் தொகையைப் பயன்படுத்தி, அதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதில் பயன் இல்லை. இரயில்வே செஸ் பணத்தைப் பற்றி முன்பே முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கிராமங்களில் எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியிருக்கின்றன. அவற்றுக்காக அந்தத் தொகை ஒதுக்கப்படவேண்டும்.

### "நர்சுகள்" பயிற்சி

*329 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) மருத்துவத் தாதிகள் (Nurses) தங்களுடைய பயிற்சிக் காலத்திலும், கட்டாய சேவைக்காலத்திலும் திருமணம் செய்துக்கொள்ளக்கூடாது என்று கட்டுப்பாடு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதனை தளர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) செவிலியர் (Nurses) தங்கள் பயிற்சிக் கால அளவாகிய மூன்றரை ஆண்டுக் கால அளவிலும் அவர்கள் ஒப்பந்தப் பணிக்காலத்தில் முதல் ஆறு மாதக் கால அளவிலும், திருமணம் செய்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இக்கால அளவில் மருத்துவச் செவிலி ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவர் முன் அறிவிப்பு இன்றி பயிற்சிப் பள்ளியை அல்லது செவிலிப் பணியை விட்டுவிட்டதாகக் கருதப்படுவார்.

(இ) இல்லை.

திரு. வே. [redacted] ஆறு மாதம் என்று இருப்பதை [redacted] உண்டா? அல்லது, குறைப்பதற்கு [redacted] எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆறு மாத காலத்தை உயர்த்துவதற்கோ குறைப்பதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் ஏதும் இல்லை.

• • • • •

உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம்

*330 கேள்வி.— திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 1964-ம் ஆண்டில் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Total number of persons convicted—3,512. Number of persons convicted districtwise is as follows :—

| *Name of district.* | *Number of persons.* |
|---|---|
| Madras .. .. .. .. .. | 1,355 |
| Chingleput .. .. .. .. .. | 192 |
| Coimbatore .. .. .. .. .. | 344 |
| Madurai .. .. .. .. .. | 178 |
| North Arcot .. .. .. .. .. | 128 |
| The Nilgiris .. .. .. .. .. | 91 |
| Ramanathapuram .. .. .. .. | 121 |
| South Arcot .. .. .. .. .. | 192 |
| Salem .. .. .. .. .. | 201 |
| Thanjavur .. .. .. .. .. | 276 |
| Tiruchirappalli .. .. .. .. .. | 159 |
| Tirunelveli .. .. .. .. .. | 212 |
| Kanyakumari .. .. .. .. .. | 63 |
| Total .. | 3,512 |

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தது தவிர, இந்தியப் பாது காப்புச் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அம்மாதிரி ஏதாவது உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. வை. சங்கரன் : மஞ்சளுக்கு நிறம் கொடுப்பதற்காக லெட் அசிடேட் என்ற பொருளைச் சேர்ப்பதாகவும், நாட்டுச் சர்க்கரைக்கு நிறம் கொடுப்பதற்காக ஏதோ ஒரு பொருளைச் சேர்ப்பதாகவும் தெரிகிறது. 'ப்ளேஸ் ஆஃப் ஆரிஜின்' இலேயே

**** Expunged as ordered by the Chair.





இத்தகைய கலப்படங்கள் செய்யப்படுவதாகத் தெரிகிறது. அப்படியிருக்க, சில்லறை வியாபாரிகளுடைய கடைகளில் புகுந்து, அவர்களைப் பிடித்துச் சென்று, ஆறு மாதம், எட்டு மாதம் சிறைத் தண்டனை கொடுக்கப்படுகிறது. இதுபற்றி வியாபாரிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்திருக்கிறதா? அது பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரீடெய்ல் டீலர்களிடமிருந்து அடிக்கடி விண்ணப்பம் வருகிறது. அவர்களை அடிக்கடி 'அரெஸ்ட்' செய்கிறார்கள் என்ற புகார் வருகிறது. ஹோல்சேல் டீலர்சிடமிருந்து மஞ்சள் வாங்குவதற்கு முன்பே எக்ஸ்ட்ரா கலர் கொடுப்பதற்காக லெட் அசிடேட் அதிகமாகக் கலப்படம் செய்யப்படுகிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கும் காரணத்தால்தான், ஹோல்சேல் டீலர்சிடமிருந்து 'வாரண்டி' வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும் என்று ரீடெய்ல் டீலர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். அதை வாங்கி வைத்திருக்க ரீடெய்ல் டீலர்ஸ் மறுப்பதன் காரணமாகத்தான், அவர்களிடமுள்ள பொருள்களில் கலப்படம் ஏற்படவும், அதன் காரணமாக அவர்கள் தண்டிக்கப்படவும் நேரிடுகிறது.

திரு. க. ர. நல்லசிவம் : மஞ்சளைப் பொறுத்த வரையில், மஞ்சள் பயிரிடும் நிலத்திலேயே ஏதோ கலப்படம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மஞ்சள் நிலத்திலிருந்து நேரடியாக வரவேண்டும். சோதனை செய்து பார்க்கும்போது, இந்தப் பொருள்கள் அதிகமாக இருப்பதாக சமீபத்தில் தெரிவிக்கப்பட்டது. மஞ்சள் பயிரிடும் நிலத்தையும் சோதனை செய்து பார்த்து, எந்த நிலையில் கலப்படம் செய்யப்படுகிறது என்பதை அரசாங்கம் கண்டுபிடிக்கவேண்டும். குற்றம் செய்யாத வியாபாரிகளை கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பிடிக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நிலத்திலே உற்பத்தியாகும் பொருளாக இருக்கும் காரணத்தால், உற்பத்தியிலேயே கொஞ்சம் 'லெட் கன்டென்ட்' அதிகமாக இருக்கிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்த பிறகு, அதை ஆராய்ந்து பார்த்தோம். லெட் கன்டென்ட் அதிகப்படியாக இருந்தால் எடை அதிகமாக இருக்கும் என்பதற்காக ஒருவித உரம் போடப்படுவதாகத் தகவல் கிடைத்து, அத்தகைய உரம் போடுவதைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உரம் போடும் போதே, லெட் கன்டென்ட் அதிகமாகப் போகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. வை. சங்கரன் : இது மாதிரி பொருள்களைப் பொறுத்த வரையில் ப்ளேஸ் ஆஃப் சோர்ஸிலேயே கலப்படம் செய்யப்படுகிறதா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, சில்லரை வியாபாரிகளை சோதித்து நல்ல பொருளாக வாங்குவது என்பது

முடியாத காரியம். சில்லரை வியாபாரிகள் செய்யாத ஒரு குற்றத்திற்கு, அவர்களை அக்கிரமமாக, அநியாயமாகத் தண்டிப்பதை விட்டு, எங்கு உற்பத்தியாகிறதோ அந்த இடத்திலேயே கலப்படத்தைக் கண்டுபிடிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நான் முன்பே சொன்னது போல், மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லரை வியாபாரிகள் சரக்குகள் வாங்கும்போது, 'காரண்டி' வாங்கிக் கொள்ளலாம். அதில் ஒன்றும் கஷ்டம் இல்லை. அம்மாதிரி வாங்குவதற்குச் சில்லரை வியாபாரிகள் மறுக்கிறார்கள். மறுக்காமல், அதை வாங்கிக்கொண்டால் சில்லரை வியாபாரிகளுக்கு எந்தத் தொல்லையும் ஏற்படாது.

30 **திரு. ஏ. பி. ஸி. வீரபாகு :** உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஹோல்சேல் வியாபாரிகளின் மீதுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாக இன்பார்மலாகவாவது உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அடுத்த மாதத்தில் டிரேட் இன்டரஸ்ட்ஸ் மீட்டிங் நடக்க இருக்கிறது. அதிலே சம்பந்தப்பட்டவர்கள் கலந்து விவாதித்து என்ன முடிவுக்கு வருகிறார்கள் என்று பார்த்து நியாயமான அடிப்படையில் ஒத்துழைக்கத் தயாராக இருந்தால் இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொள்வதைத் தளர்த்த முடியும், எந்த நிலையில் வைத்துக் கொண்டால் போதும் என்று முடிவு எடுக்க சாத்தியமாக இருக்கும்.

**திரு. வை. சங்கரன் :** அந்த மகாநாடு கூடி, முடிவு எடுக்கும் வரையில் தற்போது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை நிறுத்தி வைக்க சர்க்கார் உத்தேசிக்குமா ? ஏற்கனவே மதுரை முனிசிபாலிட்டியில் பல சில்லரை வியாபாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டு சில முடிந்து விட்டன. இன்னும் பல பெண்டிங்காக இருக்கின்றன. ஆகவேதான், அரசாங்கம் இது பற்றி முடிவு எடுக்கும் வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது இருக்க உத்தரவிடுவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட கேஸ்களில் அரசாங்கம் தலையிடுவதற்கு இல்லை. நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்பது போல குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட கேஸ்களில் அரசாங்கம் எப்படித் தலையிட முடியும் ?

**Mr. SPEAKER :** I think the House has no objection to extend the question hour till the remaining questions are disposed of.



### செய்தித் தணிக்கை

*** 331 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படும் செய்திகளை தணிக்கை செய்வதற்கான புதிய ஏற்பாடுகள் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. மாதவன் :** தற்போது பத்திரிகைகளில் வரும் செய்தியைப் பரிசீலிக்க, ஊழல் இருந்தால் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க என்ன வகை செய்யப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** செய்தி விளம்பரத் துறையில் ஓர் அதிகாரி இருக்கிறார். ஜில்லா அளவில் கலெக்டர் இருக்கிறார். இன்னும் சி.ஐ.டி. பிராஞ்சை சேர்ந்தவர்கள் பரிசீலனை செய்து வருகிறார்கள். போலீஸ் கமிஷனர் அவர்களும் கவனம் செலுத்தி வருகிறார்.

### பஞ்சாயத்துத் தேர்தல்கள்

*** 332 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடைபெற்ற பஞ்சாயத்து தலைவர் தேர்தல்களின்போது ஆட்கள் கடத்திச்செல்லப்பட்டார்களென வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை வழக்குகள், எங்கெங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) ஆட்களைக் கடத்திச் சென்றதாக சுமார் 50 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ள போலீஸ் நிலையங்களின் பெயர்களுடன் மாவட்டவாரியான தகவல்கள் அடங்கிய விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த வழக்குகள் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்று இருக்கின்றன. பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் பதிவு செய்யப்படாத சம்பவங்களும் அநேக இடங்களில் இருக்கின்றன. இதற்குக் காரணமே உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாக வைத்திருக்கும் முறைதான். அதை

---

* 431–433-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

மாற்றி பொதுமக்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களின் போது ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டார்களென எத்தனை வழக்குகள், எங்கெங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதுதான் கேள்வி. அதற்கான விவரம் கொடுத்துள்ளேன்.

இரண்டாவதாக, எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்ல முடியாது. கோயம்பத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் இதுபோல எந்த விதமான வழக்கும் பதிவு ஆகவில்லை.

மூன்றாவதாக, தற்போதுள்ள தேர்தல் முறையை எந்தவிதமாகவும் மாற்றுவதாக இல்லை.

**திரு. செ. மாதவன் :** இப்படிப்பட்ட ஆள்தூக்கும் படலம் இருக்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். கனம் காமராஜ் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். அவை இரண்டுமாவது பரிசீலனை செய்யப்பட்டனவா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அந்த இரண்டு பேர்களுடைய கருத்தும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இப்போதுள்ள முறையை தற்போது மாற்றுவதாக இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரப்படியே 50 பேர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள். இப்படிக் கடத்திச் செல்லப்பட்டவர்கள் பத்திரமாக பிறகாவது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை என்றால் எத்தனை பேர் இன்னும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்கிற விவரம் தெரிந்து கொள்ள முடியுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அந்த விவரம் என்னிடம் இல்லை.

**திரு. கோ. சி. மணி :** கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் மதுரையைப் பொறுத்த வரையில் 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, அவை எந்த, எந்த இடத்தில் என்கிற விவரம் இல்லை. அதற்குக் காரணம் போலீஸ் இலாகா அந்தத் தகவலை அறிவிக்கவில்லையா ? நமது அரசாங்கமே அந்த விவரத்தைக் கொடுக்கவில்லையா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கலெக்டரிடமிருந்தே அந்தத் தகவல் வரவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றுவதற்கில்லை என்றாலும் உறுப்பினர், தலைவர், பெருந்தலைவர் தேர்தல்களுக்கிடையே உள்ள நாட்களைக் குறைத்து அவற்றை அடுத்தடுத்து நடைபெறச் செய்தால் ஆட்களைக் கடத்தும் தொல்லை குறையுமல்லவா ?



**கனம் திரு. கோ. பூவராகன் :** இது கேள்வி இல்லை. யோசனை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, தலைவர் தேர்தலுக்குள் உறுப்பினர்களைக் கடத்தும் தொல்லை துரதிருஷ்டமானதாக இருக்கிறது. தற்போதுள்ள தேர்தல் முறையை உடனடியாக மாற்றாவிட்டாலும் பின்னாலாவது மாற்றுகிற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இது பின்னால் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

* 333 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) அண்மையில் நடைபெற்ற ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியப்புத் தலைவர்கள், தேர்தல்களின்போது வன்முறைகள் கையாளப்பட்டனவென்று புகார்கள் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், தேர்தல் முறைகளை மாற்றியமைக்கும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலின்போது சில வன்முறைச் செயல்கள் நடந்ததாக அரசாங்கத்திற்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலில் அத்தகைய அறிக்கைகள் எவையும் பெறப்படவில்லை.

(இ) இல்லை.

**திரு. செ. மாதவன் :** இந்த வன்முறைச் செயல்கள் நடைபெற்றதற்கு இடமாற்றம் ஒரு காரணம். இப்போதுள்ள விதிகளின்படி தேர்தல் எந்த இடத்தில், எந்தத் தேதி நடைபெறும் என்பதாக முதலில் அறிவிக்கப்படக் கூடும். அந்த இடத்தில் அந்தத் தேதி தேர்தலை நடத்தாமல் ஒத்திவைத்துவிட்டால்—அப்படி ஒத்தி வைக்க அதிகாரம் இருக்கிறது—பிறகு எந்தத் தேதியில் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்க விதி இருக்கிறதே தவிர அதில் இடம் குறிப்பிடப்பட வேண்டும் என்று இல்லை. அதனால்தான் வன்முறைச் செயல்கள் நடைபெற இடமேற்படுகிறது. தேதியும், இடமும் அறிவிக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எந்தத் தேதி, எந்த இடத்தில் தேர்தல் நடைபெறும் என்பதாக தலைவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதன்படித்தான் நடைபெற்று வருகிறது.

**திரு. செ. மாதவன் :** முன்னாலே அதுபோல அறிவிப்புக் கொடுத்துவிட்டாலும் அந்த இடத்தில் அன்றைக்குத் தேர்தல் நடைபெறாவிட்டால், வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தேர்தலை மாற்றுகிறபோது தேதி அறிவிக்கப்படுகிறதே தவிர, இடம் அறிவிக்கப்படுவதில்லை

[6th November 1965

**கனம் சபாநாயகர்** : அப்படியா இருக்கிறது ? இடம் அறிவிக்கப் படாமல் தேதி தெரிந்து என்ன பயன் ?

**திரு. செ. மாதவன்** : அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, தேர்தல் மாற்றப்படுகிறபோது தேதியும், இடமும் அறிவிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு போடுவார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன்** : எப்போது, எந்த இடத்தில் தேர்தல் நடைபெறும் என்பது எல்லோருக்கும் அறிவிக்கப் படுகிறது.

* 334 Q.—Sri S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) the number of women elected as Panchayat Union Chairmen;

(b) the number of women members elected to various Panchayat Boards; and

(c) the number of women Panchayat Board Presidents elected?

The Hon. Sri G. BHUVARAHAN : (a) Nil.

(b) 235.

(c) 24.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்** : தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் களுடைய எண்ணிக்கையைப் பார்த்தால் வேடிக்கையாக இருக் கிறது. பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக ஒருவர் கூட வரவில்லை. பஞ்சாயத்து மெம்பர்களாகவும், தலைவராகவும் குறைந்தவர்களே வந்துள்ளார்கள். ஹரிஜனங்கள் எத்தனை பேர்கள் என்று கேட் டால் ஒன்றும் இல்லை என்றே வரும். ஆகவே, சட்டசபைத் தேர்த லுக்கு ரிசர்வேஷன் இருக்கிற மாதிரி, இவ்விடங்களிலும் தாய்மார் களுக்கும், ஹரிஜனங்களுக்கும் ரிசர்வேஷன் வைக்கிற உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்** : இப்போது இருக்கிற முறையில் ரிசர்வேஷன் இல்லை. அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக் களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் பெண் உறுப்பினரே இல்லை என்றால் ஒரே ஒரு பெண் உறுப்பினரை நாமினேட் செய்து கொள்ள வசதி இருக்கிறது. ஒரே ஒரு பெண்ணாக அமர்ந்து பேசுவதற்குக் கூட துணை இல்லாமல் தவிக்கிற நிலைமையை மாற்றி இரண்டு பெண்களை நியமித்துக்கொள்ள வசதி செய்யப் படுமா?

**கனம் திரு. கோ. பூவராகன்** : சமயத்தில் அந்த இரண்டு பேர்களும் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும் நிலை வரலாம்.



6th November 1965]

* 335 Q.—Sri S. J. RAMASWAMI : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) whether any of the proposed elections to Panchayats in the State have been stayed by orders of the High Court; and

(b) if so, the districtwise details thereof?

**கனம் திரு. கோ. பூவராகன்** : (அ) சுமார் 123 பஞ்சாயத்துக் களில் அந்தப் பஞ்சாயத்து முழுவதிலுமோ, அந்தப் பஞ்சாயத்தின் சில வட்டங்களிலோ தேர்தல்களை நிறுத்திவைக்கும்படி உயர் நீதி மன்றம் உத்தரவிட்டது. பின்னர் அவைகளில் சுமார் 108 பஞ்சா யத்துக்களில் தேர்தல்களை நிறுத்திவைக்கும் உத்தரவுகளை உயர் நீதிமன்றம் ரத்துசெய்துவிட்டது.

(இ) சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் காரணமாய் தேர்தல்கள் நிறுத்திவைக்கப்பட்ட பஞ்சாயத்துக் களின் (மாவட்ட வாரியான) பட்டியலைக் காட்டும் ஒரு விவர அறிக்கை a சபையில் வைக்கப்பட்டுள்ளது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : தலைவர் அவர்களே, நிறுத்தி வைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில் எல்லாம் எப்போது தேர்தல் நடைபெறும் ? அங்கே தேர்தல்களை துரிதமாக நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன்** : ஸ்டே நீக்கப்பட்ட பஞ்சாயத்து களின் தலைவர், உப தலைவர் தேர்தல்களை உடனடியாக நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. நெருக்கடி நிலை காரணமாக அங்கத் தினர்கள் தேர்தல் என்றால் ஒத்திவைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : தலைவரவர்களே, இன்னும் பல பஞ்சாயத்துக்களிலே மெம்பர்கள் தேர்தலே நடத்தப்படாமல் இருக்கிறது. பஞ்சாயத்தை வைத்துத்தான் நாம் சகல காரியங் களையும் செய்கிறோம். கிராம மக்களுடைய குறைகளைப் போக்கக் கூடிய அந்த அளவிலே பஞ்சாயத்துக்கள் இருப்பதினால், இந்த எமர்ஜன்சி காரணத்தை அங்கே புகுத்தாமல் இதை மீண்டும் பரிசீலனை செய்து தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. கோ. பூவராகன்** : பல பஞ்சாயத்துக்கள் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. கோர்ட்டிலே ஸ்டே செய்து, பின் ஸ்டே வெக்கேட் செய்த பஞ்சாயத்துக்கள்தான் அவ்வாறு இருக்கின்றன. இன்னும் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தாமல் இருப்பதைப்பற்றி விவரமாக கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

**திரு. செ. மாதவன்** : இந்தப் பிரச்னையைப்பற்றிப் பரிசீலிக்க அரசாங்கம் தனிக்குழுவொன்றை நியமித்து அது பரிசீலனை செய்தது. டிபார்ட்மெண்டிலே ரூல்ஸ் ஃப்பிரேம் பண்ணும் பொழுது நோடிபிகேஷன், நோடிபிகேஷன் ஆகத் தனித்தனியாகப் போடுகிறார்கள். அப்படியில்லாமல் தொகுப்பாக ரூல்ஸ் போட வேண்டும். இதைப்பற்றி சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி

---

a 433-436-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[6th November 1965

யிலே கூட தெரிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்னைக்கு தொகுப்பாக ரூல்ஸ் போடவில்லையென்பது ஒரு காரணம் என்றும், பைஃபர்கேஷன் பிரின்சிபிளை சரியாகப் பின்பற்றவில்லையென்பது மற்றொரு காரணம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே, அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரிட் பெட்டிஷன்கள் பல போடப்பட்டன. இரண்டு ரிட் பெட்டிஷன்களைத் தவிர மற்ற பெட்டிஷன்கள் எல்லாம் டிஸ்மிஸ் செய்யப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** டிஸ்மிஸ் செய்யப்பட்டவையெல்லாம், 'பஞ்சாயத்துத் தேர்தலிலே வெஸ்டெட் ரைட் கிளெய்ம் பண்ணக் கூடாது' என்ற ஜெனரல் பிரின்சிபிளை வைத்து டிஸ்மிஸ் செய்யப்பட்டன. டிபார்ட்மெண்டிலே ரூல்ஸ் பிரேம் பண்ணுவதிலே குறைபாடுகள் இருக்கின்றன, தொகுப்பாக ரூல்ஸ் ஃபிரேம் பண்ணுவதில்லை. அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரிட் பெட்டிஷன் என்பதை எடுத்துக்கொண்டு சொல்லவேண்டாம் என்றுதான் நான் சொன்னேன். ஏனென்றால், ரிட் பெட்டிஷன்கள் எல்லாம் 'மோஸ்ட்லி ஃபிரிவலஸ் பெட்டிஷன்ஸ்' என்ற காரணத்தால்தான் டிஸ்மிஸ் செய்யப்பட்டன. ரிட் பெட்டிஷன்களிலே தவறுகள் இருக்கின்றன, ஆகவே, ரிட் பெட்டிஷன்கள் என்று காட்டி பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTION.

### FAILURE OF CROPS IN KANYAKUMARI DISTRICT

MR. SPEAKER : The hon. Member Sri Kunjan Nadar has given notice of an adjournment motion to discuss the failure of crops in Kanyakumari district. The hon. Member may explain how the matter comes under an adjournment motion.

SRI A. KUNJAN NADAR : Mr. Speaker, Sir, the paddy cultivators of the Kanyakumari district are facing a very pitiable plight due to the failure of the last crop in about 15,000 acres of land in the irrigated area alone—I do not include the rain-fed areas. This failure could have been averted if the Government were vigilant. Of course, I do concede that there was a failure of monsoon. But, Sir, on previous occasions when there was a worst failure of monsoon, the crops did not fail. The worst failure of monsoon we had in recent years, was in 1953. At that time, the water level in Pechiparai and Perunchani dams was below zero. But even then the crops were saved by the then Travancore-Cochin Government by pumping out water by erecting three pumps which



6th November 1965] [Sri A. Kunjan Nadar]

worked for 24 hours. The crops were saved. But this time there was enough water in Pechiparai and Perunchani dams and even below the zero level, there is much water in both these dams. The failure of crops on 15,000 acres means that we are losing about $2\frac{1}{2}$ lakhs of bags of rice. This is precious to the country especially at the present time. We were expecting a bumper crop in the Kanyakumari district. Sir, another pitiable factor is that this failure occurred when the fruits of the hard labour of the ryot were about to be enjoyed. If water was made available for only one week, certainly there would not have been any failure. There were representations by the public for pumping out water but it was not heeded to. Sir, the Prime Minister has rightly called our attention to the more farms which are more and more required for the present-day India. He has even called us to starve. But, Sir, when $2\frac{1}{2}$ lakhs bags of rice are to be lost the Government and officers were just enjoying it. It is callous and criminal on the part of the Government to have adopted such an indifferent attitude. I ask one question : Was any effort made on the part of the Government to have these crops ? In future what are they going to do to avoid such situations ? Even in regard to the second crop, I have got my own fears in view of the present situation. Are they going to give any relief to the ryots? To cultivate these 15,000 acres of land means spending more than Rs. 30 lakhs by the ryots. They must be given immediate and adequate relief by way of tax concessions, grants and loans.

MR. SPEAKER : Let the hon. Member finish his speech soon.

SRI A. KUNJAN NADAR : I wish to have answers to these two questions : Are the Government going to give any relief to the ryots? Also is there any scheme to avoid such failures in future?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, மழை பெய்யாததற்கு அவசரப் பிரேரணை கொண்டுவரவில்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள். டி.சி. கவர்ன்மெண்ட் செய்ததையெல்லாம் தமிழ்நாடு அரசாங்கம் செய்யவில்லை என்பதைப்பற்றியும் அவசரப் பிரேரணை கொண்டுவருவதற்கில்லை. அல்லது, இந்த அரசாங்கம் 'கேர்லெஸ்' ஆக இருந்தது என்றும் இதுமாதிரி அவசரப் பிரேரணை கொண்டுவர முடியாது. ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல. அரசாங்கம் ஏதாவது செய்யத் தவறிவிட்டார்கள் என்றால், அதைப்பற்றி வேறு சந்தர்ப்பத்தில் குறை கூறலாம். அப்பொழுது அதற்கு பதில் சொல்லிக்கொள்ளலாம். ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. The hon. Member could have called the attention of the Hon. Minister under Rule 41 or given notice of a short notice

question on that matter. Anyway, the hon. Member had his say in the matter. I withhold my consent to the hon. Member to raise this matter as an adjournment motion.

### III.—STATEMENT BY MINISTER FOR FOOD *RE* CROP SITIUTION IN KANYAKUMARI DISTRICT.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக தாங்கள் அனுமதித்தால், நிலைமையை விளக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

MR. SPEAKER : Yes, the Hon. Minister may make the statement.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் நடந்ததையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளாத காரணத்தால்தான் இந்த அட்ஜார்ன்மெண்ட் மோஷன் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த ஜில்லாவில் பருவ மழை தவறிப்போன உடனே, அரசாங்கம் ஒன்றும் செய்யாமல் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதுபோல் சென்ற வருஷமும், இந்த வருஷமும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற அணைகளிலே உள்ள தண்ணீரை இறைக்க வேண்டுமென்பதற்கான முயற்சியில், சூப்பரின்டென்டிங் எஞ்ஜினீயர் நிலையிலே மட்டுமல்ல, சீஃப் எஞ்ஜினீயரிங் கூட அங்கே போய் சில தினங்கள் தங்கியிருந்து இந்த முயற்சியிலே ஈடுபட்டிருந்தார்கள். நம்முடைய அரசாங்கத்தினுடைய கையிலே தண்ணீரை இறைக்கக்கூடிய பெரும் ராட்சத இயந்திரங்கள் இல்லாத நிலைமையிருந்தபோதிலும், பக்கத்திலே இருக்கிற கேரளா அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, கொச்சியிலிருந்து ராட்சத இயந்திரங்களையெல்லாம் கூட அவர்கள் அனுப்புவதற்குத் தயாராக இருந்தார்கள். ஆனால், அதையெல்லாம் இங்கே கொண்டுவந்து பொருத்தி, அதன்மூலம் தண்ணீரை இறைப்பதற்குப் போதுமான நேரம், சந்தர்ப்பம் இல்லாத காரணத்தாலும், தண்ணீரை இறைத்தபோதிலும் அங்கேயுள்ள ஆயக்கட்டுகள் எல்லாவற்றையும் காப்பாற்றிவிட முடியுமா என்பது சந்தேகத்தில் இருந்த காரணத்தாலும் மேற்கொண்டு முயற்சியெடுக்க முடியவில்லை. இதைத்தவிர, இந்த டாம்களிலிருந்து தண்ணீரை இறைப்பதினால், ஒரு பகுதி தீய்ந்து போகாமல் காப்பாற்றப்பட்டாலும்கூட, கரையையொட்டி இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் 'விதர்' ஆகிவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் எல்லோரும் அந்த ஜில்லாவிலே என்ன என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைப்பற்றி நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உதவிசெய்வதற்கு தன்னால் முடிந்ததையெல்லாம் செய்வதற்கு அரசாங்கம் ஒருபொழுதும் பின்தங்கியது கிடையாது. அதோடு மட்டுமல்லாமல் இந்த வருஷம் தொடர்ந்து விவசாயம் செய்யத் தண்ணீரை எந்த அளவுக்குப் பாதுகாத்துக் கொடுக்க





வேண்டுமோ, அதற்கு வேண்டிய தீவிர முயற்சியில் சீஃப் எஞ்ஜினீயரிங் இலாகா ஈடு பட்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் நல்ல மழை பெய்யத் தொடங்கி இருக்கிறது. ஆகையினால், அந்த ஜில்லாவில் விவசாயம் இந்த ஆண்டு நல்ல முறையில் நடைபெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

### IV—CALLING ATTENTION TO NON-CULTIVATION OF LANDS IN MADURAI AND RAMANATHAPURAM DISTRICTS.

**திரு. செ. மாதவன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பருவ மழை தவறியதன் காரணமாக, வைகை, பெரியாறு நீர்ப்பாசன முறைகளின் கீழ் வரும் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெருவாரியான நிலம் சாகுபடி செய்யப்படாமலிருப்பதும், மேற்படி அணைக்கட்டுகளிலிருந்து சாகுபடிக்காகத் தண்ணீர் விடுவதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, the hon. Member has referred to the non-cultivation of a vast extent of land in Madurai and Ramanathapuram districts covered by the Vaigai and Periyar Irrigation Systems due to the failure of monsoon and regarding letting out of water from those anicuts for cultivation.

The Periyar Reservoir serves the ayacut in the Cumbum Valley and the Periyar Ayacut. The Vaigai Reservoir Project contemplates bringing under cultivation a new extent of 22,818 acres (under Tirumangalam Main Canal and Periyar New Extension) besides stabilising supplies to Vaigai Old Ayacut. The normal dates for allowing supplies to the Periyar Old Ayacut and new area under Vaigai Reservoir Project are as follows :—

*Periyar ayacut :*

(1) Double crop area in Cumbum Valley and Periyar Delta :—1st June.

(2) Single crop are in Cumbum Valley and Periyar ayacut —15th August.

*Vaigai Reservoir Project :* —

(3) Tirumangalam Main Canal—1st June.

(4) Periyar New Extension area—15th September.

For Vaigai Old ayacut under Vaigai river, the natural flows of Vaigai river after meeting the requirements of the Vaigai Old ayacut will be stored in the Vaigai Reservoir for allowing supplies as and when required in consultation with the Collector of Ramanathapuram district.

[Sri V. Ramaiah] [6th November 1965

This year, supplies for the Periyar Ayacut and Cumbum Valley for the first crop on the double crop lands could not be allowed on the normal date as the storage position in both the Periyar and Vaigai Reservoirs was poor. An examination of the past records showed that the South-West Monsoon had set in 28 out of 34 years before 30th June and in all years before 10th July. When compared to last year (when supply was allowed on 15th June), the total storage in Periyar Reservoir and Periyar credit in Vaigai Reservoir on 1st June 1965 was more. On the expectation that the South-West Monsoon would set in before 10th July, the double crop area was opened for irrigation on 10th June 1965. As the minimum combined gross storage of 10,000 M.cft. in Periyar Reservoir, Periyar Credit in Vaigai Reservoir and in the tanks in Periyar ayacut was not obtained, as prescribed in the rules for regulation, the Tirumangalam Main Canal of Vaigai Reservoir Project was not opened for irrigation.

Contrary to the expectations, the South-West Monsoon this year has been a failure. The inflows realised during the period are the worst on record since the Periyar Reservoir came into operation and the Reservoir also touched the lowest level ever recorded. Hence, regulation had to be done carefully with the release from the Periyar Reservoir and the Periyar Credit in Vaigai Reservoir. Except for a short spell of 5 days (16th to 20th) in July 1965, the inflows realised in the Periyar Reservoir have been far below the normal requirements of the Periyar delta. This would show that the irrigation has been carried on with the inflows realised and the meagre storage in Periyar Reservoir.

The maximum level reached in Periyar Reservoir this year was only 12.9 feet on 22nd July 1965 with a corresponding storage of 2,069 M.cft. against the F.R.L. capacity of 10,510 M.cft. Continuous supply was allowed in Periyar Main Canal till 4th September 1965 by depleting the Periyar and Vaigai Reservoirs. An internal turn system was also adopted by the local officers to send down equitable supply to all the area with the meagre available supplies. After 5th September 1965, considering the low storage obtained in both the reservoirs and as the entire crop had been transplanted, only the wettings required were arranged for, by closing channels in Cumbum Valley for 2 or 3 days in 10 days and supplies to Periyar ayacut were allowed for about 4 days in 10 days. Similar wettings were allowed up to 24th September 1965 as this was the crucial period. Thereafter the Periyar ayacut and Cumbum Valley received good rainfall for a week and much difficulty was not experienced in securing supply adequate to save the standing crops. The first crop was thus saved by judicious regulation in the irrigated area.

Inasmuch as supply to the first crop area itself had to be done with great care and judicious regulations and with reference to the inflows realised, the supplies to the single crop area of Periyar Ayacut, scheduled to be given on 15th August was postponed.



6th November 1965] [Sri V. Ramaiah]

Similarly supplies to the Periyar New Extension area of Vaigai Reservoir Project was also postponed beyond 15th September as the minimum combined gross storage of 10,000 M.cft. in Periyar Reservoir, Periyar credit in Vaigai Reservoir and storage in tanks was not obtained.

In view of the fairly good inflows realised in Periyar and Vaigai Reservoirs in the second fortnight of October 1965, supplies are now being allowed to Periyar Ayacut for raising a short term crop from 26th October 1965 onwards.

As regards Vaigai Old Ayacut, it was found on inspection that supplies might be necessary for about 19,000 acres already under cultivation and for about 30,000 to 40,000 acres to be cultivated with seedlings already grown. Accordingly release for this ayacut was allowed from 15th October 1965 and this will be continued up to about 7th November 1965.

Every step has been taken by Government to distribute the available supplies to the maximum area, in spite of the fact that the South-West Monsoon has been a failure this year and worst on record.

## V.—ANNOUNCEMENT.

### (1) The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965.

Mr. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965.

## VI.—GOVERNMENT BILLS.

### (1) The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965.

The Hon. Sri R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I move for leave to introduce the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965.

Mr. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1965."

The motion was put and carried, and leave was granted.

The Hon. Sri R. VENKATARAMAN: Sir, I introduce the Bill.

Mr. SPEAKER: The Bill is introduced.

[6th November 1965

### (2) THE MADRAS PRESERVATION OF PRIVATE FORESTS (CONTINUANCE) BILL, 1965.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, I move for leave to introduce the Madras Preservation of Private Forests (Continuance) Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leve be granted for the introduction of the Madras Preservation of Private Forests (Continuance) Bill, 1965."

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (3) THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (SECOND AMENDMENT) BILL, 1965 (L.A. BILL No. 34 OF 1965).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1965[a] (L.A. Bill No. 34 of 1965) be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு சிறிய திருத்த மசோதா. அறநிலையப் பாதுகாப்பு இலாகாவுக்கு மனுக்கள் கொடுக்கிறவர்கள் 'கோர்ட்ஃபீ' ஸ்டாம்ப் ஒட்ட வேண்டுமென்றிருக்கிறது. இந்தச் சட்டத்திலே இந்த ஸ்டாம்ப் விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. முன்பு இருந்த சட்டப்படி அதிகமாகக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்போது மற்ற சாதாரணச் சட்டப்படியே அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகிற மனுக்களுக்குக் கொடுக்கப்படுகிற விகிதத்தை விட இந்த விகிதம் குறைவாக இருக்கிறது. அதனால் ஃப்ரிவலஸ் பெட்டிஷன்ஸ் வருகின்றன. ஃப்ரிவலஸ் பெட்டிஷன்களைத் தவிர்க்க வேண்டுமென்பது ஒன்று, இரண்டாவது, இந்த விகிதம் என் குறைவாக இருக்க வேண்டும் என்பது. இது வருமானத்திற்கு உரியதாக இருக்கிறது. மற்றச் சட்டங்கள் படி எவ்வளவு விகிதாசாரம் கோர்ட் ஃபீ ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருக்கிறதோ, அதே விகிதத்திலே இந்த மனுக்களுக்கும் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்பதுதான் திருத்தம். இந்தத் திருத்தத்தைக் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1965 (L.A. Bill No. 34 of 1965) be taken into consideration."

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 5th November 1965.



6th November 1965]

The motion was put and carried, and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir I move— 10-00 a.m.

"That the Madras Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1965 (L.A. Bill No. 34 of 1965) be passed."

The motion was put and carried and the Bill was passed.

### (4) THE MADRAS ELECTRICITY (TAXATION ON CONSUMPTION) AMENDMENT BILL 1965 (L.A. BILL No. 32 OF 1965.)

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965 @ (L.A. Bill No. 32 of 1965) be taken into consideration."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965 (L.A. Bill No. 32 of 1965) be taken into consideration."

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சில புது வரிகள் விதிக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நிதி நிலைமைபற்றிய அறிக்கை மூலம் சபை முன் அறிவித்தார்கள். அந்த அறிக்கையிலே எந்தெந்தத் துறைகளில் புது வரிகள் விதித்து எப்படி ஈடுகட்டவேண்டுமென்பதற்கான விவரங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதை அமுலாக்குகிற முறையில் இப்போது அந்த அந்தச் சட்டங்களுக்கு திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக, எலக்ட்ரிசிடி கன்சம்ஷன் டாக்ஸ் விகிதத்தை நாம் இப்போது உயர்த்துவதற்கு முன் வந்திருக்கிறோம். அந்த விகிதாசாரங்கள் எப்படி உயரும் என்று சொன்னால் பொதுவாக ஹை டென்ஷன் சப்ளைக்கு இப்போது 20 சதவிகிதம் இருப்பது 35 சதவிகிதம் ஆகும். ஹை டென்ஷன் சப்ளையில் நெசவு நூற்பாலைகளுக்கு 30 சதவிகிதம் இருப்பது 40 சதவிகிதம் ஆகும். இது இரண்டையும் எடுத்துக் கொண்டு பார்த்தோமானால் ஹை டென்ஷன் சப்ளை இருக்கிற தொழிற்சாலைகளில் எல்லாம் இந்த மின் சக்திக்காகச் செலவிடப்படுகிற தொகை மிகக் குறைவு. ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய என்னென்ன செலவுகள் ஏற்படுகின்றன என்று பார்க்கிறபோது அதில் ரா மெட்டீரியல்ஸ், லேபர்,

@ Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 4th November 1965.

டிப்ரிசியேஷன் போன்றவை எல்லாம் கணக்குப் பார்த்தால், பொதுவாக ஹை டென்ஷன் உபயோகப்படுத்துகிற இந்தத் தொழிற்சாலைகளில் மின்சக்திக்காகச் செலவழிக்கப்படுவது மிகக் குறைவு. டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீஸை எடுத்துக் கொள்வோமானால் அதன் உற்பத்திச் செலவில் மின்சக்திக்காக அவர்கள் கொடுப்பது 1.6 சதவிகிதம். உற்பத்திச் செலவு 100 ரூபாய் இருக்குமானால் ரூபாய் 1.60 காசுதான் அவர்கள் மின் சக்திக்காகக் கொடுக்கிற செலவு. இப்போது 10 சதவிகிதம் நாம் அதிகரிப்பதின் மூலம் .16 தான் வரும், அதாவது 10, 10½ காசு தான் அதிகமாகுமே தவிர, இதனால் விலை கூடி விடும் என்று யாரும் சொல்லமுடியாது. ஆகவே, இந்த இரண்டு துறைகளிலும் 20 சதவிகிதம் என்பதை 35 சதவிகிதம் ஆகவும், 30 சதவிகிதம் என்றிருப்பதை 40 சதவிகிதம் ஆகவும் உயர்த்துவதினால் ஒன்றும் பெரிதும் பாதிக்கப்படாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சிமெண்ட் தொழிற்சாலையிலும், அதிகமான மின்சக்தியைப் பயன்படுத்துகிற தொழிற்சாலைகளையும் எடுத்துக் கொள்வோமானால், அவற்றில் உற்பத்திச் செலவில் கணிசமான அளவு மின்சாரத்திற்காக செலவழிக்கப்படுகிறது. அவர்களுக்கு நாம் இப்போது 10 சதவிகிதத்தில் இருந்து 15 சதவிகிதம் ஆக்கியிருக்கிறோம். அலுமினியம் தொழிற்சாலை, காஸ்டிக் சோடா போன்ற ரசாயனத் தொழிற்சாலைகளில் அதிகமான மின்சக்தி உபயோகப்படுத்தப்படுகிறது. அவற்றிற்கெல்லாம் 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்கு உயர்த்துவதற்கு முன்வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தால் ஏற்படுகிற உயர்வு 5 சதவிகிதம் தான். அதேபோல் சென்னையில் உள்ள தொழிற்சாலைகளில் ஃப்யூவல் சர்சார்ஜ் ஏற்கனவே விதித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஃப்யூவல் சர்சார்ஜ் விதிக்கிற பகுதிகளில் எல்லாம் கூட இப்போது அதிகரிப்பது 5 சதவிகிதம்தான். அவர்கள் கொடுக்கிற வரியில் 5 சதவிகிதம் அதிகமாக கொடுக்கும்படியாக இருக்கும். டொமஸ்டிக் சப்ளைக்கு—வீடுகளுக்கு உபயோகப்படுத்துவதற்கு— அதிக வரி விதிக்கவில்லை. காரணம் என்னவென்றால், இப்போது அவர்கள் யூனிட்டுக்கு 33 காசு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வரி அதிகரிக்கப்படவில்லை. வீடுகளுக்காக பல்க் சப்ளை எடுத்துக் கொள்கிறவர்கள் பத்து, பதினொன்று ரூபாய் கட்டணம் கட்டிவிட்டு யூனிட்டுக்கு 11 பைசா என்ற அளவில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவில் இப்போது இருக்கிற 10 சதவிகிதம் என்பதை 20 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். அதை அவர்கள் கொடுக்க இயலும் என்பதுதான் சர்க்காரின் எண்ணம்.

அடுத்தாற்போல விவசாயத்திற்கு 10 சத விகிதம் இப்போது வரி போட்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை 20 சதவிகிதமாக உயர்த்துகிறோம். அதன் மூலம் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டிய வரி ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசாவிற்குக் குறைவாகத்தான் இருக்கும். இப்போது 10 சதவிகிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அதை 20 சதவிகிதம் என்று உயர்த்துவதினால் இப்போது கொடுப்பதை விட யூனிட்டுக்கு 1 பைசாதான் அதிகமாகக் கொடுக்க வேண்டி





யிருக்கும். ஆகவே, எந்தெந்தத் துறைகளிலே எப்படி நாம் வரி விகிதங்களை மாற்றியமைத்தால் மக்களுக்கு அதிகமான கஷ்டம் ஏற்படாது, அதன் காரணமாக பண்டங்களின் விலையில்கூட உயர்வு ஏற்படாது என்பதையெல்லாம் ஆலோசனை செய்து தீவிரமாகப் பரிசீலனை செய்துதான் இந்த வரி விகிதத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் மன்றத்தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் சபை முன்னால் பிரேரேபிக்கப்பட்டுள்ள இந்த மின்சார வரி மசோதாவைப்பற்றி சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டின் நிதிநிலைமை பற்றியும், இந்தச் சட்டசபை தொடரில் வருகிற புது வரிகளைப் பற்றிய விவரங்களையும் தம்முடைய நிதிநிலை அறிக்கையில் விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தக் காரியங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதைப் பற்றியும், இந்த நிலைமை ஏன் வந்திருக்கிறது என்பதைப் பற்றியும் சொல்லி நம் தமிழ் நாட்டின் பொருளாதார நிலைமைகளின் படப்பிடிப்பை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த வரி விதிப்பு தொடரின் முதல் வரியாக நம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மின்சார வரி விதிப்பை இங்கு பிரேரேபித்திருக்கிறார்கள். இந்த மின்சார வரி விவகாரத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால், வரி—புது வரியாகட்டும், பழைய வரி ஆகட்டும் அது மகிழ்ச்சிக்குரியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக நம் மாநிலத்தில் வரியின்பாரம் தாங்க முடியாத பளுவாகத்தான் இருக்கிறது என்பதை ஆட்சி பீடத்தில் இருக்கிற அரசாங்கம் பல தடவை ஒத்துக் கொண்டிருக்கிற அம்சம்தான். இருந்தபோதிலும் இதுமாதிரி அறிக்கையைக் கொடுத்த நம் முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய பதினைந்து பக்க உரையில் ஒரே ஒரு வரியின் பின்னால் நின்றுக் கொண்டு இத்தனை விவகாரங்களையும் இந்த மன்றத்தின் முன்னால் சொல்லியிருக்கிறார்கள். 'நாட்டின் பாதுகாப்பு வலிமை, வலிவான சுயபலத்துடன் கூடிய பொருளாதார அமைப்பாலும், அத்தகைய அமைப்பை உருவாக்க உதவும் திட்டங்களின் மூலமாகவுமே பெருக முடியும். பகைவர்களை எதிர்த்து நிற்கும் எந்த நாட்டிலும் நுகர்ச்சி அளவுக்குச் சில வரையறைகள் வகுத்துக் கொள்வது இன்றியமையாததாகும்' என்று கூறியிருக்கிறார்கள். இன்று ஒரு பகை நாட்டோடு போர்க்கோலம் பூண்டு நிற்கிற நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம். 'பகைவர்களை எதிர்த்து நிற்கும் எந்த நாட்டிலும் நுகர்ச்சி அளவுகளுக்கு சில வரையறை வகுத்துக் கொள்வது இன்றியமையாததாகும்' என்று விளக்கியிருக்கிறார்கள். நுகர்ச்சி அளவுகளுக்கு வரையறை வகுத்துக் கொள்ளவேண்டும் என்றிருக்கும் பதங்களுக்குப் பின்னால் இன்று வருகிறது நான்கு வரிகள். நம் மீது திணிக்கப்பட்டிருக்கிறது என்றால் இன்று யாரும் அதை வைத்துக்கொள்ள தான் வேண்டும். இன்றுள்ள நிலைமையில் இவைகளை எல்லாம்

மக்கள் தாங்குவார்களா என்ற பிரச்சினைக்கே இடமில்லை. ஏனெனில், நம் தேசத்தையும், நம் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதற்காக எதனையும் தாங்கிக்கொண்டு, தங்கள் உயிரையும் தங்கள் உடமைகள் அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மக்களுள்ள இந்த நாட்டில் இன்று அந்த எழுச்சி அடிப்படையில் தான், அதன் பின்னால் நின்றுக் கொண்டுதான் இந்த வரிகள் இன்று வருகின்றன. இன்று வரிகளை தாங்கிக் கொள்கிற சக்தி நமக்கு இருக்கிறதா என்றால் நிச்சயமாகத் தாங்க முடியாதுதான். ஆனால் இன்று நாம் எதையும் இழக்கும் சித்தத்துடன் எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தமது பொருளாதார அறிக்கையில் கூறியிருக்கிறார்கள், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்தினிடம் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய பங்கில் துண்டு விழுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பதினாறு கோடி ரூபாய் அளவில் துண்டு விழுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது அமைந்திருக்கிற நிதிக் கமிஷன் பரிவுரை மூலம் ஏறக்குறைய 50 கோடி ரூபாய் வருகிறது என்றாலும், அதுவும் சரிக்கட்டுகிற நிலையில் சரியாகப் போகிறது என்ற நிலையில் என்ன செய்வது என்று, நாட்டு மக்களுடைய மனநிலையை அனுசரித்துத் தான் இந்த விவகாரங்கள் வந்திருக்கின்றன என்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும். சிலர் இருக்கிறார்கள், வரியே ஏன் போட வேண்டும், திட்டமே போடக் கூடாது, இருக்கிறது இருக்கட்டும், என்று சொல்லக் கூடியவர்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல நாங்கள் . . . (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சேர்ந்தவர்கள் அல்ல; சார்ந்தவர்கள்.) சார்வது முதல் கட்டம், சேருவது இறுதிக் கட்டம். அந்த இரண்டு நிலையையும் சேர்ந்தவர்கள் அல்ல நாங்கள். இன்றைக்கு நமது தொழில் அமைச்சர் சொல்லுகிற நோத்தில் மிகவும் ருசிகரமாகத்தான் இருந்தது. இருபது சதவிதத்தை 30 சதவீதமாக்குகிறோம், பஞ்சாலைத் தொழிலுக்கு 10 சதவீதம் அதிகப்படுத்துகிறோம், சிமெண்ட் தொழிலுக்கு 5 சதவீதம் அதிகப்படுத்துகிறோம் என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டாலும் கூட, கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'உலக பாங்கு சிபாரிசு செய்திருக்கிறது, மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறது' என்று வலியக் காரணம் கூறத் தேவையில்லை. இன்றைக்கு இந்த வரியைக்கூட அல்ல, பெரிய வரிகளைக் கொடுக்க வேண்டிய பல நிலைமைகள் நாட்டில் ஏற்படலாம். எனவே, உலக பாங்கை இழுக்காமல், நாங்கள் வரி போட வேண்டிய தேவை உள்ளது என்று நேரடியாகக் கூறிவிட்டிருக்கலாம். எனவே அவர்கள் கூறுகிற சமாதானங்கள் திருப்திகரமானதல்ல. அவர்கள் சொல்லுவது போல் 'வரி உயர்வு குறைவானது தான், உற்பத்திச் செலவில் சிறு பகுதியாகத்தான் இருக்கும்' என்ற வாதத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். சிறு பகுதியாக இருந்தாலும் உற்பத்திப் பொருளாக வரும் நேரத்தில் கண்டிப்பாக . . .

**MR. SPEAKER** : Is the hon. Member opposing the Bill?





**SRI K. A. MATHIALAGAN** : I do not oppose the Bill. I want to criticize the Bill and point out what its repercussions are. In the present circumstances, we have to accept the Bill it is inevitable.

உற்பத்திப் பொருளைக் கண்டிப்பாக பாதிக்கத்தான் செய்யும். ஏற்கனவே மின்சார வெட்டு. அதனாலேயே பல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மின்சார வெட்டினாலேயே பல சிரமங்கள், பல எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் தொழில்கள் பாதிக்கப்படாது என்று சொல்லுவது சரியானதல்ல. பல்க் சப்ளைக்குத்தான் போடுகிறோம், பஞ்சாலைத் தொழிலுக்குத்தான் கொடுக்கிறோம், சிமெண்ட் தொழிலுக்குத் தான் போடுகிறோம் என்று சொன்னாலும் பாதிக்கத்தான் செய்யும் இந்த வரிகள் நெருக்கடி காலத்தில் இருக்கட்டும், நெருக்கடி முடிந்தவுடனே திருப்பிப் பெற்றுக் கொள்ளுகிறோம் என்ற நிபந்தனை அளவில் இருக்கவேண்டுமே தவிர, வேறு அல்ல. அந்த அளவுக்குத் தான் நிபந்தனையோடு ஆதரிக்க முடியும். கனம் சபாநாயகர் அவர்கள் நான் ஆதரிக்கிறேனா அல்லது எதிர்க்கிறேனா என்று கேட்டார்கள்; நிபந்தனையோடு ஆதரிக்கிறேன். திட்டமே போட வேண்டாமென்று சொல்லுகிறவர்கள் அல்ல நாங்கள். நெருக்கடி இருக்கிறது, நிதி தேவைப்படுகிறது என்றால் நமது எல்லா நிதி அமைச்சர்களும், ஆபத்பாந்தவர்களாக, அனாதாட்சகர்களாக இருக்கக்கூடிய மின்சாரத்தின் பக்கத்தில் போவார்கள், அல்லது காமதேனுவாக இருக்கக் கூடிய விற்பனை வரியிடத்தில் போவார்கள், அல்லது ஏமாந்த விவசாயிகளிடத்தில் போவார்கள் என்ற நிலைமையிலேதான் இந்த நாட்டிலே இருக்கிற எல்லா நிதி அமைச்சர்களும் செய்கிறார்கள். அவர்கள் செய்வதில் பொருளாதாரப் புரட்சியே இல்லை. வரி போடவேண்டுமென்று ஏற்பட்டால், பொருளாதாரத்தில் பள்ளம் விழுகிறது என்று தெரிந்தால், பலிக்கடாக்களாக இவர்களுக்குக் கிடைப்பது மின்சாரக் கட்டணம் அல்லது விற்பனை வரி அல்லது ஏழை விவசாயிகள். அதை விட்டு எங்கே போய் கதவைத் தட்டவேண்டுமோ, அங்கே போய்த் தட்ட அவர்களுக்குத் திடமான நிம்பிக்கை வரவில்லை. இந்த நிலைமைகள் இன்றைக்கு வரவில்லை. உதாரணத்திற்குச் சொல்லுகிறபோது, இதே மின்சார வரி உயர்வு கண்டிப்பாகப் பாதிக்கத்தான் செய்யும்; தொழில் உற்பத்தியைப் பாதிக்கத்தான் செய்யும். விலைகள் ஏறும். விற்பனை வரி உயர்வினால் பொருள்களின் விலை உயரும். பெட்ரோல் வரியை உயர்த்துவதால் பஸ் கட்டணத்தை உயர்த்தத்தான் செய்வார்கள். பொருள்களின் விலை உயரத்தான் செய்யும். பொருள்கள் உற்பத்தி குறையைத்தான் செய்யும். ராவல்பிண்டியில் இருக்கும் இராணுவப் பிடாரிகளுக்குக் கொடுக்கும் காணிக்கையாக ஏற்றுக்கொள்ளுகிறோமே தவிர, இந்த வரியாகட்டும், மற்ற வரிகளாகட்டும், எதையும் நிச்சயமாக ஒத்துக் கொள்ள முடியாது. இந்த வரியே ஏன் போட வேண்டும்? வேறு வாய்ப்பே கிடையாதா? வேறு எத்தனை வழிகளை மற்ற நேரங்களில் பேசும்போது நாங்கள் சொல்லியிருக்கிறோம்? உணவு வார்த்தகத்தை அரசே செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்; பாங்குகளை தேசிய மய

யாக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்; ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்; பெரிய பெரிய பஞ்சாலைப்போதை தொழில்களை தேசிய மயமாக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். வாய்ப்புக்கள் இருக்கின்றன. எங்கே 3,000 கோடி ரூபாய் கருப்புப் பணம் இருக்கிறது என்று பார்த்துப் பெறுவதற்கு முயற்சி செய்யப்பட்டதா? முயற்சி செய்திருந்தால் வந்திருக்காதா? நான்கு மாதங்களுக்கு முன் கனம் முதல் அமைச்சர் அவர்கள் நான்காவது திட்டம் பற்றி நிகழ்த்திய உரையில் என்ன சொன்னார்கள்? வரி போடப் போகிறோம் என்று கூடச் சொல்லவில்லை. சிக்கனமாக இருக்கப் போகிறோம், நிர்வாக யந்திரத்தைத் திருத்தி அமைக்கப் போகிறோம், வரிகளை ஏமாற்றுவதைத் தடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். எத்தனை தடவை சொல்லியிருப்பார்கள், விற்பனை வரி ஏமாற்றுவதை, கொடுக்காமல் டிமிக்கி கொடுப்பதைத் தடுத்து நிறுத்தினால் 50 கோடி ரூபாய் வரும் என்றீ? அதற்கு இந்த அரசாங்கம் செய்த முயற்சி என்ன? சிக்கனம் பற்றி பேசுகிறோம். சிக்கனம் என்பது கனம் முதல் அமைச்சருடைய திரு நாவில் நடனம் ஆடுகிற ஒரு சொல்லாகத்தான் இருக்கிறது. எத்தனை நிர்வாகக் காரியங்களில் விரயம் ஆகின்றது? ஆடம்பரம் என்று சொல்லுகிறோம். அமைச்சர்களுடைய கார்கள் சிக்கனத்தின் சின்னங்களா என்ன? அரசாங்கத்தில் நடைமுறையில் காட்டினோமா? நாட்டு மக்கள்கூட இன்றைக்கு எதிர்பார்க்க மாட்டார்கள். எங்கே எதிர்பார்க்க முடிகிறது? எங்கே குறைத்தார்கள்? இனி புதிய வேலை கொடுக்க மாட்டோம், ஐந்தாண்டுத் திட்டத்திற்கோ அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கோ தேவையானவைகளைத் தவிர . . .

THE HON. SRI R. VENKATARAMAN : I think this looks like a general debate. This Bill relates to increasing the rates of tax on the consumption of electrical energy, and the hon. Member should confine his remarks to that subject.

MR. SPEAKER : He has already said that he is supporting the Bill.

SRI K. A. MATHIALAGAN : A general discussion on the Statement on Resources made by the Hon. Chief Minister should have preceded this Bill.

MR. SPEAKER : The hon. Member should not convert the discussion on this Bill into a discussion on the Statement on Resources.

SRI K. A. MATHIALAGAN : The Hon. Minister for Industries has come forward with a taxation Bill. We want to discuss it comprehensively.

MR. SPEAKER : Even for that there should be a limit. Let the hon. Member please confine his remarks to the Bill before the House.





**திரு. கே. ஏ. மதியழகன் :** சிக்கனங்கள் சரியான முறையில் நடைமுறையில் வரவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். விவசாய உற்பத்திக்கு கிணறு வெட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒரு கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறோம். சிக்கனம் என்று சொல்லுகிற நேரத்தில், இந்த மசோதாவின் மூலம் 2½ கோடி ரூபாய் மின்சார வரியாக வசூல் செய்கிறோம். கிணறு வெட்டுவதற்கு 3 கோடி, 4 கோடி ரூபாய் செலவழிக்கிறோம், ஆனால் கிணறுகள் வரவில்லை. சில ஊர்களில் கிணறு வெட்டுவதற்கென்று பணம் வாங்கிக் கலியாணத்திற்குச் செலவழிக்கும் நிலை இருக்கிறது. அந்த மாதிரி விவரங்கள் தணிக்கைக் குழுவின் அறிக்கையில் வருகிறது. 'கவர்ச்சியாகச் சொல்லுகிறார்கள் மன்றத்திற்கு வரும் நேரத்தில், 'சரியாக இருக்கிறது' என்று. இன்றைக்கு இருக்கிற இந்த வரியும்கூட இந்த அடிப்படையில் நெருக்கடியான இந்த நேரத்தில் ஒத்துக் கொள்ளலாம் என்ற முறையில் இது வரவேற்கத் தக்கதாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளுகிற நேரத்தில், இந்த நிலைமைகள் மாறவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். பகைவர்களை எதிர்த்துத்தான் ஆகவேண்டும், அதற்கு எந்தத் தியாகம் ஆனாலும் செய்யத் தயார் என்றாலும் கூட, மேட்டுக் குடியில் இருக்கிறவர்கள், வாழ்வு வசதி பெற்றவர்களிடமிருந்து பணம் பெறுவது என்றில்லாமல் ஏழை எளியவர்களைக் கசக்கிப் பிழிந்து அவர்களை பலிக் கடாக்களாக ஆக்கும் நிலை சரியல்ல என்று சொல்லுகிற நேரத்தில், அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். எந்த வரியாகட்டும், நல்ல வரியாகட்டும், கெட்ட வரியாகட்டும், எவ்வளவு மூலாம் பூசி சொன்னாலும், அதனுடைய விளைவு விலைவாசி உயர்வுதான். எந்த வரி வந்தாலும், அதன் விளைவாக விலைவாசி உயர்ந்துவிடுகிறது. எப்படி பாகிஸ்தான் நமக்கு வெளி நாட்டுப் பகைவனோ, அப்படி உள்நாட்டுப் பகைவன் விலைவாசி உயர்வு. இது தவிர்க்க முடியாதது. இந்த வரி மூலம் விலைவாசி உயராது என்று உத்திரவாதம் அளிக்கப்படுமா என்று நான் கேட்கிறேன். இதை ஆதரிப்பது என்றால் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிற நிலைமையில் இல்லை. ஒரு பெரிய கவசத்தின் கீழ், நாட்டு பாதுகாப்பு என்ற நிழலின் கீழ், நமக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையில் பெரிய சுமையை, சிரமத்தை நாம் தாங்கவேண்டியிருக்கிறது என்ற வகையில் கூறி நான் அமர்கிறேன்.

*** திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. மதியழகன் கொடுக்கிறோம் என்று ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது என்றெல்லாம் பேசினார். கொடுப்பது என்றால் Good grace ஓடு கொடுத்தால் தான் நன்றாக இருக்கும். இது ரொம்ப முக்கியமான காரியம். இதற்கு இப்படியெல்லாம் முகத்தைக் கோணிக்கொண்டு கொடுக்கிறேன் என்று சொல்ல வேண்டிய அவசியமென்ன? அதுவே இந்தக் காரியத்திற்கு ஒரு பங்கமாக இருக்கும். கொடுக்கிறதை மகிழ்ச்சியோடு கொடுக்க வேண்டும். இப்படி முகத்தைக் கோணிக்கொண்டு கொடுக்கிறேன்

என்று சொல்வது நல்ல காரியமா என்று நான் கேட்க விரும்பு கிறேன். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. ' willing to wound but afraid to strike என்பது தான் அந்த பழமொழி. அரசாங்கத்தைத் தாக்கவேண்டும் என்று ஆசை, ஆனால் முடியவில்லை. எதுவாக இருந்தாலும் ஏதாவது குறை சொல்லிக்கொண்டிருந்தால் என்ன பயன்? 'வேறு வழியில்லை, பொது மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள், சரி பரவாயில்லை நான் ஒத்துக்கொள்கிறேன்' ஏன் இப்படி 'குவாலிபிகேஷனோடு' சொல்லவேண்டும். அமைச்சர் செய்கிறது பெரிய காரியம். இதை ஒத்துக்கொள்வதற்கு ஏன் இத்தனை குவாலிபிகேஷன்? இந்த முறையிலே ஒவ்வொரு அங்கத்தினரும் போக தலைப்பட்டால், இன்னும் பல வரிகள் வர இருக்கின்றன. பாகிஸ்தானில் வார் டாக்ஸ் என்று போடுகிறார்களாம். அந்த மாதிரியெல்லாம் இல்லாமல் நமது சர்க்கார் போடுகிற இந்த வரியைப் பொறுத்த வரையில் இதைவிடச் சிறந்த முறை இருக்க முடியாது. ஏதாவது குற்றம் சொல்லிக்கொண்டே, 'போச்சு, போச்சு' என்று சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? வழங்கப்படுகிற மின்சாரத்திற்கு கட்டணம் செலுத்துகிறபொழுது, அந்தக் கட்டணத்தோடு சேர்த்து கொஞ்சம் வரி போடப்படுகிறது. இதைவிடச் சிறந்த முறை இருக்க முடியாது. ஜனங்கள் வரவேற்கக்கூடிய முறையிலே தான் போடப்படுகிறது. பெரிய அளவு மின்சாரம் கன்ஸ்யூம் பண்ணி பயன் பெறும்போது, ஒரு சிறிய அளவு கூடுதல் வரி கொடுங்கள் என்று கேட்கப்படுகிறது. இதைவிடச் சிறந்த முறை ஒன்று இருக்க முடியாது, வரவேற்கக்கூடிய முறை ஒன்று இருக்க முடியாது. இனிமேலாவது இம்மாதிரி பேசுவதை கனம் உறுப் பினர் அவர்கள் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் இம்மாதிரி பல வரிகள் வர இருக்கின்றன. நில வரி வர இருக்கிறது. இது பெரிய காரியம். இதிலே பல குவாலிபிகேஷன்ஸ் வைத்துக்கொண்டு பேசக்கூடாது. கொடுக் கிறபோது, பரிபூரண மனதோடு கொடுக்கவேண்டும். இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது என்று சொல்லி 'குவாலிபை' பண்ணக்கூடாது. ஏதோ ஒரு பர்சண்ட் போட்டுவிட்டால், 'போச்சு, போச்சு' என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. இதிலே இவ்வளவு ' ifs இவ்வளவு ' cualification ' கூடாது. பரிபூரண மனதோடு பேசவேண்டும். இதுபற்றி இவ்வளவு தூரம் பேசவேண்டிய அவசியமே இல்லை, குறை கூற வேண்டிய அவசி யமே இல்லை. இது மாதிரியெல்லாம் சொல்லக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டிலே பிறந்த யாராக இருந்தாலும், தேசப் பாதுகாப் புக்கு என்ன செய்யவேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருப்பார்கள் தான். அது தான் இன்றைய கடமை. அப்படித் தன் பெருவாரியான பேர்கள் இருப்பார்கள். ஆனால், ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். தேசத்தை பாதுகாக்கவேண்டும் என்ற பொறுப்பு ஏதோ ஒரு சிலருக்கு மாத்திரம் தான் இருக்கிறது, மீதி உள்ளவர்களுக்கு அந்தப் பொறுப்பு உணர்ச்சி குறைந்திருக்





கிறது என்று நினைத்தால், அது சரியல்ல. அம்மாதிரி செய்வது நமக்குள்ளேயே ஒரு பிரிவினை உண்டுபண்ணுவது போலாகும். அம் மாதிரி உணர்ச்சியை தூண்டிவிடக்கூடாது என்று மிக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நான் சொல்ல விரும்புவது, தேசப் பாது காப்பின் பெயரால் எத்தனை வரிகளைப் போட்டாலும் சகித்துக் கொண்டு இருக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. பல்வேறு வரிகளை இப்படியெல்லாம் போடுவதற்குப் பதிலாக, தேசப் பாது காப்பு என்று சொல்லி, ஒருவனுடைய சொத்து, லாபம், மற்று முள்ள பல்வேறு வகையிலே கிடைக்கும் வருமானம் எல்லாவற் றையும் கணக்கிட்டு, அதன் மீது வரி போடுவது பற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபணை கிடையாது. முழுக்க, முழுக்க தேசப் பாதுகாப்பின் பெயரால், தமிழ் நாட்டிலுள்ள 4 கோடி மக்களுக்கும் வரி போடுவது பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. நான் ஒரு விவசாயி. இன்றைக்கு நமது தொழில் அமைச்சர் அவர்கள் மின்சாரத்தின் மீது வரியை உயர்த்தி இந்த மசோதாவை இங்கு கொண்டுவந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு யூனிட்டு ஒரு பைசா தான் வருகிறது என்று சொல்லப்பட்டது. இந்த மசோதா பிரகாரம் 'பல்க் சப்ளை' யார் எடுத்துக்கொள் கிறார்களோ; கொஞ்சம் வசதியுள்ளவர்களுக்குத் தான் வரி போடப் படுகிறது. பல்க் சப்ளை எனக்குக் கிடையாது. ஒரு சில வசதி உள்ளவர்களுக்குத்தான் இருக்க முடியும். ஆனால், இப்பொழுதே, விவசாய உற்பத்தியின் முதலீட்டுச் செலவு அதிகமாக ஆகிக் கொண்டிருக்கிறது. பல்வேறு வகையில் அதிகரித்திருக்கிறது. அந்த விவரங்களையெல்லாம் பற்றி நான் பேச விரும்பவில்லை. காரணம், இந்த மசோதா கொண்டுவரப்படும்பொழுது, குறுகிய நேரத்தில் பேச விரும்புகிறவர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று சொல்லப்பட்டது. விவசாயி என்ற முறையிலே அந்த வரி என்மீது வந்துதான் விழுகிறது. ஒரு பைசா தான் என்று சொல்லப்படுகிறது. விவசாயி பெட்ரோல் மூலம் ஓட்டக்கூடிய என்ஜின் வைத்திருக்கிறான், டீசல் ஆயில் மூலம் ஓட்டக்கூடிய என்ஜினும் வைத்திருக்கிறான். பெட்ரோல் வரி உயர்த்தப்பட்டிருக் கிறது. ஒரு பக்கம் டீசல் என்ஜின், ஒரு பக்கம் மின்சார மோட்டார் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். அவர் களும் ஒரு பக்கம் வரி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பிறகு நிலவரி வேறு கொடுக்கிறார்கள். நிலவரியை உயர்த்துவதற்கும் மசோதா வர இருக்கிறது. அப்பொழுது அதைப்பற்றி விரிவாக பேசலாம் என்று நினைக்கிறேன். இப்படி எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு விவசாயி செலுத்தவேண்டிய வரிச் சுமை தாங்க முடியுமா என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த வரிகளையெல்லாம் கொடுக்கிற பொழுதுதான் இந்தக் கஷ்டத்தை விவசாயிகள் உணர்வார்கள். இன்றைக்கு அவ்வளவு சுலபமாக உணர்ந்துகொள்ள முடியாது.

நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இன் றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் நாம் எடுத்துக்கொள்ள

வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, புதிய வரிகளை தயவு செய்து நிறுத்திவையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டினுடைய தேசபக்திக்கு நாட்டினுடைய பாதுகாப்பிற்கும் வேண்டி எதை வேண்டுமானாலும் கொடுக்கவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். வாயினால் சொல்வதுமட்டுமல்லாமல் உயிரை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். எப்படி எனக்கு வீடு சொந்தமோ, நிலம் சொந்தமோ, அது மாதிரி தேசமும் எனக்குச் சொந்தம். வேறு யாரும் சொல்லிக்கொடுத்து தேசபக்தி ஏற்படவேண்டிய அவசியமே கிடையாது. தேசப் பாதுகாப்பு என்ற பெயரால் இதுமாதிரி வரி போட்டு விவசாய 'உற்பத்தியை கெடுக்கக் கூடாது. மேலும் அன்னிய நாடுகளிலிருந்து உணவுப்பொருளை பிச்சை வாங்கக்கூடிய நிலைமை உண்டு பண்ணக் கூடாது. யூனிட்டுக்கு ஒரு பைசா என்றாலும் விவசாயிகளைப் பொறுத்த வரைக்கும் அதிகமாகத் தான் இருக்கிறது. சராசரி 10, 15 ஏகர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிக்கு இந்த ஒரு பைசா கூட அதிகம் தான். தேசப்பாதுகாப்பு என்ற பெயரால் பாகிஸ்தான் போடுவது போல வரி போடுவது பற்றி ஆட்சேபணை இல்லை, என்றால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். ஜே. ராமசாமி**: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய சோஷலிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னதைப்போல விவசாயிகளின் மீது இப்பொழுது 10 சதவிகிதம் போட்டிருப்பதை மேலும் அதிகரித்து 10 சதவிகிதம் கூடுதலாக வரி போடுவதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். விவசாயிக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசா தான் அதிகம் என்று தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகமாக ஒன்றுமில்லை. ஒரு காசுதானே கூடப்போகிறது என்று அவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் மின்சாரத்தை உபயோகப்படுத்துவதற்கு முதலில் இருந்தது 5 நயா பைசா, அதற்கப்புறம் அது 7 பைசாவாக உயர்த்தப்பட்டது. 8¼ சதவிதம் உயர்த்தி இதற்கு ஒரு சர்சார்ஜ் என்று ரூ. 10 விதிக்கப்படுகிறது. இதற்கு முன்பு சர்சார்ஜ் என்ற பெயரால் எலக்டிரிஸிடி போர்டினால் கொஞ்சம் உயர்த்தப்பட்டது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு விவசாயி மின்சாரத்திற்காக ரூ. 100 செலவு செய்தால், அதற்கு ஏறக்குறைய ரூ. 25-லிருந்து 30 அதிகமாக போட்டு கட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரூ. 100-க்கு ரூ. 30 வரியாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. போர் முனைக்கு ஈடு ஏர் முனை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால், சர்க்கார் போடக்கூடிய வரி ஏர் முனை
10-30 யில்தான் போடுகிறார்கள். ஏர்முனையில்தான் வரியைப் பொறுத்த வரையிலும் கவனம் செலுத்துகிறார்கள். சர்க்காருக்குப் பணம் போதவில்லை என்றால் எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. அதற்கு நாங்கள்தானா அகப்பட்டோம் என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு பஸ் தொழில் இருக்கிறது. இன்னும்



எவ்வளவோ தொழில்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டு விட்டு, விவசாயிகளைப் பிடித்தால் சரியாகாது. விவசாயி எவ்வளவு பாடுபட்டாலும், மழை இல்லாத இந்த நேரத்தில், இயற்கையையே நம்பி இருக்கும் தொழிலில், 10 சதவிகிதம் கூட்டியிருப்பது மிக மிக அநியாயமான வரி என்று சொல்ல விரும்புகிறேன்.

விவசாயியினுடைய நெல்லுக்கு ரேட்டை ஃபிக்ஸ் பண்ணிவிட்டார்கள். இவ்வளவு தான் என்று நிர்ணயம் செய்துவிட்டார்கள். இதற்கு மட்டும் ஏன் நிர்ணயம் செய்யவில்லை? பணம் வேண்டுமென்றால், இப்படியா செய்வது? 25 சதவிகிதம் லாண்ட் டாக்ஸ் வேறு போட்டாகிவிட்டது. ஆகவே இதைப் புனராலோசனை செய்யவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர், கனம் தொழில் அமைச்சர் இவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நேரத்தில் விவசாயிகளுக்குப் போடும் மின்சார வரியை 10 சதவிகிதம் வரியைக் கைவிடாவிட்டாலும், தயவுசெய்து, 5 சதவிகிதம் என்றாவது குறைக்கவேண்டும் என்றும், கனம் அமைச்சர் ஒரு பைசா என்பதை அரைபைசாவாகவாவது ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்**: கனம் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த நெருக்கடியான நிலையில் மக்கள் போருக்குப் போகவும், பொன்னைக் கொடுக்க வேண்டுமா, எதைக் கொடுக்க வேண்டும், எதைச் சொல்ல வேண்டும், செய்ய வேண்டும் என்று ஏதாவது செய்ய ஆர்வமுடன் இருக்கிறார்கள். இந்த நேரத்தில், இந்த மாதிரி மசோதா வந்தால், முழு மனதோடு, எதிர்க் கட்சியினாலும் சரி, ஆளும் கட்சியினாலும் சரி, இது வேண்டாம் என்று சொல்லத் தக்க உள்ளத்து உரம் பெற்றவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். நல்லதை யோசித்தே அமைச்சரவர்கள் செய்திருக்கிறார்கள். தேனுள்ள மலரைத்தான் வண்டு நாடும். அதுபோல யாரிடத்தில் வாங்கலாம், யார் வரி செலுத்த முடியும் என்று பார்த்துத்தான், தகுதி, வாய்ப்பு பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்துத்தான் அமைச்சர் வரி விதிக்க முன் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களால், முன்னேற்றம் கண்டிருக்கும் துறைகளில் மின்சாரம் மிக முக்கியமானது. 12 யூனிட்டு பயன்படுத்திக் கொண்டிருந்த மக்கள் இன்றைக்கு 120 யூனிட் உபயோகிக்கிறார்கள். எவ்வளவு ஆலைகள், தொழிற்சாலைகள் தோன்றியிருக்கின்றன! இந்த நாளில் மின்சாரத்தை அதிகமாக உபயோகிக்கும் மில்களுக்கே அதிகமாக வரி விதிக்கிறார்கள். ரூ. 3 உற்பத்திச் செலவு ஆகிறது என்றால், அதில் மின்சாரச் செலவு ரூ. 1.06 தான். அதில் 10 சதவிகிதம் அதிகம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், யாரும் மறுக்கமாட்டார்கள். உற்பத்திச் செலவு அதிகமாகிறது, கட்டுபடியாகவில்லை என்று எந்த மில் முதலாளியும் மில்லை இழுத்துப் பூட்டியிருக்கிறார்களா என்றால், ஒரு இடத்திலும் அப்படியில்லை. வேண்டுமானால், 8, 10

கார்கள் வைத்திருப்பவர், இரண்டு கார்களைக் குறைத்துக்கொள்ளலாம். ஆண்டுக்கு இரண்டு பங்களாக் கட்டுபவர், ஒரு பங்களாக் கட்டுவதைக் குறைத்துக்கொள்ளலாம். ஆனால், இப்படிப்பட்ட செலவுகளை யாரும் எதிர்க்க மாட்டார்கள். தனி மரம் தோப்பு ஆகாது. யாரோ ஒரு பெண் காசுமாலை கொடுத்தார்கள், பொன் கொடுத்தார்கள் என்றால் மட்டும் போதாது. அமைச்சரவர்கள் இந்த வரியை நல்ல முறையில்தான் கொண்டு வருகிறார்கள். மக்களும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனாலும், விவசாயத்திலே மட்டும், எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டு இருப்பதற்கு இணங்க, உற்பத்தி பெருக வேண்டும் என்கிற காரணத்தினால், விவசாய உற்பத்திக்கு ஒரு இன்செண்டிவ் கொடுக்கும் வகையில் இந்த வரியை விவசாயிகளுக்கு இல்லாமல் நீக்கினால், சரியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

*** திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் கொண்டு வந்திருக்கும், மின்சார வரி திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன். இன்றைக்கு நாடு இருக்கும் நிலையில், நாம் வரி போடாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்து வெற்றி காண முடியாது. இந்த வரியை நம் சர்க்கார் பட்ஜெட்டில் கொண்டுவரவில்லை. திடீரென்று இன்றைக்குக் கொண்டுவரவேண்டிய அவசியம் என்ன? பாகிஸ்தான் ஆக்ரமிப்பின் காரணமாக ஏற்பட்டிருக்கும் செலவை அனுசரித்து இந்த வரியைப் போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பாகிஸ்தானுடன் போர் நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு நாள் செலவு 2½ கோடி ரூபாய். இன்றைக்கு மின்சாரத்தைப் பொறுத்த வரையில் விதித்திருக்கும் வரியானது, அதிலிருந்து ஒரு வருஷத்திலே கிடைக்கும் தொகை பாகிஸ்தானுடன் ஒரு நாள் போருக்குப் போதுமா என்றால் அதுவே சந்தேகம்தான். ஒரு நாள் செலவுக்குக்கூட வரி கொடுக்க மாட்டேன், அதற்கு மனம் இல்லை என்றால், அவருடைய நெஞ்சத்தில் தேச பக்தி இருக்கிறதா என்பதை சந்தேகிக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. அரசியல் காரணத்திற்காக வேண்டுமானால், ஏதாவது சொல்லலாம். ஆனால் இன்றைக்கு நாடு இருக்கும் நிலையில், வரி இல்லாமல் எந்த நடவடிக்கையையும் செய்ய முடியாது.

கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் சொன்னார்கள், இப்படி வரியைப் போட்டுவிட்டு, அன்னிய நாட்டிடம் கேட்பானேன் என்று, வரியையும் போடாமல், நம் பொருளாதாரத்தையும் பெருக்கிக் கொள்ளாமல், பாதுகாப்புக்கும் அன்னிய நாட்டிடம் உதவி கேட்கும் நிலையில் இருந்தால், என்ன ஆவது? அதற்கு நாம் சிரத்தை எடுக்க வேண்டும். இன்றைக்கு நாட்லே, நமக்குத் தேவையான போர்க் கருவிகளில் 80 சதவிகிதம் நாமே உற்பத்தி செய்கிறோம் என்கிற பெருமை இருந்தாலும், நாம் இன்னும் அன்னிய நாட்டை நம்பியிருக்கும் நிலைமை இருக்கிறது. 100 சதவிகிதம் நாமே உற்பத்தி செய்தாலும், போதாது. அதற்கும் சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதமுடியும்? நாட்டை வைத்துக் கொண்டு தானே மற்றவைகளைச் செய்ய முடியும்? வரியே போடக்



கூடாது என்றால் அது சரியாகாது, அது சாலச் சிறந்தது ஆகாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் நிலையில் யாரும் வரி கொடுக்க மறுக்க மாட்டார்கள். விவசாயிகளானாலும் சரி, தொழிலாளிகளானாலும் சரி, நாட்டில் இருக்கும் பொதுமக்கள் ஆனாலும் சரி, யாரும் இப்படிப்பட்ட வரியைக் கொடுக்க மறுக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு, இந்த மசோதாவை வரவேற்று மனமார ஆதரிக்கிறேன்.

*** திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மின்சார வரி உயர்வு மசோதாவை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். அதுபோல சுதந்தரம் இருந்தால்தான் சோஷலிச சமுதாயத்தை உண்டாக்க முடியும். ஆகவே, நாட்டின் பாதுகாப்பிற்கு எதையும் யாரும் கொடுக்கத் தயார் என்று வாயினால் சொன்னால் மட்டும் போதாது. சிறு துளி பெருவெள்ளம் என்பதுபோல, சிறிது சிறிதாகத்தான் சேர்க்க வேண்டும். தேசப் பாதுகாப்பிற்காகப் பெருந்தொகை செலவழிக்க வேண்டியிருக்கிறது. தொழில்களுக்கு அதிகமாக வரி போடப்பட்டிருக்கிறது என்றாலும், உற்பத்திச் செலவு அதிகமாவதால், விலை கூடும் என்றாலும், இதை யெல்லாம் நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, இந்த அதிகக் கட்டண விதிப்பினால் பொதுமக்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்லுவது அவ்வளவு சரியாக இருக்க முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். ஆனாலும் விவசாயிகளுக்குப் போடப்பட்டிருக்கும் 10 சதவிகிதம் உயர்வு, இந்த நாட்டின் பாதுகாப்பிற்காக என்றாலும், நாட்டின் பாதுகாப்பில் எல்லோருக்கும் பங்கு உண்டு என்றாலும், வியாபாரம், தொழில் இவைகளுக்குப் போடலாம். ஆனால், விவசாயி அப்படியில்லை என்கிற காரணத்தினால், 10 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதம் என்று போட இருப்பதை, 5 சதவிகிதம் உயர்த்தி, 15 சதவிகிதம் ஆக்கலாம் என்று யோசனையைச் சொல்லிக் கொண்டு, இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டை எதிர்நோக்கியிருக்கும் விரோதிகளை விரட்டியடிப்பதற்கு நம்முடைய பாரத மக்கள் அத்தனை பேரும் ஒன்றுபட்ட உள்ளத்தோடு, தங்களுக்குள்ள சகல செளகரியங்களையும் குறைத்துக்கொண்டுகூட எல்லாத் தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால், இந்த வரி மக்களால் ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் கூறியதைப் போன்று, இன்றைக்கு நம்முடைய நாட்டின் மானம், மரியாதை அத்தனையையும் காக்கக்கூடிய நிலையில் இருக்கிறவர்கள் விவசாயிகள் என்று கனம் அமைச்சர் அவர்களே கூறினார்கள். ஒரே ஒரு பைசாதான் அதிகம் என்றார்கள். விவசாயிகள் இரண்டு மூன்று பம்ப் செட்-களை

வைத்து உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அவர்களுக்குக் கிணறு வெட்ட அரசாங்கம் கடன் கொடுக்கிறது, இன்னும் பல வசதிகளைச் செய்து கொடுக்கிறது. என்றாலும், ஒரு பைசா வீதம் வரியை உயர்த்தினால்கூட, அவர்களுக்குச் சற்றும் தாங்க முடியாத சுமையை ஏற்றுவதாகத்தான் இருக்கும். ஆகவே, இந்த விவசாயிகளுக்குப் போட்டிருக்கும் இந்த வரியைச் சற்றுத் தளர்த்த வேண்டும். விட்டு வரியை வேண்டுமானால் 35 பைசாவை 50 பைசாவாக ஆக்குங்கள். விவசாயிகளுக்கு இதைச் சற்றுத் தளர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதாவை நான் பொதுவாக வரவேற்கிறேன். எனினும் ஒரு சிறு ஆலோசனை கூற விரும்புகிறேன். டைமென்ஷன் பவர் சம்பந்தமாக, சிமெண்ட் தொழிலைத் தவிர, மற்ற தொழில்களுக் கெல்லாம் அதிக விகிதத்தில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாம் விதிக்கக்கூடிய அளவோடு பஞ்சாலைத் தொழிலுக்கும் மற்ற தொழிலுக்கும் ஒப்பு நோக்கும்போது, குறைந்த பட்சம் 10 சத விகிதம், 15 சதவிகிதம் ஆயினும் கூட வரி விதித்திருக்கிறோம். ஏற்கனவே, சிமெண்ட் தொழிலைப் பொறுத்த வரையில் பத்து சத விகிதத்தில்தான் நாம் விதித்து வந்திருக்கிறோம். இப்பொழுது கூடுதலாக ஓரளவுக்கு விதிக்கும்போது 5 சதவிகிதம் அதிகப்படுத்துவதைவிட 10 சதவிகிதம் ஆக ஆக்குவதன் மூலமாக விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதில் ஏற்படக்கூடிய உயர்வைச் சரிக்கட்ட முடியாதா என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

குறிப்பாக, விவசாயத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே இந்த மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக டிசம்பரிலிருந்தே அமுல் நடத்தக் கூடியது நல்ல முன்யோசனையோடு கூடியதாகும். ஏனென்றால், இப்பொழுதிருக்கும் சந்தர்ப்பம் ஏற்ற சந்தர்ப்பம் அல்ல என்று அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இன்னும் கூட, இயற்கை ஒத்துழைத்து, டிசம்பருக்குள்ளாக நல்லவாறு நீர் நிலை பெருகி, மின்சாரம் திருப்திகரமான நிலையில் வருகிற போது தான் இப்பொழுது மின்சாரக் கட்டணத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய உயர்வைக்கூட அமுல் நடத்தக்கூடிய நிலை ஏற்படும். மற்றபடி, மறுபடியும் கூட அந்த விதிப்பை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். விவசாயத்தைப் பொறுத்த வரையில், நாம் சர்ச்சார்ஜ் மூலமாக ஏற்கனவே வரி விதிப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். குறிப்பாக, திருநெல்வேலி போன்ற வறட்சி இருக்கும் ஜில்லாவில் இன்று இருக்கக் கூடிய நிலைமையை நினைத்துப் பார்க்கும்போது, விவசாயம் சம்பந்தமாக எந்த அளவிற்கு நாம் நிதானமாகச் சொல்ல வேண்டும் என்ற யோசனையை அரசாங்கம் ஏற்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், ஏற்கனவே பத்து வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட மணிமுத்தாறு சட்டத்தின் கீழ் இப்பொழுதுதான் பெட்டர்மெண்ட் டாக்ஸ் விதிப்பதை அமுல் நடத்துவதற்கு எல்லா விதமான



ஏற்பாடும் அந்த ஜில்லாவிலே நடந்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக, தாம்பிரபரணி, மணிமுத்தாறு தீரத்திலுள்ள ஏறக்குறைய ஒரு லட்சம் ஏக்கர் வரையிலும் இந்த வரி விதிப்புக்கு உட்படக் கூடிய நிலையில் இருக்கிறது. ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில் இன்றைய தினம் சர்சார்ஜ் மூலமாக அதிகமாக வரி விதிப்பதற்கு முடிவு செய்துவிட்டோம். இதை யெல்லாம் உணர்ந்து பார்க்கும்போது, விவசாய சம்பந்தமாக ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசா அதிகமாக வரியானாலும் கூட, அந்த வரி விதிப்பு விவசாயிகளைப் பாதிக்கக் கூடும். குறிப்பாக, சிமெண்ட் இண்டஸ்ட்ரீஸுக்கு அதிகமாக வரி விதிப்பதன் மூலமாக இதைச் சரிக்கட்ட முடியுமானால் விவசாயிகள் மனத்திலே ஒரு ஆறுதல் ஏற்படும் என்று நான் கருதுகிறேன். அதைப்பற்றி அரசாங்கம் தீர்க்கமாகப் பரிசீலனை செய்வதன் மூலமாக மற்ற வரி விதிப்பு காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மற்ற கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல, ஏதோ அவசர காலத்திற்கு என்று தனியாக, யுத்த கால வரி ஏன் விதிக்கக் கூடாது என்ற கேள்வி எழுந்தது. ஆனால், யுத்தத்திற்கு என்று தனியாக வரி விதிப்பதென்றால் அதை நபர்கள் பேரால் விதிப்பதா அல்லது வருமான அடிப்படையில் விதிப்பதா அல்லது வேறு எந்த அடிப்படையையாவது ஆதாரமாக வைத்துக் கொண்டு விதிப்பதா என்ற பிரச்னை எழும். அது மாத்திரமல்ல. ஒவ்வொருவரும் வரி விதிப்பதன் மூலமாக பாதிக்கப்படாமல் யாரோ சிலருக்கு, விவசாயிகள், தொழிலிலே இருக்கின்றவர்கள் இப்படி யாரோ சிலருக்குத்தான் இந்த வரி விதிப்பு ஏற்படுமே தவிர எல்லோரும் ஒட்டு மொத்தமாக இதனால் பாதிக்கப்படக்கூடிய நிலை வராது. அவர்கள் கூறுவது போல், யுத்த காலத்திற்கு என்று வரி விதிக்கும்போது எல்லோரும் நிச்சயமாக வரி கொடுக்கக்கூடிய நிலையில் இருப்பதாகக் கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு மிஞ்சி வரி கொடுக்க வேண்டிய அவசர கால நிலையில் வரி கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலைமை இப்பொழுது வந்துவிடவில்லை. இந்த வரி விதிப்பில் சிறு மாறுதல் செய்வதன் மூலமாக அதற்குத் தேவையான பொருள்களை ஈட்டிக் கொள்ள முடியும். இவற்றை யெல்லாம் கருதி இந்த வரியை அரசாங்கம் விதிக்க முன்வந்திருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகிற வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி காலத்தையொட்டி, நிர்வாகத்திலே ஏற்படுகிற செலவினங்களைச் சரிக்கட்டுவதற்காக நான்கு வகையாக வரி விதித்துத் தீர வேண்டிய இன்றியமையாமை இருக்கிறது என்பதைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுவும் டெல்லி அரசினர் இங்கே தருவதாக இருந்த தொகையில் 11 கோடி ரூபாய் துண்டு விழும் காரணத்தினால், அதனால் ஏற்படும் நிலைமைகளைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதற்காக இந்த வரிகளை விதிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

நான்கு வகைகளில் வரிகள் விதிக்கப்பட இருக்கின்றன. நான்கு வகை வரிகளும் மக்களைப் பாதிக்கக் கூடியவை தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம். நான்கு வகைகளில் மற்ற வரிகள் இந்த வரியைவிட மிக அதிகமாகப் பாதிக்கக்கூடியனவாகத்தான் அமைந்திருக்கின்றன. நெருக்கடி நிலைமையைப் பொறுத்து இப்படிப்பட்ட வரிகளை விதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தாலும், வேறு பல வகையிலே இவற்றையெல்லாம் சரிக்கட்ட இயலாதா என்பதை யோசிக்க வேண்டும். நெருக்கடி காலத்தையொட்டி இத்தகைய வரிகள் விதிக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. இந்த வரிகள் நெருக்கடி காலத்தோடு நின்றுவிடும் என்று எண்ணுவதற்கில்லை. கனம் உறுப்பினர் திரு. சங்கரன் அவர்கள் கூறியதைப் போலவும், கனம் உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் கூறியதைப் போலவும், செய்யலாம்—நெருக்கடி காலத்தைச் சமாளிக்க வேண்டிய அவசியச் செலவு அரசுக்கு அதிகம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து, அந்தச் செலவை ஈடுகட்ட அரசாங்கத்திற்கு நிதி தேவைப்படுகிறது என்பதையும் அறிந்து நிதி திரட்ட வேண்டியது தான். ஆனால் அந்த நிதியை எந்த எந்த வகையிலே திரட்டுவது என்பதைப் பொறுத்துத் தான் கருத்து வேறுபாடும் மாறுபாடும் இருக்கிறது. நிதியின் அவசியத்தை யாரும் மறுக்கவில்லை. ஆகையால், நெருக்கடி நிலைமையில் ஏற்படுகிற நெருக்கடிச் செலவுகளையும் மற்றவைகளையும் சமாளிப்பதற்காகத்தான் நிதி தேவைப்படுகிறது என்ற அடிப்படை இருக்குமானால், போர் கால வரி ( war tax) என்று ஒரு வித வரியை விதிக்கலாம். அப்படி சண்டை நீடிக்கும் அளவு அந்த வரி இருக்கும் என்ற நம்பிக்கையும், போர் கால நெருக்கடி நிலைமைகளைச் சமாளிப்பதற்காக இந்த வரி விதிக்கப்படுகிறது என்ற உணர்வோடு கொடுப்பதற்கும், போர் காலம் முடிவடைந்தால் அந்த வரி நின்றுவிடும் என்றும் நினைத்திருப்பார்கள்.

அவசர காலத்தையொட்டி போடப்படும் இந்த வரிகள் அவசர காலம் நீங்கிய பின் பின்வாங்கப்படும் என்று யாரும் எண்ணுவதற்கில்லை. வேறு பல சமாதானமும் காரணமும் சொல்லி இந்த வரியை மேலும் வளர்க்கவும், நீடிக்கவும், இதை மேலும் பயன்படுத்துவதற்கான நிலைமையையே ஏற்படுத்துவார்கள்.

இப்பொழுது விதிக்கப்படுகிற நான்கு வரிகளும் பொது மக்களைப் பாதிக்கக்கூடியனவாகவே அமைந்திருக்கின்றன. வரி விதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலையில், சாதாரண பொது மக்கள், ஏழை எளியவர்கள், பாட்டாளிகள், தொழிலாளிகள் அமையவில்லை. நான்கு வகை வரிகளில் இது ஓரளவு தான் பாதிக்கக்கூடிய வரி என்ற முறையிலே நாம் இதை ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரையில், விலை உயர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இங்கே தொழிற்சாலைகளுக்கு ஓர் அளவுக்குத்தான் வரி விதிக்கப்படுகிறது என்றும், தொழிற்சாலைகள் ஓரளவு தான் பாதிக்கக்கூடும் என்றும் இதன் காரணமாக உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலையை ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்படாது





என்றும் கனம் அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் தெரிவித்தார்கள். இந்த வரி விதிப்பு அப்படி ஏற்றுகின்ற அளவுக்குப் போகாது எறை நிலைமையில் அதைப் பொறுத்துக் கண்காணிப்பு இருக்கவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வரி விதிப்பிற்குப் பிறகும், இதைச் சாக்காகக் காட்டி உற்பத்திப் பண்டங்களின் விலைகளை ஏற்றாத அளவுக்குத் தடுத்து நிறுத்தி, இப்பொழுது உற்பத்திப் பண்டங்களின் விலை எந்த அளவிலே இருக்கிறதோ அதே . அளவில் இந்த வரி விதிப்பு ஏற்பட்டதற்குப் பிறகும் இருக்கும் முறையில் கண்காணிக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்று இப்பொழுதே நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மன்ற உறுப்பினர்கள் பலர் சுட்டிக் காட்டியது போல, விவசாயிகள் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு காசு அளவுக்குத் தான் வரி அதிகமாகக் கொடுக்கும் நிலைமை இருந்தாலும், விவசாயத்தைப் பெருக்குவதற்கான அவசியத்தை இந்த நெருக்கடி காலத்தில் நாம் வற்புறுத்தி வருகிறோம். விவசாயிகள் பல்வேறு வகைகளில் உற்பத்தியைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பல வகைகளில் அவர்களுக்குச் சலுகைகளும், மானியங்களும் அளித்து, வேளாண்மையைப் பெருக்குவதற்கான முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையில் விவசாயத்திற்கான எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டிய நேரத்தில், புது வரி சிறு அளவு இருந்தாலும் கூட, அவர்களைப் பாதிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

எனவே விவசாயத் துறையைப் பொறுத்த வரையில் இதிலிருந்து விலக்கு அளித்து, இதனால் துண்டு விழும் தொகையை வேறுபல வகைகளில் ஈடுகட்டிக்கொள்ள வழி இருக்குமா என்பதைப் பரிசீலிப்பது நலம். இது நீடித்து நிற்கின்ற வரியாக இருக்குமே தவிர போர் நின்ற பிறகு நீங்கிவிடும் என்று எதிர்பார்க்க வழியில்லை. மற்ற வரிகளை எல்லாம் விட இது கொஞ்சம் அதிக சிரமம் அளிக்காதது என்றாலும், விவசாயத் துறைக்கு விதிவிலக்கு அளிக்க வழி இருக்குமா என்பதைக் கண்டறிந்து திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி விதிப்பு சம்பந்தமாக ஒன்றிரண்டு பொதுவான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. 'வார் டாக்ஸ்' என்று போட்டுவிட்டால் சுலபமாக இருக்கும் என்று சொன்னார்கள். வார் டாக்ஸ் என்பதாக இந்த நாட்டில் உள்ள குடிமக்கள் அத்தனை பேர்கள் மீதும் வரி போடுவது என்றால் அதைவிட அநீதி வேறு கிடையாது. வரி கொடுக்கக் கூடிய சக்தி உள்ளவர்கள் இருப்பார்கள், இல்லாதவர்கள் இருப்பார்கள், எல்லோருக்கும் வரி என்பது நியாயமாகாது. 'வார் டாக்ஸ்' என்று வரி விதிப்பதானது இந்தக் காலத்தில் உள்ள வரி விதிக்கும் கொள்கைக்கே முற்றிலும் முரணானது. வரி என்று விதிக்கும்போது கொடுக்கும் சக்தி உடையவர்களின் மீது தான், அவர்களுக்கும் சுமையாக இல்லாத வகையில், விதிக்க வேண்டும். அந்த முறையில் எப்படி இந்த

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [6th November 1965

வரியை விதிக்கலாம் என்று யோசனை செய்தபோது எல்லா விவரங்களையும் வைத்துப் பரிசீலனை செய்தோம். கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் அவர்கள் பேசும்போது சிமிண்டுக்கு இன்னும் அதிகம் வரி விதிக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாம் என்றார்கள். அதுபற்றி எல்லாம் பரிசீலனை செய்தோம். குறிப்பாக சிமெண்ட், அலுமினியம், காஸ்டிக் சோடா, எலேக்யரோ கெமிகல் இண்டஸ்ட்ரி போன்ற தொழில்கள் எல்லாம் அதிக அளவுக்கு மின்சார சக்தியை உபயோகப்படுத்திக் கொள்கின்ற எனர்ஜைசிங் இண்டஸ்டரி ஆகும். உற்பத்திச் செலவில் மூன்றில் ஒரு பங்கு, 33 சதவிகிதத்தில் இருந்து 40 சதவிகிதம் வரை, அவர்கள் மின்சாரக் கட்டணத்திற்கே கொடுக்கும்படி இருக்கும். அந்தத் தொழில்களுக்கு அரைக்கால் பைசா வரியை உயர்த்துவது என்றாலும் அது மொத்தத்தில் ஏராளமாகப் போய் விடக் கூடும். இதைக் கணக்கிலே கொண்டுதான் எனர்ஜைசிங் இண்டஸ்ட்ரிகளுக்கு 5 சதவிகிதம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். இதற்கு மேல் உயர்த்தினால் அந்தத் தொழில்கள் பாதிக்கப்படும்.

அடுத்தது, விவசாயத்திற்கு உயர்த்தியிருக்கிறோம் என்று நாம் பேசுகிறோம். விவசாயிகளே தாங்களும் இந்த நாட்டினுடைய பாதுகாப்புகளுக்குத் தங்களாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதை மறுக்கமாட்டார்கள். மேலும் எல்லா விவசாயிகளுக்கும் இந்த வரியைப் போடவில்லை. பம்பு செட்டு வைத்திருக்கிறவர்களுக்குத்தான் இந்த வரி. பம்பு செட்டு போடாமல் ஏற்றத்தின் மூலமோ, கவலை கொண்டோ தண்ணீர் இறைத்து சாகுபடி செய்கிற விவசாயிகளைக் காட்டிலும் பம்பு செட்டு வைத்திருக்கிறவர்கள் அதிகம் சம்பாதிக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இவர்களுக்குக் கிடைக்கிற அதிக வருமானத்தில் ஒரு சிறு தொகையை வரியாகக் கொடுக்க வேண்டும் என்பதில் தவறு இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுவும் இப்போது நாம் ஒரு காசுதான் யூனிட்டுக்கு உயர்த்துகிறோம்.

அதோடு இன்னொரு விஷயம். மின்சார பட்ஜெட் விவாதத்தின் போது நான் அடிக்கடி குறிப்பிட்டு இருக்கிறேன். இன்றைக்கும் அந்தக் கருத்தை சபை அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு விவசாயத்திற்கு பம்பு செட்டு வைத்திருப்பவர்களுக்கு மின்சார சப்ளை அளிப்பதற்கு மின்சார போர்டாருக்கு ஒரு யூனிட்டுக்கு 14 பைசா அடங்குகிறது. விவசாயிகளிடத்தில் வசூல் செய்வது இந்த வரியையும் சேர்த்து யூனிட்டுக்கு 10 பைசா தான் இருக்கும். இது வரை நாம் அவர்களுக்குக் கொடுத்து வந்து கொண்டிருக்கிற சப்சிடியில் ஒரு பைசா இனி குறையும் என்பதைத் தவிர வரியை ஏற்றிவிட்டார்கள் என்று சொல்வது நியாயம் இல்லை. விவசாயத் தொழிலுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்தின் விலை—ட்ரான்ஸ்மிஷன், ட்ரான்ஸ்பார்மர், ஜென்ரேஷன் காஸ்ட் எல்லாவற்றையும் கணக்கிடுகிறபோது ஒரு யூனிட்டுக்கு 14 பைசா ஆகிறது. இந்த ராஜ்ய சர்க்கார் ஏற்கனவே மின்சார போர்டுக்குச் சொல்லியிருக்கிறார்கள், கிராமப்புறங்களில் மின் விஸ்தரிப்புச் செய்வதன் மூலமாக போர்டுக்கு மொத்தத்தில் நஷ்டம் ஏற்படுமானால் அதை



6th November 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ராஜ்ய நிதியில் இருந்தே ஈடு செய்கிறோம் என்பதாக. ஆகவே தான் விவசாயிகளைப் பொறுத்த வரையில் ஒரு யூனிட் சப்ளை செய்வதற்கு ஆகும் செலவைவிடக் குறைவாகவே அவர்கள் கொடுத்து வருகிறார்கள். இன்றைக்கு ஒரு பைசா கூட்டும்போது விவசாயிகளுக்குக் கிடைத்து வந்த சப்சிடியில் ஒரு பைசா குறையப் போகிறது. ஆகவே இதை யாரும் தாங்க முடியாத வரி விதிப்பு என்று சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் பொதுவாக இதை ஆதரிக்கத் தான் செய்தார்கள். குரல் தான் வேறாக இருந்தது. வேறு எந்த எந்த வகையில் வரி போட்டால் சிறப்பாக இருக்கும் என்பதாகத் தங்கள் தங்கள் கருத்தையும் வெளியிட்டார்கள். நாங்கள் இது பற்றிப் பரிசிலனை செய்தது, யார் மீது வரி விதித்தால் தாங்கக் கூடிய சக்தி இருக்கும் என்பது பற்றித்தான். பொதுவான கொள்கை வரி கொடுக்கக் கூடிய சக்தி உள்ளவர்கள் மீது விதிப்பது 'equity' என்று சொல்லுவார்கள். அந்த அடிப்படையில் அமைந்துள்ள இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965 (L.A. Bill No. 32 of 1965) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1965 (L.A. Bill No. 32 of 1965) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(5) THE MADRAS ENTERTAINMENTS TAX (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 29 OF 1965).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 * (L.A. Bill No. 29 of 1965) be taken into consideration.'

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965) be taken into consideration.'

* Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 3rd November 1965.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது வரி விதிக்கின்ற மசோதா அல்ல. நல்ல கண்காணிப்பை ஏற்படுத்துவதற்கு சட்டத்திலே சில மாறுதல்களைச் செய்கின்ற ஒன்றாகும். இது தமாஷா வரியைப் பாதுகாத்துக் கொள்ள வருகின்ற மசோதா. இந்த மசோதாவில் நான்காவது பாராவில் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் திருத்தப்படி காம்ப்ளிமெண்டரி டிக்கெட் கொடுத்தால் கூட அந்த டிக்கெட் அடிப்படையில் தமாஷா வரியைக் கொடுக்க வேண்டும் என்பதாகும். இப்போது பெருவாரியாகக் காம்ப்ளிமெண்டரி டிக்கெட்ஸ் கொடுக்கப்படுகின்றன. நம்முடைய நோக்கம் யார் அனுபவிக்கின்றார்களோ அவர்கள் எல்லாம் இந்த தமாஷா வரியைக் கொடுக்க வேண்டும் என்பது. பணமும் கொடுக்காமல் பார்த்துவிட்டு, வரியும் கொடுக்காமல் போவது நியாயம் இல்லை. ஆகவேதான் காம்ப்ளிமெண்டரி டிக்கெட் மீதும் தமாஷா வரியைச் செலுத்த வேண்டும் என்கிற மாறுதலைச் செய்கிறோம்.

1-00 a.m. இரண்டாவது, ஒரு சினிமாவிற்கோ அல்லது தமாஷாவரி போடுகின்ற நிகழ்ச்சிகள் நடக்கின்ற இடத்திற்கோ அதிகாரிகள் போய்ப் பரிசோதனை செய்ய வேண்டுமென்றால் இப்போதுள்ள சட்டத்தின்படி டிக்கட் இல்லாமல் போவதற்கு வழியில்லை. யாரும் டிக்கட் வாங்கிக் கொண்டுதான் போக முடியும் என்ற நிலைமை இப்போது இருந்து கொண்டு இருக்கிறது. அதை மாற்றி அதிகாரிகள் தங்களுடைய அதிகார நிர்வாக பொறுப்பில் பரிசோதனை செய்யப் போகும்போது—அதாவது அந்த நிகழ்ச்சிகள் நடக்கின்ற இடத்திற்கு போக வேண்டும் என்றால் அவர்கள் டிக்கட் இல்லாமல் போகலாம் என்று விதியை மாற்றி அமைத்திருக்கிறோம். மூன்றாவது, இதுவரையிலும் வரிவிதிப்பில் சில ஏமாற்றல்கள் இருக்குமானால், அதாவது வரி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்குமானால்—இப்போதுள்ள முறைப்படி விற்பனை வரி சட்டத்தில் கணக்குகளைத் திரும்பவும் பார்ப்பதற்கு இடமிருக்கிறது. இந்தச் சட்டத்தில் எஸ்கேப் அஸெஸ்மெண்ட் செய்வதற்கு இடமில்லை. அப்போது இந்தச் சட்டத்தை இயற்றும்போது அதற்கு வழிவகை செய்யப்படவில்லை. பொது விற்பனை வரி சட்டத்தில் இதற்காக வழிவகை செய்திருக்கிறோம். அதேபோல் இதிலும் இப்போது 'எஸ்கேப் அஸெஸ்மெண்ட்' செய்வதற்கு வழிவகை செய்திருக்கிறோம்.

அடுத்தாற்போல், யாராவது சினிமாக் கொட்டகைக்குள் டிக்கட் இல்லாமல் இருந்தால் அவர்கள் தவறாக அனுமதிக்கப்பட்டார்கள், அதாவது நிர்வாகஸ்தர்களோ அல்லது ஊழியர்களோ அனுமதித்தார்கள் என்று 'ப்ரிஸம்ஷன்' செய்ய வேண்டும் என்று விதியைப் போட்டிருக்கிறோம். ஏனென்றால், கோர்ட்டில் சில தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அதிகாரிகள் கொட்டகைக்குள் சென்று கண்டுபிடிக்கும்போது அவர்கள் டிக்கெட் இல்லாமல் அனுமதிக்கப்பட்டார்கள் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ப்ராசிக்யூஷனுக்கு இருக்கிறது. அதை மாற்றி டிக்கட்





இல்லாமல் இருந்தால் அவர் என்ன காரணத்தின் பேரில் அவ்வாறு இருந்தார் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு கொட்டகைக்காரர்களைச் சார்ந்தது என்று விதியை மாற்றி அமைத்திருக்கிறோம். இப்போதுள்ள விதிப்படி அவர்கள் எந்த நோக்கத்தோடு இருந்தார்கள் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது, இனிமேல் அந்தப் பொறுப்பைக் கொட்டகைக்காரர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மாற்றி அமைத்திருக்கிறோம். அதோடு டிக்கட் இல்லாமல் இருந்தால் அதற்காக 500 ரூபாய் ஃபைன் என்று போட்டிருந்தோம். இப்போது அதை அதிகரிக்க வேண்டும் என்று எண்ணி 1,000 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம். இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move the following amendment :—

"That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965) be referred to a Select Committee consisting of the following fifteen Members :—

The Hon. Sri R. Venkataraman.
Sri N. Shanmugasundaram.
Sri K. Narayanaswami Pillai.
Sri A. Senapathi Gounder.
Srimathi A. S. Ponnammal.
Sri C. Sreenivasan.
Sri S. Ponnusami.
Sri A. Ramachandra Rayar.
Sri K. S. Mani.
Sri Rama. Arangannal.
Sri R. Nallamuthu.
Sri P. U. Shanmugam.
Sri C. Chiranjeevulu Naidu.
Sri N. Chinnamunuswami Chetti.
Sri P. Ramachandran."

The amendment was duly seconded.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தமிழ் நாடு கேளிக்கை (திருத்த) மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தத்தின் மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவின் நோக்கத்தைப் பற்றித் தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இது வரவேற்கத் தகுந்த ஒரு மசோதா. நெடுநாளாக இந்த சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் இப்படிப்பட்ட முற்போக்கான கருத்துக்களை வற்புறுத்தி வந்திருப்பது இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். இலவசமாக, டிக்கெட் இல்லாமல் காட்சி பார்ப்பவர்களிடமிருந்து சரியாக வரியை வசூல் செய்யவேண்டும் என்பதும், அதிலும் குறிப்பாக

இப்போதுள்ள நெருக்கடியான காலத்தில் இதற்கு வழிவகை கண்டுபிடிக்க ஆராய வேண்டியதும் மிகவும் வரவேற்கத் தகுந்த அம்சம்தான். அதேபோல் இந்த மாதிரியான வரிகளை சினிமாக் கொட்டகைக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள், அவற்றைக் கண்டு பிடிப்பதற்கு இப்போது நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தில் நல்ல வரம்பு முறைகள் இல்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களே உணர்ந்திருக்கிறார்கள். இதை அனுபவத்தில் பார்த்த பின்னால் விற்பனை வரி, கேளிக்கை வரி இவைகளில் பல ஏமாற்றல்கள் நடைபெறுகின்றன, இந்த வரிகளை சரியான முறையில் வசூலிக்க முடியவில்லை என்ற நிலைமை இருந்து வருகிறது. இதற்காக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் திருப்தி அளிக்கிற வகையில் இந்த மசோதா இந்த மன்றத்தில் வந்திருக்கிறது. நாட்டில் நடைபெறுகிற சில நிகழ்ச்சிகளைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. பரமக்குடியில் ஒரு சினிமாக் கொட்டகையில் இருந்த 500 பேர்களும் டிக்கட்டே வாங்கவில்லை. அதே போன்று இன்னொரு கிராமத்தில் அதாவது பவானிக்கு அருகிலுள்ள ஒரு கொட்டகையில் பார்த்தபோது பாதிப்பேர் டிக்கட்டு இல்லாமல் இருந்தார்கள். கணக்குகளையும் தவறாக வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று கேள்விப்படுகிறோம். இதன் காரணமாக நியாயமாக நம்முடைய அரசாங்கத்தினுடைய கருவூலத்திற்கு வரவேண்டிய வருமானம் விரயமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். ஆகவே, இது போன்ற சட்டங்கள் கொண்டு வரவேண்டும் என்று நாம் பல முறை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். கேளிக்கை வரி சரியாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது இலவசமாக யாரும் கேளிக்கைப் பார்க்கக் கூடாது என்பது பொருள் அல்ல. வசூல் செய்யவேண்டிய வரியை சரியாக வசூல் செய்யாமல் ஏமாற்றுவதைத்தான் நாம் தடுக்கிறோம். இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்குப் போகிறது. இதில் நாம் மிக முக்கியமாகச் சொல்ல விரும்புவது—அதாவது சில தினங்களுக்கு முன்னால் என்னிடம் ஒரு சினிமா அதிபர் பேசிக்கொண்டிருந்தார். அவர் சொன்னார்—அவர் சொன்ன தகவல்கள் திடுக்கிடும்படியாக இருந்தது 'கள்ளப் பணம் கள்ளப்பணம்' என்று பேசுகிறார்கள், ஆனால் இந்தக் கள்ளப் பணம் கிராம சினிமாக் கொட்டகைகளில் இருந்துதான் கிராமங்களிலிருந்துதான் உற்பத்தியாகிறது. அதிலும் கிராமங்களிலுள்ள சினிமாக் கொட்டகையிலிருந்துதான் இந்தக் கள்ளப் பணம் உதயமாகிறது. ஒவ்வொரு சினிமா தியேட்டரிலும் வரியிலிருந்து ஏய்க்கிற பணம் ரூ. 500, ரூ. 250 என்று ஒவ்வொரு நாளும் பெருகி பெரிய அளவில் கருப்புப் பணமாக மாறுகிறது' என்று தெரிவித்தார். இதைத் தடுக்கின்ற முறையில் இயற்றப் பட்ட சட்டங்களில் பலவீனங்கள் இருக்கின்றன. இதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆகவே இது போன்ற கேளிக்கை வரிகளை சரியான முறையில் வசூல் செய்தால் இப்போது கொண்டு வரப்பட்ட மின்சாரக் கட்டண உயர்வுச் சட்டம் கூடத் தேவையில்லை, அதே போன்று விற்பனை வரியையும் சரியாக வசூல் செய்துவிட்டால் நமக்குப் போதுமான வருமானம் கிடைக்கும்.





இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்குப் போகிறது. அங்கே பல மேலான ஆலோசனைகள் வரும், அதன்படி இந்த மசோதாவை நல்ல முறையில் அமைக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தத்தை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா பொறுக்குக் குழுவுக்குப் போகிறது என்ற காரணத்தால் இதன் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் திருத்த மசோதாவில் பல நல்ல அம்சங்களைப் பார்க்கிறோம். யாரும் பணம் கொடுக்காமல் கேளிக்கைகள் பார்க்கக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பணம் கொடுக்காமல் கேளிக்கை பார்க்கக் கூடாது என்று சொல்லவில்லை. சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய வரியைக் கொடுக்காமல் பார்க்கக் கூடாது என்று சொல்லுகிறோம்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஓரளவுக்கு சலுகை இருக்கத்தான் செய்கிறது. ரயில்வேயை எடுத்துக் கொண்டால் அந்த டிபார்ட்மென்டிலுள்ளவர்களுக்கு இலவசமாக ரயிலில் போவதற்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் எல்லா இடங்களிலும் சிறு சிறு சலுகைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அதிகமாக வரி ஏய்ப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் தான். ஆகவே ஒவ்வொரு தியேட்டருக்கும், ஐந்து டிக்கட், அல்லது பத்து டிக்கட் இலவசமாகக் கொடுக்கலாம் என்று ஒரு லிமிட் செய்து விட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். இல்லையென்றால் எதற்கும் டிக்கட் வாங்கிவிட்டு தான் உள்ளே போகக்கூடிய நிலைமை இருக்கும். கனம் அமைச்சர் போன்றவர்களை ஏதாவது நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்றாலும் டிக்கெட் வாங்கிவிட்டுத்தான் அழைத்துச் செல்லக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே தனியாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு காம்ப்ளிமென்டரி என்ற வகையில் ஏதாவது சலுகை இருப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக டிக்கட் இல்லாமல் இருந்தால் நாம் கடுமையான தண்டனை கொடுத்திருக்கிறோம். இதைச் சரியாக நிறைவேற்ற முடிகிறதா என்று பார்க்க வேண்டும். ஒரு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் வருவார், அவர் பெண்சாதியோடு வந்திருப்பார். அவரிடம் வேண்டுமென்றால் டிக்கட் இல்லாமல் இருக்கலாம், அதே நேரத்தில் அவருடைய மனைவியாரிடத்தில் டிக்கட் இருக்கிறதா என்று கேட்பதற்கு அந்த சினிமாக் கொட்டகைக்காரருக்குத் தைரியம் இராது. இந்த விதத்தில் வரி இல்லாமல் ஏய்ப்பதற்கும் வழி ஏற்பட்டுவிடும். ஆகவே சினிமாக் கொட்டகைக்காரர்களுக்கென்று தனியாக ஒரு டிக்கட் அல்லது

இரண்டு டிக்கட் என்று கொடுத்துவிட்டால் அதில் எந்தவிதமான தவறும் ஏற்பட்டு விடாது என்று நினைக்கிறேன். பிற துறைகளில் எல்லாம் சலுகைகள் இருக்கும்போது சினிமாக் கொட்டகைக் காரர்களுக்கு மட்டும் இத்தகைய ஒரு கெடுபிடியான நிலைமையை ஏற்படுத்தக் கூடாது என்பது தான் என்னுடைய கருத்து. வரி ஏய்க்கிறவர்கள் இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். ஏய்க்கிறவர்கள் எங்கும் இருப்பார்கள். சினிமாத் துறையில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் ஏய்க்கின்றவர்கள் இருப்பார்கள். நாமும் அதைக் கண்டு பிடிக்கத்தான் வேண்டும், இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் அதே சமயத்தில் சில பேர் இதில் மாட்டிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது. சாதாரணமாக, 5,000 ரூபாய், அல்லது 10,000 ரூபாய் என்று முதல் போட்டு டூரிங் சினிமா நடத்தக்கூடியவர்கள் இதனால் எந்த அளவுக்குப் பாதிக்கப் படுவார்கள் என்பதைப் பற்றி திருச்சியிலே பல மனுக்களை நமது அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் அதிகமாக்கிவிட்டோம், இதைத் தவிர, ஷோ டாக்ஸ் முன்பு இருந்ததைவிட மூன்று பங்காக அதிகமாக மாற்றினோம். இப்படி அதிகமாக டாக்ஸ் போட்டுக் கொண்டே இருப்பதனாலே, நியாயமாகத் தொழில் நடத்தக் கூடியவர்கள்கூட நஷ்டம் ஏற்பட்டுத் தொழிலை விட்டுவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதை அவர்கள் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சினிமாத் தொழிலை நடத்தக்கூடியவர்களை அதிகமான கெடுபிடிக்கு உள்ளாக்குவது அவசியமா என்பதை யோசிக்க வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் வசூலிப்பதில் ரீஅசஸ்மெண்ட் செய்யலாம் என்று ஒரு ஷரத்து இருப்பதைப்போல், இந்தத் தொழிலிலும் வரி ஏய்ப்பவர்கள் என்று பின்னால் தெரிய வந்தால் ரீ அசஸ்மெண்ட் செய்யலாம் என்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலை நடத்தக்கூடியவர்கள் ஏற்கனவே ரிட்டர்ன்ஸ் எல்லாம் கொடுத்துக் கணக்குகள் எல்லாம் சரி பார்த்த பிறகு, மறுபடியும் ரீ அசஸ்மெண்டுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. டூரிங் சினிமாத் தொழிலை நடத்துபவர்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் ஒரு வருஷம் தொழிலை நடத்துவார்கள், அடுத்த வருஷம் பார்த்தால் அவர்கள் ஆளே அட்ரஸ் இல்லாமல் இருப்பார்கள். அதேமாதிரி, இந்த டிஸ்ட்ரிபியூஷன் கம்பெனிகளும் காளான் மாதிரி முளைத்துக் கொண்டே இருக்கும். ஆறு மாதங்களுக்குப் பிறகு பார்த்தால் இருந்த இடம் தெரியாமல் புகைந்து போயிருக்கும். ஆகவே, இந்த டூரிங் சினிமாத் தொழில் ஒரு நிரந்தரமான தொழில் அல்ல. திடீர் பணக்காரர்கள் உண்டாவதும் திடீர் பிச்சைக்காரர்கள் ஆவதும் இந்தத் தொழிலிலேதான் சாதாரணமாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட தொழிலை நடத்தக் கூடியவர்களிடம், நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்குப் பிறகு 'நீங்கள் முன்பு ஒரு வருஷத்தில் வரி ஏய்த்திருக்கிறீர்கள்' என்று புகார் வந்திருக்கிறது, ஆகவே ரீஅசஸ்மெண்ட் செய்யவேண்டு



மென்று சொல்லி நடவடிக்கை எடுத்தால் அவர்கள் மிகவும் தொல்லைக்கு உள்ளாவார்கள். ஏனென்றால் இந்த டூரிங் சினிமாத் தொழிலிலே ரைவல்ரி ரொம்ப அதிகம். ஒரு சினிமாக்காரருடைய கழுத்தை நெரிப்பதற்கு மற்றொரு சினிமாக்காரர் பார்ப்பார். அவருடைய கழுத்தை நெரிப்பதற்கு மற்றொருவர் பார்ப்பார். இவர்களுக்கு இடையே ஏற்படுகின்ற, சண்டை, பொறாமை இவைகளின் காரணமாக யாராவது ஒருவர் வேண்டுமென்றே புகார் செய்துவிட்டால், அந்தப் புகாரை வைத்துக் கொண்டு அதிகாரிகள் அவர்களிடம் போய் 'நீங்கள் 1960-ஆம் வருஷத்தில் வரி ஏய்த்திருக்கிறீர்கள்' என்று கெடுபிடி செய்வது, ரிட்டர்ன்ஸ் சப்மிட் பண்ணி இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து இந்தமாதிரி, ரீஅசஸ்மெண்ட் செய்து பணத்தைக் கட்டு என்றால் அவர்கள் தங்களுடைய வீட்டுச் சாமான்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும்தான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே இந்த மாதிரியான அதிகாரத்தை அதிகாரிகளுக்குக் கொடுத்தால் சில சமயங்களில் பலவிதமான சங்கடங்கள் ஏற்படும். இந்தத் தொழிலும் நசித்துப் போய்விடும். சேல்ஸ் டாக்ஸ் என்றால் அது இப்படிப்பட்டதல்ல, அதிலே கடை வைத்திருந்தவர்கள் நான்கு ஐந்து ஆண்டுகளுக்காவது வைத்திருப்பார்கள், அவர்களிடம் ரீஅசஸ்மெண்ட் பண்ணி பணத்தைக் கொடு என்று கேட்டால் கொடுத்து விடுவார்கள். ஆனால் இந்த சினிமாத் தொழில் அப்படியில்லை. தொழில் நசித்துப்போய்விட்டது என்றால் ஆளும் நசித்து போய்க் கொண்டே இருப்பார். இந்தத் தொழிலிலே ரீ அசஸ்மெண்ட் பண்ண வேண்டுமென்று வைத்தால், அதிகாரிகள் நல்லவர்களாக இருந்தால் பரவாயில்லை, அதிகாரிகள் நல்லவர்களாக இல்லாமல் இருந்தால், அந்தத் தொழிலை நடத்தியவர்களுக்குத் தீமைகள் வந்துசேரும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைத்தவிர, அப்படி ரீ அசஸ்மெண்ட் செய்ய வேண்டுமென்றால் எத்தனை மாதத்திற்குள்ளாகச் செய்யவேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட கால அளவு, ஆறு மாதங்கள் என்ற அளவில், வைத்தால் நல்லது. இந்த இரண்டு விஷயங்களைப் பற்றியும் பொறுக்குக் குழு நன்றாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, டிக்கட் இல்லாமல் சினிமாவிற்குள் போய் உட்கார்ந்துவிட்டால், அதற்கு ஃபைனாக ஆயிரம் ரூபாய் வரையில் போடலாம், இல்லாவிட்டால் 500 ரூபாய் போடலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"Provided that in the absence of special and adequate reasons to the contrary to be mentioned in the judgment of the Court, such fine shall not be less than five hundred rupees in the case of an offence. . . ."

என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது ஏதாவது ஸ்பெஷல் ரீஸன்ஸ் இருந்து, ஜட்ஜ் அவர்கள் அந்த மாதிரி குறைத்துப் போடலாம் என்று ஜட்ஜ்மெண்ட் கொடுத்தால் குறைவாகப் போடலாம், இல்லாவிட்டால் 500 ரூபாய் போடலாம்,

*[திருமதி டி. என் அனந்தநாயகி]* [6th November 1965

ஆயிரம் ரூபாய் வரைகூடப் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை வைத்துக்கொண்டு ஒரு சினிமாக்காரருக்கு வேண்டாதவர் நாக்கு போக்கிரிகளைக் கூப்பிட்டு 'நீங்கள் எல்லாம் டிக்கெட் இல்லாமல் உள்ளே போய் உட்காருங்கள்' என்று சொல்லி விட்டு, அதே சமயத்தில் அதிகாரிகளுக்கும் ஹிண்ட் கொடுத்து விட்டு, வேண்டுமென்றே ப்ரொப்ரைட்டருக்கு 500 ரூபாய், 1000 ரூபாய் வரையில் ஃபைன் போட்டால் அது நடைமுறையில் மிகுந்த தொல்லையைக் கொடுக்கும். நான் மட்டும் இதைச் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் நன்றாகத் தெரிந்திருப்பார்கள். நான் சொல்லக்கூடியவற்றையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் 500 ரூபாய் 1,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்வது சாதாரணக் காரியமல்ல. சட்டப்படிதான் குற்றவாளியைக் கட்டுப் படுத்தவேண்டும். குற்றவாளி தானே தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளமுடியாது. Onus of proof is always on the prosecution என்று சொல்வார்கள். அதை விட்டு விட்டு பிரஞ்சு லா மாதிரி Onus of proof is on the proprietor என்ற முறையில் இருக்கக் கூடாது. ஆகவே, கசப்பினாலோ, அல்லது எதிர்ப்பினாலோ வேண்டுமென்றே நான்கு பேர்களை சினிமாவுக்குள் போய் டிக்கட் இல்லாமல் உட்காரச் சொல்லிவிட்டு அதிகாரிகளுக்கு ஹிண்ட் கொடுத்து, அவர்கள் எல்லோரும் கோர்ட்டும் கையுமாகப் போய் நின்று கொண்டிருந்தால் தொழில் நடத்த முடியாது. பொன் முட்டை இடுகிறது வாத்து என்றால், நாம் கொஞ்சம் கொஞ்சமாகப் பொன் முட்டையைப் பெற்றுக் கொண்டிருக்கவேண்டுமே தவிர, ஒரே நாளில் நிறையப் பொன் முட்டைக்கு ஆசைப்பட்டு அந்த வாத்தை வெட்டித் தீர்த்து விட்டால் எல்லாமே போய்விடும். ஆகையால் இதையும் யோசித்து, சட்டத்திலே சங்கடங்கள் இல்லாத அளவிலே பொறுக்குக் குழு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு வை. சங்கரன்** : கனம் சபாநாயகர் அவர்களே, காம்ப்ளிமெண்டரி டிக்கட் மூலம் மேற்கொண்டு தனியாக எதற்கு வரி விதிக்க வேண்டுமென்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. காம்ப்ளிமெண்டரி என்றாலே 'இலவசம்' என்பதுதான் பொருள். ஆகவே, அதற்கு வரி வசூல் பண்ண வேண்டும் என்று சொன்னால் காம்ப்ளிமெண்டரி என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும். அந்த வரியை யார் கொடுப்பது, சினிமா போகிறவர்களா அல்லது சினிமா ப்ரொப்ரைட்டர் தன்னுடைய கையைவிட்டுக் கொடுக்க வேண்டுமா என்பது புரியவில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : The tax is levied on the cinema, and the cinema man will have to pay. We have no objection to his issuing any number of complimentary tickets so long as he pays the tax.

**திரு. வை. சங்கரன்** : அந்த மாதிரிப் பண்ணுவதைவிட, ஒரு அளவுக்கு அதாவது ஒரு சினிமாவுக்கு இத்தனை காம்ப்ளிமெண்டரி டிக்கட்தான் கொடுக்கலாம் என்று தீர்மானம் செய்துவிடலாம்.



6th November 1965] *[திரு. வை. சங்கரன்]*

இரண்டாவதாக மற்ற புரொவிஷன்கள் எல்லாம் கடுமைப்படுத்தப் பட்டிருக்கின்றன. கடுமைப்படுத்தப் பட்டிருப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. அப்படியிருந்தால்தான் சமாளிக்க முடியும். டூரிங் சினிமாக்களைப் பொறுத்த வரையில் இரண்டு குறைகள் இருக்கின்றன. இவைகளை பொறுக்குக் கமிட்டி நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். இந்த டூரிங் சினிமாக்களிலே அதிகாரிகள் சிறு குறைகளைக் கண்டுவிட்டால் கூட அதற்காக அந்த சினிமாவினுடைய லைசென்ஸை கேன்சல் பண்ணுவதற்கும், அல்லது சஸ்பெண்ட் பண்ணுவதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஒரு சினிமாக்காரருக்கு ஒரு அதிகாரி பிடிக்காதவராக இருந்தால், அந்த அதிகாரி அந்த சினிமாவினுடைய லைசென்ஸை கேன்சலோ அல்லது சஸ்பெண்ட் பண்ணியோ விடுவார். இதையும் கண்காணிக்க வேண்டும். பொதுவாக டூரிங் சினிமாக்காரர்களுக்குப் பலவித வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர லோக்கல் பாடிஸ், அதாவது பஞ்சாயத்துக்களும் 100-க்கு 100 வரி போட்டுக் கொள்ளலாம் என்று இருக்கிறது சில இடங்களில். ஆனால் இது நடைமுறையில் சங்கடமாக இருந்து வருகின்றது. ஆகவே இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றிக் கிராமப்புறங்களிலே டூரிங் சினிமா நடத்தக்கூடியவர்கள் தங்களுடைய கோரிக்கையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பலவிதமான வரிகளை அவர்கள் கட்ட வேண்டியிருப்பதால் கட்டுபடியாகவில்லை என்று பொதுவாகச் சொல்கிறார்கள். ஆகவே, இதையும் நன்றாகப் பரிலசீலனை செய்ய வேண்டும். முன்னாலே பேசிய அம்மையார் சொன்னது மாதிரி To kill the goose that lays golden eggs என்ற முறையில் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் மீது அதிகமான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தக் கூடாது. டூரிங் சினிமாக் கொட்டகை நடத்துகிறவர்கள் பஞ்சாயத்து வரி மற்ற வரிகள் எல்லாவற்றையும் கட்டி விட்டுப் பார்க்கும்போது அவர்களுக்கு வட்டி கூடக் கட்டுபடியாவதில்லை என்ற நிலைமை இருப்பதாகப் பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும். அரசாங்கம் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து எந்த முறையில் பரிகாரம் கொடுக்க முடியும் என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமாஷா வரித் திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா வருவதாக வெளிப் படுத்தியபோது, இப்போது கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அம்சங்கள் தவிர, வேறு சில முக்கியமான விஷயங்களையும் இந்த மசோதா உள்ளடக்கி இருக்கும் என்று எதிர் பார்த்தேன். தமாஷா வரி வசூலில் பஞ்சாயத்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இருக்கக் கூடிய விகிதாசாரங்களிலே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பஞ்சாயத்துப் பகுதியிலே சினிமா நடந்து கொண்டிருக்கும். அந்தப் பஞ்சாயத்துக்குத்தான் லைசென்ஸ் கொடுக்க வேண்டிய கடமையும் உண்டு. நான் அறிந்த

சில பகுதிகளில், குறிப்பிட்ட எந்தப் பஞ்சாயத்துப் பகுதியில் சினிமா நடந்து கொண்டிருக்கிறதோ அதற்குக் குறைவான விகிதாசாரமும், பக்கத்தில் இருக்கக் கூடிய சில பஞ்சாயத்துக்களுக்கு அதிக விகிதாசாரமும் தமாஷா வரி வசூலிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஆழ்வார் திருநகரியில் திருக்கழூர் பஞ்சாயத்தில் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மசோதா அதற்கும் ஒரு பரிகாரம் காணும் வகையில் விரிவாக வந்திருக்க வேண்டும். எந்தப் பஞ்சாயத்துப் பகுதியில் சினிமா நடக்கிறதோ அந்தப் பஞ்சாயத்துக்கு அதிக விகிதாசாரம் ஒதுக்கும் வகையில் ஒரு நியதியை இந்த மசோதாவிலேயே சேர்க்க முடிந்தால் பொறுக்குக் குழுவினர் ஆராய்ந்து மற்றப் பக்கத்திலுள்ள பஞ்சாயத்துக்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமா, கொடுக்க வேண்டுமென்றால் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் உருவான முடிவை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்போதுள்ள நிலை ஸ்தல ஸ்தாபனங்களுக்கிடையே மன மாச்சரியங்களை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

இந்த மசோதாவைப் பார்த்தவுடனேயே சினிமாக் கொட்டகைச் சொந்தக்காரர்களுக்கு ஒரு ஆறுதல் ஏற்படக் கூடிய பகுதி இருக்கிறது. காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுப்பதற்கு உள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றப்படி உள்ள நல்லவர்கள், வல்லவர்கள் எல்லாம் இதைப் பயன்படுத்திக் கொண்டு உயர்ந்த வகுப்பு டிக்கட்டுகள் எல்லாம் பெரும்பான்மை ஓசி டிக்கட்டுகள் என்ற நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். காம்ப்ளிமெண்டரி டிக்கட்டுகளுக்கும் கொட்டகைக்காரர் வரி செலுத்த வேண்டுமென்று வரும்போது இந்த மாதிரிச் சிரமங்கள் தீரும் என்று நினைக்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஒருவர் சாதாரணக் குற்றங்களுக்காக லைசன்ஸை ரத்து செய்து விடுவதா என்ற கவலை தெரிவித்தார்கள். இந்த மாதிரி தவறு செய்கிற தியேட்டர் சொந்தக்காரர்கள் கேஸைக் கோர்ட்டில் போட்டுவிட்டு தியேட்டருக்கு எந்த விதமான பங்கமும் இல்லாமல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்படுமானால் தவறு செய்பவர்களைப் பொது மக்கள் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? கள்ள டிக்கட் அடித்து விற்கக் கூடிய தியேட்டர்களை சீல் வைத்து கொஞ்ச நாட்களுக்காவது மூடி வைத்தால்தான் பொதுமக்களுக்கும் தவறு நடந்திருப்பது தெரியும். வாங்குகிற டிக்கட் சரியானதுதானா என்று பார்க்கக் கூடிய நிலைமை ஏற்படும். காம்ப்ளிமெண்டரி டிக்கட்டுக்கு வரி கொடுக்க வேண்டுமென்று செய்யும்போது, அந்தத் தியேட்டர்களில் வேலை செய்யக் கூடிய ஊழியர்களை எந்த விதமான சிரமமும் இன்றி அடையாளம் தெரிந்து கொள்வதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டும்.



சமீப காலத்தில் சில தியேட்டர்களில் அதிகாரிகள் நுழைந்து சர்ச் செய்தபோது அந்த மாதிரி சர்ச் செய்ய அதிகாரம் இல்லை என்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போதுள்ள மசோதாப்படி அந்த அதிகாரம் வழங்கப்பட்டதற்குப் பிறகு முன்பு செய்த சர்ச்களின் மூலம் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்குமானால் அதை 'வாலிடேட்' செய்யுமளவுக்கு, அரசாங்கம் செய்தது சரியானதுதான் என்று நிரூபிக்கும் அளவுக்கு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றியும் கூட பொறுக்குக் கமிட்டி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 500 ரூபாய் அபராதத் தொகையை ஆயிரம் ரூபாய் என்று ஆக்கியிருப்பதில் தவறு ஒன்றுமில்லை. அது தவறு செய்யாமல் இருக்க வழி செய்வதோடு வருமானத்தை அதிகரிக்கவும் வழியாக இருக்கும். இதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை எந்த வகையில் பங்கிடு செய்வது என்பதைப் பொறுத்து, சினிமா நடந்து கொண்டிருக்கும் பஞ்சாயத்துப் பகுதிக்கு அதிகப் பங்கை ஒதுக்கிக் கொடுப்பதற்கான வழியைச் செய்ய வேண்டுமென்று பொறுக்குக் கமிட்டிக்கு ஆலோசனை சொல்லி இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது செலக்ட் கமிட்டிக்கும் போகும்போது எனது கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். தியேட்டர்களில் காம்ப்ளிமெண்டரி பாஸ் கொடுக்கப்படுவதற்கும் வரி செலுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்தத் தொழிலிலுமே காம்ப்ளிமெண்டரி என்பது உண்டு. அதற்குக் கூட நீ வரி செலுத்த வேண்டுமென்றால் அது என்ன முறை என்று எனக்குப் புரியவில்லை. தோட்டம் வைத்திருக்கக் கூடியவர்கள் தங்களுடைய தோட்டத்துக் கத்தரிக்காயை வேண்டியவர்களுக்குக் கொஞ்சம் கொடுக்கும்போது அதற்குக் கூட வரி கட்டு என்றா சொல்வது? காம்ப்ளிமெண்டரி டிக்கட் 10 தான் கொடுக்க வேண்டும், அல்லது 20 தான் கொடுக்க வேண்டும் என்று வரையறை செய்யலாம். ஊரில் இருக்கக் கூடிய பெரிய மனிதர்கள், பஞ்சாயத்து போர்டில் இருப்பவர்கள் ஆகியோருக்குக் காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுப்பார்கள். அதற்கு வரி போடக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அபராதத் தொகையை 500-லிருந்து ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். போன சட்ட மன்றக் கூட்டத்தில் கூட ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். எந்தக் கொட்டகையிலாவது தவறான முறையில் டிக்கட் விற்றால் லைசன்சையே கான்சல் பண்ணி விடுவது என்று சட்டமியற்றினார்கள். இதுவரை எங்கேயும் அந்த மாதிரி லைசன்சைக் கேன்சல் பண்ணியதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் ஏன் இந்த அபராதத் தொகையை அதிகப்படுத்த வேண்டும்? இதைக் கண்காணிக்கச் செல்லுகிற அதிகாரிகள் நல்லவர்களாக இருந்தால் பரவாயில்லை. ஆசைப்பட்ட அதிகாரியாக இருந்தால் 200 ரூபாய் வாங்கிக் கொண்டு அபராதம் 500 ரூபாய்

என்று போட்டு விடுவார். அப்படி மிஸ்-அப்ரோப்ரியேஷன் நடக்கலாம். ஆகவே, இந்த அபராதத்தை ஏன் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, கேளிக்கை வரி மசோதா கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்ற திருத்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்துள்ளேன். அதையொட்டிச் சில கருத்துக்களை வழங்க விரும்புகிறேன். இந்த கேளிக்கை வரி திருத்த மசோதாவின் தன்மையை உறுப்பினர்கள் அனைவரும் தெளிவாக உணர்வார்கள். இந்தத் திருத்த மசோதாவின் முழு விவரங்களையும் இந்த மன்றம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடுவதன் மூலம் இதன் சாதக பாதக பிரச்னைகள் அத்தனையையும் ஆராய்ந்து அறியவும், நல்லதொரு முடிவை பொறுக்குக் குழுவின் மூலம் எடுத்துப் பிறகு மீண்டும் இந்த மன்றத்தில் விவாதத்திற்குக் கொண்டுவர வாய்ப்பு ஏற்படுகிறது. மன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாக அந்த விவாதத்தில் கலந்து கொண்டு சீரிய கருத்துக்கள் வழங்கவும் வாய்ப்பு ஏற்படும் என்ற முறையில்தான் இதை பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்று நான் கூறியுள்ளேன். கேளிக்கை வரி அரசாங்கத்திற்கு ஒரு கணிசமான அளவிற்கு நிதி தேடித் தரும் ஒரு துறையாக அமைந்திருக்கிறது.. இது நாளுக்குநாள் வளர்ந்து வரவேண்டிய ஒரு துறையாகவும் இருக்கிறது. இதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பலராக அமைந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் அனைவரையும் கலந்து கொண்டு இந்த மசோதாவைக் கொண்டு வருவதால் என்னென்ன பாதகங்கள் ஏற்பட முடியும், அவற்றை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்பதை ஆராய்ந்து அறியலாம். இந்த மசோதாவை மிகச் செம்மையான முறையில் ஆக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் தான், இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதா மூலம் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டுமென்ற கருத்தில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க வழியில்லை. எனினும் எடுக்கப்படுகிற முயற்சியின் மூலம் திரைப்படத் தொழிலை நடத்துகிறவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படக் கூடாது. கேளிக்கை வரி விதிக்கப்படுகிற சினிமாத் துறையைப் பொறுத்தவரை, சிற்றூர்களில் அமைக்கப்படுகிற டூரிங் சினிமாவைப் பொறுத்தவரையில் போட்டிகளும் பொறாமைகளும் ஏற்பட்டு பல வழக்குகள் தொடுக்கப்பெற்று நீதி மன்றத்தில் தீர்ப்புப் பெற்று அவற்றை நடத்த வேண்டிய அளவிற்கு ஊருக்கு ஊர் இந்த சினிமா அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். போட்டி மனப்பான்மை பலவிடங்களில் இருந்த கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கூறியதுபோல், பகைமை உணர்ச்சி கொண்டவர்கள் ஒரு கொட்டகை நடத்துபவரை ஒரு இக்கட்டான





நிலைக்கு ஆளாக்க வேண்டுமென்று கருதினால், இந்தச் சட்டத்தை, பயன்படுத்திக் கொண்டு, அப்படி ஆளாக்க முடியும் என்ற அச்சம் இருக்கிறது. இவற்றை யெல்லாம் கண்டறிந்து எந்த அளவிற்கு இதிலுள்ள சங்கடங்களைப் போக்க முடியும் என்று கண்டு ஆராய இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடுவது எல்லா வகையிலும் நல்லது. இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் பிரதிநிதிகளை வரவழைத்துக் கேட்கவும் இந்த மசோதாவின் நோக்கத்தை நிறைவேற்றவும், இதன் மூலம் சங்கடங்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான முறைகளை ஆராயவும் வேண்டும்.

காம்ப்ளிமெண்டரி டிக்கட்களுக்கு வரி விதிப்பது என்பது ஒரு சங்கடமான நிலையைத்தான் உருவாக்க முடியும். மரியாதையின் அடிப்படையில் கொடுக்கப்படுகிற காம்ப்ளிமெண்டரி டிக்கட்களுக்கு வரி விதிப்பது என்றால் அதை டிக்கட் பெற்றவர்களிடம் இருந்து வாங்குவதா ? அல்லது அதை வழங்கியவரிடம் இருந்து பெறுவதா ? என்ற நிலைமை வருகிறது. இதற்கு விலக்கு அளிக்கமுடியுமா ? அல்லது ஓரளவிற்கு இதைக் கட்டுப்படுத்த முடியுமா ? காம்ப்ளிமெண்டரி டிக்கட்களுக்கு வரி போடலாமா ? அல்லது அதை விட்டு விடலாமா என்பதைப்பற்றியெல்லாம் பொறுக்குக் குழுவிற்கு இந்த மசோதாவை விடுவதன் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். மரியாதையின் அடிப்படையில் கொடுக்கப்படுபவர்களிடத்தில் கட்டணம் வசூலிக்கப்படாமல், இந்த வரியை மட்டும் வசூலிப்பது என்றால், அது அவர்களை அவமானப்படுத்துவதாக அமையுமே தவிர, அது மரியாதையின்பாற்பட்ட ஒன்றாக அமையாது. வழங்குபவர்கள் கொடுக்கலாம் என்ற நிலை ஏற்பட்டால் சினிமா எடுப்பவர்களைப் பார்த்தால் அவர்களிடம் தொழில் புரியும் பணியாளர்கள் அத்தனை பேர்களுக்கும் காம்ப்ளிமெண்டரி டிக்கட்ஸ் கொடுக்கும் நிலை ஏற்படுகிறபோது, ஒரு 200 பேர்களுக்கு அப்படிக் கொடுக்கிற நிலை ஏற்படும் போது அதற்கெல்லாம் அவர்களே வரி கொடுத்துப் பெற வேண்டியவர்கள் ஆகிறார்கள். அப்போது அது அவர்களுக்கு அதிகச் சுமை ஏற்படுத்துவதாகும். இதையெல்லாம் ஆராய்ந்து ஒரு தெளிவான முடிவிற்கு வரவேண்டும். இந்த மசோதாவின் முக்கிய நோக்கத்தை மறுக்கவில்லை. வரி ஏய்ப்பதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் எடுக்க வேண்டியது அவசியமே ஆகும். அதனால் யாருக்கும் சங்கடம் ஏற்படாமல் இருக்கும் அளவிற்கும், அளவிற்கு மீறி அதிகாரம் செலுத்த அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்காமலும், ஏய்ப்பவர்களுக்கு இடம் கொடுக்காமலும் செம்மையான முறையில் இதை முறைப்படுத்த இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடுவது மிக மிக நல்லது. ஆகவே இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்ற திருத்தத்தை ஏற்று இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டுப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[6th November 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த அமென்ட்மெண்டை, பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் இது நன்கு பரிசீலனை செய்யப்படவேண்டுமென்பதை ஒப்புக் கொள்கிறேன். அதே சமயத்தில் சில தவறான கருத்துக்கள் சொன்னதை மட்டும் விளக்க நான் முன்வருகிறேன். பொதுவாக இந்தத் தமாஷா வரி கொட்டகைக்காரர்களால்தான் கொடுக்கப்படுகிறது. சினிமா பார்க்கப் போகிறவர்கள் டிக்கட்டோடு சேர்த்துக் கொடுத்தாலும், விற்பனை வரியைப் பொது மக்கள் கொடுத்தாலும் அது எப்படி வர்த்தகர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறதோ அதேபோல் இந்த தமாஷா வரியும் கொட்டகைக்காரர்களிடத்தில்தான் வசூலிக்கப்படும். யார் சினிமாவிற்குப் போனாலும் டிக்கட்டோடு சேர்த்துத்தான் இதற்கும் பணம் கொடுக்கிறார்கள். ஆகவே காம்ப்ளிமெண்டரி டிக்கட் கொடுத்தாலும் கொட்டகைக்காரர்களிடத்தில் இருந்துதான் வசூல் செய்யப்படும். கொட்டகைக்காரர்கள் அதைக் கொடுக்க முடியும். இதுவே அவர்களுக்கு ஒரு நன்மையாகவும் இருக்கலாம். எல்லோரும் வந்து காம்ப்ளிமெண்டரி பாஸ் கேட்டால், இதற்கு நான் சர்க்காருக்கு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே என்னால் கொடுக்க முடியவில்லை என்று சொல்ல அவர்களுக்கு ஒரு வசதி ஏற்படும். ஒரு வரம்பிற்கு உட்பட்டு இவ்வளவுதான் கொடுக்கலாம் என்று செய்யலாமா என்பதை செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்யலாம். அடுத்தாற்போல் இந்தக் கணக்குகளை எல்லாம் மறைத்துவிட்டால் அதைக் கூடத் திருப்பிக் கேட்கக் கூடாது என்று திருமதி அனந்தநாயகி சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த ஷரத்தைப் படித்துப் பார்த்தால் நிச்சயமாக அதில் விளக்கமாக இருக்கும்.

'In making an assessment of re-assessment under sub-section (1), the authority prescribed under sub-section (1) of section 7-A may, if it is satisfied that due to wilful mis-statement or suppression of facts. . . .'

இரண்டு விஷயம் ப்ரூவ் செய்ய வேண்டும். (Wilful mis-statement) வேண்டுமென்றே ஏமாற்ற கணக்கு கொடுத்திருக்கவேண்டும், அல்லது (suppression of facts) கணக்குகளை எல்லாம் ஒளித்திருக்க வேண்டும். இந்த மாதிரி இருப்பவர்களுக்குக் கூட சலுகை காட்ட வேண்டுமென்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. Wilful suppression இருந்ததா இல்லையா என்பதில் சர்க்கார் முடிவுதான் கடைசி முடிவு என்பது அல்ல. அஸெஸ்மென்ட் செய்வார்கள். அப்பீல் போன்றவை எல்லாம் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. வரி விதிக்கும்போது பரிகாரம் தேடிக் கொள்ள சட்டத்தில் இடம் இருக்கிறதா, அப்பீலுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும். குறிப்பாக தவறு செய்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் இந்தக் கணக்குகள் திருப்பிப் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்கிறபோது கணக்குகளை மறு



பரிசீலனை செய்யக் கூடாது என்று சொல்வது சரியாகாது. 'ஓனஸ் ஆஃப் ப்ரூஃப்', சம்பந்தமாக ப்ரெஞ்சு சட்டத்திற்குப் போக வேண்டியதில்லை, பினல் கோடிலே கூட இருக்கிறது. சில சமயங்களில் யாரிடத்தில் பண்டங்கள், பொருள்கள் இருக்கின்றனவோ அவர்களிடம் அது மாற்றப்படுகிறது. திருட்டு சொத்தை ஒருவன் வைத்துக் கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அது திருட்டு சொத்து என்று பிடித்துவிட்டால், அது திருட்டு சொத்தல்ல, இது என் சொத்து, இது எனக்கு நியாயமாக வந்தது என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அந்த 'ஓனஸ் ஆஃப் ப்ரூஃப்', அவனுக்கு ஷிஃப்டாகிறது. கஸ்டம்ஸ் ஆக்டிலும், கள்ளக் கடத்தல் செய்யப்பட்ட சாமான்கள் என்று பிடித்தால் அது கள்ளக்கடத்தல் சாமான் அல்ல, வரி கொடுக்கப்பட்டிருக்கிறது, யாரிடத்தில் இருந்து வாங்கினார்கள் என்று நிரூபிக்கும் பொறுப்பு அவர்களிடம்தான் இருக்கிறது. அதேபோல் கொட்டகையில் ஒருவர் டிக்கட் இல்லாமல் இருந்தால் அவர் எப்படி வந்தார் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவர்களிடம் இருக்கிறது என்று சொல்கிறோம். உள்ளே வந்து நுழைந்தவுடன் 500 ரூபாய் ஃபைன் போடுவதில்லை. எங்கள் அனுமதி இல்லாமல் வந்தார் என்று அவர்தான் சொல்ல முடியும், சர்க்கார் தரப்பில் சொல்ல முடியாது, ப்ராசிக்யூஷன் சைடிலிருந்து சொல்ல முடியாது. டிக்கட் இல்லாமல், காம்ப்ளிமென்டரி டிக்கட் அல்லது பாஸ் இல்லாமல், ஒரு சீட்டு இல்லாமல் உள்ளே யாரும் இருக்கக் கூடாது. எப்படி சிலர் உள்ளே வந்தார்கள் என்று நிரூபிப்பது என்று சொன்னார்கள்? நிரூபிக்க வேண்டிய பொறுப்பை இப்போது அவர்களிடம் கொடுத்திருக்கிறோம். இப்போது இந்தச் சட்டத்தில் நாம் சொல்வது கூட, 'ப்ரிசம்ப்ஷன்' என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பார்த்தால் அது நன்றாகத் தெரியும்.

'It shall be presumed until the contrary is shown that any person who is found without a ticket in any place of entertainment has been admitted by the proprietor. . . .'

ஓரிடத்தில் நான்கு குண்டர்கள் வந்துவிட்டால் அதை எப்படி நிரூபிப்பது என்று சொன்னார்கள். இவர்கள் குண்டர்கள், உள்ளே வந்துவிட்டார்கள் என்று நிரூபித்துவிட்டால் போதும் என்றுதான் நாம் சொல்லியிருக்கிறோம். தவறாக சிலர் வந்துவிட்டார்கள் என்றால் அதையும் அப்படியே நிரூபித்துவிட்டால் போதும் என்று தான் சொல்லியிருக்கிறோம். ஆனால் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையது என்று சொல்லியிருக்கிறோம். அதோடு இதற்கான தண்டனையை உடனே அதிகாரிகள் கொடுத்து விட முடியாது, கோர்ட்டில் பிராசிக்யூஷன் செய்து விசாரணை செய்து தான் தீர்ப்புக் கொடுப்பார்கள். கோர்ட்டிலேயோ நமக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்ல முடியாது. அப்படி வந்துவிட்டால் நமக்கு சரியாக நிர்வாகமே நடத்த முடியாமல் போகும். ஓரிடத்தில் தவறு ஏற்பட்டால் அதைப்பற்றி கோர்டில் சொல்லுகிறோம், அங்கேயிருக்கின்ற மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கிறார்,

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [6th November 1965

பின்னால் தவறு என்று அவர் முன்பு நிரூபிக்கப்பட்டால் அதற்கான தண்டனையைக் கொடுக்கிறார். இந்த முறையில் தான் நிர்வாகத்தை நடத்த முடியும். அந்த முறையில் தான், யாராவது டிக்கட் இல்லாமல் இருந்தார்களேயானால் அது தவறு என்று ப்ரசம்ஷன் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். அது அல்ல என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சினிமாக் கொட்டகைக்காரர்களுடையது என்று இப்போது சொல்லியிருக்கிறோம். அதையும் அதிகாரிகளிடத்தில் கூட சொல்ல வேண்டிய தேவையில்லை. கோர்ட்டுக்கு வரும்போது, கோர்ட்டுக்குத் திருப்தியாக நிரூபித்துவிட்டால் தண்டனை ஒன்றும் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். ஆகவே, இதில் பெரிய கஷ்டம் ஒன்றும் வந்துவிடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சினிமா வரியை எந்தெந்த பஞ்சாயத்துகள் வசூல் செய்வது என்கின்ற பிரச்னையைச் சொன்னார்கள். அது பின்னால் பார்க்க வேண்டிய விஷயம், எந்தெந்த பஞ்சாயத்து எந்தெந்த தூரத்தில் இருக்கிறது, எந்தெந்த எல்லையில் சினிமாக் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் பார்க்கவேண்டும். இதைப்பற்றி ரெவின்யூ அதிகாரிகள் அப்போர்ஷன் செய்வார்களே தவிர இதற்கென்று தனியாகச் சட்டம் ஒன்றும் செய்ய முடியாது. இதர அன்பர்கள் எல்லோரும் இந்த மசோதாவை வரவேற்றுப் பேசினதற்கும், இந்த மசோதாவை பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று ஆதரித்துப் பேசினதற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 29 of 1965) be referred to a Select Committee consisting of the following fifteen Members:—

The Hon. Sri Venkataraman.
Sri N. Shanmugasundaram.
Sri K. Narayanaswami Pillai.
Sri A. Senapathi Gounder.
Srimathi A. S. Ponnammal.
Sri C. Srinivasan.
Sri S. Ponnusamy.
Sri A. Ramachandra Rayar.
Sri K. S. Mani.
Sri Rama. Arangannal.
Sri R. Nallamuthu.
Sri P. U. Shanmugam.
Sri C. Chiranjeevulu Naidu.



6th November 1965] [Mr. Speaker]

Sri N. Chinnamunisamy Chetty.
Sri P. Ramachandran."

The motion was put and carried.

MR. SPEAKER: Under Rule 99 (1) of the Assembly Rules, I nominate the Hon. Sri R. Venkataraman to be the Chairman of the Committee.

64924

(6) THE MADRAS PANCHAYATS (AMENDMENT) BILL, 1965—*cont.*

MR. SPEAKER: Now the discussion on the Madras Panchayats (Amendment) Bill, 1965, will be continued. The hon. Member Sri K. S. Mani will speak.

V 211. 31 N65

* திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டிருக்கின்ற இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்கள் இரண்டொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

N65. 32

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

குறிப்பாக விட்டுவரியை வசூலிப்பதில் தற்போது அரை ஆண்டுக்கு ஒரு முறை என்றிருப்பதை மாற்றி, முழு ஆண்டுக்கு வசூலிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக பஞ்சாயத்து சட்டத்தில் திருத்தப்பட வேண்டிய அம்சங்கள் ஏராளமாக இருக்கின்றன என்று அடிக்கடி இந்த மன்றத்தில் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள்ளாக இந்த வரியை வசூலிக்கலாம் என்று கொண்டு வந்திருப்பது என்ன காரணத்திற்காக என்ற விளக்கம் இதில் அதிகப்படியாக கொடுக்கப்படவில்லை. ஆறு மாத காலத்திற்குள் வரியை வசூலித்துவிட்டு, இரண்டாவது ஆறு மாத காலத்திற்குள் வசூலித்தால் அதை பாக்கியாகக் கருத வேண்டும் என்ற முறையில் இந்தத் திருத்தம் காட்சியளிக்கிறது.

அடுத்தாற்போல், 1960-ம் ஆண்டுக்கு முன்னால் வரி பாக்கியிருந்து 1960-க்கு பின்னால் பாக்கியிருந்தால், அதை அந்த நேரத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து வாங்க வேண்டும் என்றிருக்கிறது. அவர் தேர்தலில் வெற்றிபெற்று வந்திருந்தாலும், தோல்வியடைந்திருந்தாலும் அவரிடமிருந்து சர்சார்ஜ் போட்டு வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சில பஞ்சாயத்துக்களில் வரி பாக்கி அதிகமாக இருக்கிறது, ஆகவே இதை வஜா செய்து தர வேண்டும் என்று புதிதாக வந்திருக்கும் பஞ்சாயத்து மன்றம் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியதன் பேரில் தள்ளுபடி செய்து அதற்கான உத்தரவையும் அரசாங்கம் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமையில், பழைய பாக்கியை சில இடங்களில் வசூல் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக்கொள்வதும், சில இடங்களில் எடுத்துக்கொள்ளாததுமான நிலைமை இப்போது

[திரு. கோ. சி. மணி] [6th November 1965

கின்ற நேரம் இது. இந்த நேரத்திலாவது, இந்த விளக்கங்களை எடுத்து இப்படிப்பட்ட திருத்தங்கள் வரும் நேரத்தில் இணைத்திருக்க வேண்டும். ஒரு வருஷத்தில் கொடுக்க வேண்டும் என்று இருப்பதில் ஒரு வருஷத்தில் செலுத்த வேண்டுமென்று வைத்துக் கொண்டாலும், அல்லது ½ வருஷத்தில் செலுத்தவேண்டுமென்று வைத்துக்கொண்டாலும், டிமாண்ட் நோட்டீஸ் இல்லாமல் தாங்களாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்வது, தாங்களாகக் கொடுக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். தாங்களாகக் கொடுப்பது இருக்க, கேட்டாலும் கொடுக்காமல் இருக்கும்படியான அளவுக்கு வரி என்றாலே கசப்பு ஏற்பட்டு, எதிர்ப்பு ஏற்பட்டு விட்ட நேரம்; இன்றைக்கு வரி போடாத இனம் இல்லை. ஹவுஸ் டாக்சையும் அரசாங்கம் போட்ட வரியாகத் தான் நினைக்கிறார்களே தவிர நமக்காக, நாம் கொடுத்து, நாம் செய்ய வேண்டிய வேலைகளுக்காகக் கொடுக்கிறோம் என்ற எண்ணம் இல்லை. எல்லா மக்களும் தாராளமாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்வது, யுத்த நிதியை அதிகாரிகள் திரட்டி, மக்கள் தாங்களாகக் கொடுக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது பதில் அளிக்கப்படுகிறதே அப்படித் தான் என்று யூகித்துக்கொள்ள முடிகிறது. அப்படி இல்லாமல் டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து, காலக்கெடு கொடுத்து வசூலிப்பது சிறந்தது என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. செ. மாதவன்** : கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்துத் திருத்தச் சட்டம் வீட்டு வரி விதிப்பது, வீட்டு வரி வசூலிப்பது என்ற இரண்டின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிட்ட காரணங்கள் தெளிவாக இல்லாவிட்டாலும், இந்தச் சட்டத்தினுடைய அடிப்படை எனக்குப் புரிகிறது. 1960-ம் ஆண்டிலே ஏற்பட்ட பஞ்சாயத்து யூனியன் வந்ததற்குப் பின்னாலே, ஒரு ட்ரான்சிஷனல் பீரியடில், பஞ்சாயத்துக்களுக்கு வரிகளை வசூலிக்க வேண்டிய அதிகாரத்தைச் சட்டத்திலே உள்ள ஒரு பிரிவின் கீழ் ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு ஒப்படைத்திருந்தார்கள். அப்படி ஒப்படைக்கப்பட்ட வேலையைச் சரியாகச் செய்வதற்குச் சில சலுகைகள் காட்டப்பட்டன. சட்டப்படி தொடர்ந்து நிறைவேற்றப்படாத காரணத்தினால் இடைக்காலத்தில் சுணக்கம் ஏற்பட்டது வசூலிப்பதிலே. இலாகாவிலே ஏராளப் புகார்களும் இருந்தன. அந்த நிர்வாகத்திலே ஏற்பட்ட சுணக்கைத் தீர்க்க ஒரு சட்டத்தையே உருவாக்கிய பெருமை நம் அரசாங்கத்திற்குத் தான் உண்டு. ஆனால், இந்தச் சட்டம், 1950-ம் ஆண்டிலே, அடிப்படைச் சட்டம், தோற்றுவிக்கப்பட்டது. பின்னால் 1958-ம் ஆண்டிலே மீண்டும் உருவாக்கப்பட்டது. 1950-லே உருவாக்கப்பட்ட சட்டமும் 1920-லே ஏற்பட்ட லோக்கல் போர்ட்ஸ் ஆக்ட் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டம். விதிகளும் அன்றிலிருந்து உருவக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து பரிசீலிக்கப்பட்ட சட்டத்தில் அடைக்கப் படவேண்டிய ஓட்டைகள் பல இருந்தாலும், இந்தச் சட்டம் கொண்டு வந்ததில், யோசிக்காமல், சரிவர சிந்திக்காமல், சட்ட இலாகா பரிசீலிக்காமல்,



6th November 1965] [திரு. செ. மாதவன்]

நிர்வாக இலாகாவே தன்னிச்சையாகக் கொண்டு வந்திருக்கிற ஒரு சட்டம் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே வைக்க ஆசைப்படுகிறேன். காரணம், இங்கே சொல்லியிருக்கிறார்கள், 'வரியை வசூலிக்க நோட்டீஸ் கொடுக்க வேண்டும்; டிமாண்ட் நோட்டீஸ் எழுதுவது சிரமமாக இருக்கிறது; ஆகவே நோட்டீஸ் கொடுக்க வேண்டாமென்று திருத்தத்தை விதிகளில் கொண்டு வருகிறோம்; விதிகளில் கொண்டு வருகிற காரணத்தினால், அதன் விளைவாக—காராலரியாக—டிஸ்க்வாலிஃபிகேஷன் செக்ஷனை மாற்றுகிறோம்' என்ற அளவுக்கு, தையற்காரர் சட்டைக்கு அளவைப் பார்த்து ஆளையே வெட்டுவது போல, ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்சில் சொல்லியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வரியை வசூலிப்பது என்றுதான் சட்டத்தில் இருக்கிறது—அதாவது லெவி. எப்படி வசூலிப்பது என்ற முறைகள் விதிகளில் இருக்கின்றன. விதிகளைத் திருத்துவதற்காக சட்டத்திலிருக்கிற டிஸ்க்வாலிஃபிகேஷன் செக்ஷனைத் திருத்துவது என்று வரும்போது அதனால்தான் சட்ட இலாகா பரிசீலிக்கவில்லை என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த நேரத்திலே நமது சட்ட அமைச்சரும் இல்லை, முதல் அமைச்சரும் இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே விளக்கமும் தந்தார்கள். லெவி என்பதைத்தான் திருத்துகிறோம். வசூலிப்பதைப்பற்றித் திருத்தவில்லை, எத்தனை முறை, எத்தனை தடவை என்பதைத் திருத்தவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்து உண்மையானதாக இருந்தால் டிஸ்க்வாலிஃபிகேஷன் செக்ஷனில் கை வைப்பதில் அர்த்தம் இல்லை. அவர்களும் இந்தச் சட்டத்தை முழுவதும் பார்த்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். டிபார்ட்மெண்டிலே தயார் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். க்ளாஸ் இரண்டிலே பார்த்தால், முதலிலே லிமிடேஷனில் கையை வைக்கிறார்கள். இதற்கு அதிகாரம் இருக்கலாம், ஒத்துக்கொள்ளுகிறேன். எதற்கும் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பதிலே, கோர்ட்டுக்குப் போய் சரியில்லை என்று சொல்லும்போது, வலிடேட் செய்ய, ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்க சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். லிமிடேஷனை அதிகரித்து ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்கும் சட்டம் இதுதான் முதல் சட்டம் என்று கருதுகிறேன். இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு அதிகாரம் இருக்கிறது அரசாங்கத்திற்கு—அது வேறு பிரச்னை. காரணம் இது ப்ரொசீஜூரல் லா. அதிகாரம் இருக்கிறது என்று உயர்நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது. ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து செய்யலாம் என்று தீர்ப்பளித்திருக்கிறது. இந்தப் பிரிவின்படி அதிகாரிகளைப் போட்டு, அவர்கள் எவ்வளவு தூங்கிக்கொண்டிருந்தாலும் 1960-லிருந்து கணக்குப் போட்டு ஆறு ஆண்டுகளுக்கு வசூலிக்க உரிமை தந்திருக்கிறோம். மக்களுக்கு இது சிரமத்தை உண்டாக்கும் என்ற கருத்தை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அதற்கு இந்த டிஸ்க்வாலிஃபிகேஷன் ஒரு காராலரி. 25, 26 செக்ஷன்களை மாற்றியிருக்கிறார்கள். செக்ஷன் 25, உறுப்பினர்களுக்கு. அதிலே ஒரு ப்ரொவைசோ ஏற்கனவே இருந்

இறது. கோர்ட்டுக்குப் போக ப்ரொவைசோ. **நோட்டீஸ்** கொடுப்பது கஷ்டம் என்று அதைத் தவிர்க்கப் போகிறோம். செக்ஷன் 25, அரசாங்கத்தின் நிர்வாகத்தில் வரக் கூடியது அல்ல, கோர்ட்டுக்குச் செல்ல வேண்டியது. கோர்ட்டுக்குச் சென்று நாமினேஷன் தாக்கல் செய்ய லாயக்கற்றவர்கள் என்ற குற்றச்சாட்டைக் கிளப்பினால் ஓனஸ் ஆஃப் ப்ரூஃப் யாரிடத்தில் இருக்கவேண்டும்? டிமாண்ட் செய்திருக்கிறோம், சார்வு செய்திருக்கிறோம் என்ற இரண்டு கருத்தை நிரூபிக்கவேண்டுமென்பது ஏற்கனவே இருந்த சட்டத்தின் தாத்பர்யம். அதை மாற்றுவதற்கு என்ன காரணம் என்று விளக்கத்தில் சொல்லவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இடையில் குறுக்கிட்டுப் பேசினார்கள், அதிலும் சொல்லவில்லை. இதை மாற்றினாலும் என்ன தீமை ஏற்படும் என்று அரசாங்கம் மறு பரிசீலனை செய்யவேண்டும். அந்த அளவுக்கு மறு பரிசீலனை செய்யும் காலத்திற்காவது இதை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது புதிதாக ஏற்படுத்தப்பட்ட பிரிவு அல்ல. மாவட்ட நகராட்சிச் சட்டத்தில் இருக்கிறது. அதற்குப் பின்னாலே மாநகராட்சிச் சட்டத்தில் இருக்கிறது. 1920-ம் வருஷத்திய லோக்கல் போர்ட்ஸ் ஆக்டில் இருக்கிறது. அதற்குப் பின்னாலே 1950-ல் வந்த பஞ்சாயத்து ஆக்டில் இருக்கிறது. 1958-ல் வந்த பஞ்சாயத்து ஆக்டில் இருக்கிறது. இவ்வளவு சட்டத்திலும் உருவாக்கப்பட்ட ஒரு ப்ரொவிஷனை திடீரென்று மாற்றுவது, நிர்வாகத்தில் ஊழல் ஏற்படுகிறது என்று சொல்லி மாற்றுவது என்று சொன்னால், அது ஏதோ கதை கேட்பதுபோல்தான் இருக்கிறது, உண்மை அல்ல என்று இந்தப் பொறுப்பை இப்பொழுது ஏற்றிருக்கும் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். தயவு கூர்ந்து
-00 oon. அமைச்சர் அவர்கள் இதனுடைய **விளைவு** என்ன என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டும். அப்படிச் **செய்வார்கள் என்று** நம்புகிறேன். நிச்சயம் இந்தப் பிரிவை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் கூறுகிறேன். அப்படி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் நான் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன், அந்தத் திருத்தங்களையாவது ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருத்தத்தின் அடிப்படை நோக்கமென்ன? கோர்ட்டுக்கு போகக்கூடிய சூழ்நிலையிலே செக்ஷன் 25, 26-க்கு என்ன நிலைமை என்பது பற்றித் தான் திருத்தம் கொடுத்திருக்கிறோம். நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று பழைய சட்டத்தில் இருக்கிறது. நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பது பற்றி கூட நாங்கள் வலியுறுத்தவில்லை. கோர்ட்டிற்குப் போனால் அந்த சூழ்நிலையில் விளக்கம் கொடுக்கும் வகையில் தான் நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். இந்தத் திருத்தத்தின் அமைப்பு, 'வேர்டிங்' தவறாக இருக்கலாம். ஆனால், அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, **அந்தக் கருத்திற்கேற்றபடி சட்ட இலாகா அதைப் பரிசீலனை செய்து, இப்படி ஒரு ப்ரொவிசோ**





போடலாமா என்பதுபற்றி பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சட்ட இலாகாவுக்கு உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டிற்குச் செல்வதற்கு முன்னால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். உதாரணமாக, செக்ஷன் 26 இருக்கிறது, அவர்கள் மூன்று மாதங்களுக்குள் வரி கட்டாவிட்டால் ஆட்டோமாடிக்காக மெம்பர்ஷிப் லீஸ் ஆகிவிடுகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாமல் அவர்களுக்கு மறுபடியும் ஒரு ஆப்பர்சூனிட்டி கொடுக்கலாம் என்பதுதான் நோக்கம். காரணம், அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். இதற்கு பல உதாரணங்களை நான் தர முடியும். இப்பொழுது வழக்குமன்றத்தில் தெரியவருகிறது. விலேஜ் பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, வரி வசூலிப்பது கர்ணம், வரி பாக்கி கட்டுவது பிரசிடெண்டு. இரண்டு பேர்களும் ஒருவருக்கொருவர் கேஸ் போட்டுக் கொண்டு விஷயம் கோர்ட்டுக்கு வருகிறது. கர்ணம் ஒரு பக்கம் சாட்சி, வில்லேஜ் பிரசிடெண்டு ஒரு பக்கம் சாட்சி. இரண்டிற்கும் 'ஈகுவெலஸ்' ஆகிவிடுகிறது. டிஸ்ட்ரிக்ட் முன்சீப் எந்தப் பக்கம் தீர்ப்புச் சொல்லுவது என்று தெரியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. வில்லேஜ் பிரசிடெண்டு 'என்னுடைய ரிஜிஸ்டர்படி பாக்கி இருக்கிறது' என்று சொல்லுகிறார். அது உடனே 'டிஸ்குவாலிபிகேஷன்' அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற புது மசோதாவின்படி. ஆனால், ஏற்கனவே இருக்கிற பிரிவின்படி நிலைமை அப்படியில்லை. கர்ணம் பிரதிவாதி சைடில் பேசுகிறார், 'டிமாண்டு இல்லை, டிமாண்டு பிரசிடெண்டு கொடுக்கவில்லை, ஆகவே நான் கேட்கவில்லை' என்று சொல்லுகிறார். அவர் பொய் பேசுகிறாரோ, நிஜம் பேசுகிறாரோ அதுவேறு விஷயம். இருந்தும் டிஸ்குவாலிபிகேஷன் என்று முடிவு பண்ணுவதா? இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதாவை ஏற்றுக் கொண்டால் என்ன விளைவு ஏற்படும் என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்னும் சில வில்லேஜ் பஞ்சாயத்துகளிலே கர்ணம், தலைவர் இரண்டு பேர்களில் ஒருவருக்கு போட்டியிடக் கூடியவர் சொந்தமாக இருக்கிறார். உடனே இன்னொருவர் எதிரியாக மாறிவிடுகிறார். தேர்தலுக்கு நிற்பவர் 'எனக்கு வரி பாக்கி இருக்கிறது; பாக்கியை எடுத்துக் கொள்ளுங்கள், நான் நாமினேஷன் போடப்போகிறேன்' என்று சொல்லுகிறார். கிராம அதிகாரி பாக்கியை எடுத்துக்கொள்ள மறுக்கிறார். மறுத்த உடனேயே மணி ஆர்டரில் பணத்தை அனுப்புகிறார். பாக்கி இருக்கிறது என்று தெரிந்து பாக்கியை அனுப்பிவிட்டு, அனுப்பியிருக்கிறேன் என்று சொல்லுகிறார். ஆனால், மணி ஆர்டர் போய்ச் சேர்ந்திருக்கிற தேதி வேறு, நாமினேஷன் தேதி வேறு. நாமினேஷன் போட்ட தேதிக்குப் பின்னாலே எம்.ஓ. போய் சேருகிறது. இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவை ஒப்புக் கொண்டால் அதன் விளைவு என்ன ஆகும் இப்படிப்பட்ட நிலையில் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவருடைய

[திரு. செ. மாதவன்] [6th November 1965

கடமையை செவ்வனே நிறைவேற்றியும், எம்.ஓ. அனுப்பியும் கூட, ரசீது இல்லாத காரணத்தினுல், ரிஜிஸ்டரில் வரவு வைக்கப்படவில்லை என்ற காரணத்தினுல், வரி பாக்கி என்று தீர்மானிப்பதா? இப்படிப்பட்ட ஒரு வழக்கு வழக்குமன்றத்திற்கு வந்திருக்கிறது. ஏன் எம்.ஓ. வாங்கிக்கொள்ளவில்லை என்று கோர்ட்டார் கேட்டால், 'எம்.ஓ. வந்தது எனக்குத் தெரியாது' என்று கர்ணம் சொல்லுகிருர். அம்மாதிரி மணியார்டரை வாங்காமல் காலம் கடத்தலாம். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாக விடக்கூடாது. டவுன் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், எக்சிக்யூடிவ் ஆபீசரிடம் 'நான் நாமினேஷன் போடப்போகிறேன், வரி பாக்கியில்லை என்று சர்டிபிகேட் கொடுக்கவேண்டும்' என்று கேட்டால், வரி பாக்கி இருக்கிறதா, இல்லையா என்ற தகவல் இல்லை, பார்த்துத்தான் சொல்லவேண்டும் என்று நாள் கடத்தலாம். அல்லது வரி பாக்கி இல்லை என்று சர்டிபிகேட் கொடுத்து விட்டால்கூட இப்பொழுது கொண்டுவந்திருக்கிற திருத்த மசோதாவின்படி உண்மையிலேயே வரி பாக்கி இருந்தால், சர்டிபிகேட் கொடுத்தது தவறுதலாக இருந்தால், டிமாண்டு ரிஜிஸ்டரில் வரி பாக்கி என்று கண்டிருந்தால் இது பாதிக்கும். பல ஆண்டுகளாக நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தில் போட்டிருந்ததை திடீரென்று மாற்றுவது சரியல்ல. ஆகவே, தயவு கூர்ந்து இதை பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னென்று, லெவி என்ற பகுதியிலே செக்ஷன் 120-ல் மாற்றியிருக்கிருர்கள், அதற்கும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிருர்கள். கலெக்ஷன் என்று சொல்லவில்லை என்று சொன்ஞர்கள். அப்படியிருந்தால் என்னுடைய திருத்தத்தில் "which shall be collected in two instalments" என்று சொல்லியிருக்கிறேன். அரசாங்கத்தின் நோக்கம் பல தடவைகளில் வசூலிக்கலாம் என்பதுதான் என்றுல் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளலாமே? ஏற்கனவே 'levied every half year' என்றிருந்ததை 'levied every year' என்று மாற்றுவதாக திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரண்டு முறையாக வசூலித்து வந்தார்கள். இப்பொழுது ஒரே முறையில் வரி விதிக்கலாம் என்று போட்டுவிட்டால், ஒரே முறையில் வசூலிப்பதற்கு அது மறைமுகமாக அதிகாரம் கொடுப்பதாகும். அதைத் தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது. விதியில் அது பற்றி சேர்ப்பதற்கும் யாருக்கும் அதிகாரம் கிடையாது. ஆகவே, மந்திரி அவர்கள் இதை சிந்தித்துப் பார்த்து, நான் கொடுத்திருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருத்தங்களை மறுபரிசீலனை செய்து, இதில் ஏற்படக்கூடிய சிரமங்களை உணர்ந்து பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே பஞ்சாயத்துக்களுக்கு வரி விதிக்கின்ற உரிமை



6th November 1965] [திரு. கோ. பூவராகன்]

இருக்கிறது. அதை வசூல் செய்யவேண்டிய கடமையும் பஞ்சாயத்துக்களுக்கு இருக்கிறது. பஞ்சாயத்துக்களுடைய வருவாயை அதிகரிப்பதற்கும், அதற்கான ஏற்பாட்டில் இருக்கிற நடைமுறை சிக்கல்களை கொஞ்சம் குறைப்பதற்காகவும்தான் இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்த மசோதாவை ஒட்டி கனம் அங்கத்தினர்கள் அவரவர்கள் கருத்தை எடுத்துச் சொன்ஞர்கள். இரண்டு முறைகளில் வரி விதிப்பதற்குப் பதிலாக ஒரே முறையில் வரி விதிக்கவேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்திருப்பதின் நோக்கம் ஏதோ கணக்குகள் அதிகமாக எழுத வேண்டியிருக்கிறது என்பது மட்டுமல்ல. பஞ்சாயத்துக்களில் வரி வசூலிப்பவர் கிராமத்தில் இருக்கிற மணியக்காரர். கிராம மணியக்காரர் அந்த கிராமத்தில் பொதுவாக வருவாய் வருகின்ற காலங்களில்தான் நிலவரி வசூலிக்கக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் குறிப்பாக மகசூல், அறுவடை காலங்களில்தான் வரி செலுத்துவது சுலபமாக இருப்பதினுல், வீட்டு வரியையும் ஒன்ருகச் சேர்த்து வசூலிக்கக்கூடிய பொறுப்பையும் அவர்களுக்கே விட்டிருப்பதினுல், ஒரு முறையில் வரி விதிக்கின்ற நிலையை இன்றையதினம் கொண்டு வந்திருக்கிருேம். இதைப்பற்றி பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஒரு முறை விதிக்கின்ற வரியாக இருந்தாலும், வசூல் செய்வது எப்படி, ஒன்ருக வசூல் செய்வதா என்றெல்லாம் பிரச்னைகள் கிளப்பப்பட்டன. ஒன்ருக வசூல் செய்வதா, அல்லது இரண்டு தவணைகளில் வசூல் செய்வதா அல்லது 3, 4 தவணைகளில் வசூல் செய்வதா என்பதைப்பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர்கள் கூறியிருக்கிற கருத்துக்களை விதிகள் செய்யும்பொழுது கவனத்தில் வைத்து, எப்படி சௌகரியமாக வசூலிப்பது, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு கஷ்டமில்லாமல் எப்படி வசூலிப்பது, வசூலிப்பவர்களுக்கு கஷ்டமில்லாமல், கணக்கு வைப்பதற்கு சங்கடமில்லாமல் இருக்கக்கூடிய நிலையில் எப்படி விதிகள் அமைப்பது என்பதையெல்லாம் கவனத்தில் வைத்து விதிகள் பிறப்பிக்கப்படும்.

ஏற்கனவே, இதுபோன்று வரி விதிக்கின்றபொழுது வரி செலுத்துகிறவர்கள் 15 நாட்களுக்குள் வரியை செலுத்தி விடவேண்டும் என்று விதியில் இருக்கிறது. அதற்குள்ளே செலுத்தி விடவேண்டும் என்பதை இப்பொழுது மாற்றவில்லை. அது அப்படியேதான் இருக்கிறது. இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடம் என்னவென்ருல் தேர்தலில் நிற்கிறவர்களுக்கு வரி பாக்கியைப் பற்றி நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்பது. கிராமப்புறத்தில் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டு எத்தனை ஊர்கள் இருந்தாலும், அத்தனை ஊர்களிலும் யார் யார் தேர்தலுக்கு நிற்கிருர்கள் என்று தெரியாது. இப்பொழுது இருக்கிற முறைப்படி தேர்தலுக்கு நிற்பவர்கள் தனக்கு வரி பாக்கி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்து, வரி பாக்கியிருந்தால் வரியைக் கட்டிவிட்டுத்தான், வரி பாக்கியில்லை என்ற ஒரு திடமான நம்பிக்கையில்தான், உறுதியாக தேர்தலுக்கு மனுக்களை சமர்ப்பிக்கிருர்கள். எங்கேயாவது ஒரு இடத்தில் ஒரு சில கஷ்டம் இருந்தால், ஒருவருக்கொருவர்

மத்தியிலே இருக்கிற நிலையை வைத்துக்கொண்டு ஏதாவது கஷ்டம் இருந்தால், அதை வைத்துக்கொண்டு பொதுவாக இருக்கிற நிலையை எதிர்த்துச் சொல்லக்கூடிய வாய்ப்பு வேண்டாம் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வரி பாக்கி கொடுக்கவேண்டிய உறுப்பினர்களிடமிருந்து மூன்று மாதத்திற்கு பிறகும் பாக்கியிருந்தால், திரும்பவும் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து, மேலும் தவணை கொடுப்பது என்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து உறுப்பினர்களாக, பஞ்சாயத்துத் தலைவராக வந்தபிறகு, பஞ்சாயத்துக்கு அவர்கள் முழுப் பொறுப்பு ஏற்கிறார்கள். பஞ்சாயத்து நிதி நிலை, மற்ற நடவடிக்கைகளைச் செய்வது, வளர்ச்சி இவற்றிற்கெல்லாம் அவர்களே பொறுப்பு. எல்லாம் அவர்கள் கையில்தான் இருக்கிறது. மூன்று மாதத்திற்குள்ளாக அவர்களே செலுத்தவில்லை என்றால், திரும்ப நோட்டீஸ் கொடுத்து திரும்பவும் வசூல் செய்யவேண்டும் என்று சில அங்கத்தினர்கள் சொல்லுவதை—பஞ்சாயத்துப் பொறுப்பை சரியான முறையில் கண்காணிக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணம் இருந்தால்—வற்புறுத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், அவர்களை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து தலைவர், உறுப்பினர்கள் வரி செலுத்திவிட்டார்களா அல்லது செலுத்தாமலே காலம் கடத்துகிறார்களா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே 15 நாட்களில் செலுத்தவில்லையென்றால் பஞ்சாயத்து நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறாது.

இன்னொரு பிரச்சினை எழுப்பப்பட்டது. இந்த வரிவிதிப்பைக் கொண்டு வர, சட்டம் கொண்டு வர உரிமை இருக்கிறதா என்று கேட்கப்பட்டது. அதையெல்லாம் பார்த்து உரிமை இருக்கிறது என்பதால்தான் மசோதா கொண்டு வந்திருக்கிறோம். இதிலே கஷ்டம் ஒன்றும் இல்லை. கஷ்டத்தைத் தவிர்க்கத்தான் மசோதா வந்திருக்கிறது. இதிலே கணக்கு வைத்துக்கொள்வது ஒன்று. வசூல் பாக்கியை 3 வருஷத்திலிருந்து 6 வருஷத்திற்குத் தள்ளிப் போடுவது மற்றொன்று. இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. மாதவன் குறிப்பிட்டதுபோல, வசூல் செய்கின்ற பொறுப்பை கிராம மணியக்காரரிடம் கொடுத்திருக்கிறோம். பழைய பாக்கிகளை வசூல் செய்ய ஊக்கம் அளிக்க கமிஷன் கொடுக்கப்படுகிறது. இப்படி வசூல் செய்வதால் பஞ்சாயத்துக்களின் நிதி நிலை உயர்ந்திருக்கிறது, தங்கள் காரியங்களை செவ்வனே செய்ய அவர்களுக்கு உதவியாக இருக்கிறது. ஆகவேதான் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து பழைய பாக்கிகளை வசூல் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இதிலே இந்த சட்டமன்றத்தில் கன்வென்ஷன் இருக்கிறதா என்று கேட்கப்பட்டது. இந்த மன்றத்திற்கு உரிமை இருக்கிறது என்றுதான் சட்ட இலாகாவும், மற்றும் சம்பந்தப்பட்ட இலாகாவும் பரிசீலனை செய்து பார்த்து ஆராய்ந்த பிறகே இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆறு வருஷம் இருப்பதால் ஒன்றும் சங்கடம் இருக்காது. பஞ்சாயத்தின் நிதி நிலை பெருகும். சங்கடம் இருக்கமுடியாது.



**திரு. செ. மாதவன் :** ஆறு வருஷம் என்பது எக்ஸ்டென்ஷன் ஆப் பீரியட். ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுப்பது செக்ஷன் இரண்டிலே, அதைத்தான் நான் சொன்னது. ஆறு வருஷமும் கொடுத்து விட்டு, அதற்கும் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்திருப்பதைத்தான் ஆட்சேபிக்கிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஆறு வருஷம் என்று சொன்னால், ஏற்கனவே விட்டுப்போன வரியையும்தான் வசூலிக்க வேண்டும். பல பஞ்சாயத்துக்களிலே, வீட்டின் மதிப்பீடு சரியில்லை என்று சொன்னார்கள். எஞ்ஜினியர் மதிப்புப் போடவேண்டும் என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே சரியானபடி பஞ்சாயத்துத் தலைவருக்குத்தான் தெரியும், எவ்வளவுதூரம் வரி போடலாம், அதன் மதிப்பு என்ன என்றெல்லாம். இப்பொழுது இருக்கும் நிலையில் பஞ்சாயத்து யூனியன் எஞ்ஜினியர்களுக்கு இருக்கும் வேலையே போதுமானது, அதிகமாகக் கூட இருக்கிறது. நகராட்சியையும், நகரசபைகளையும் பஞ்சாயத்துகளோடு இணைத்துப் பேசப்படுகிறது. பஞ்சாயத்து அமைப்பே வேறு. பஞ்சாயத்தின் பொறுப்புக்கள் முழுக்க முழுக்க பஞ்சாயத்துத் தலைவரைச் சேர்ந்தது. அவர்களே இருக்கும் நிலைகளைப் பார்த்து தக்கவாறு செய்யவேண்டும். இரண்டு முதல் 20 சதவிகிதம் வரை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இடையிலே ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். கீழ் மட்டத்திலே ஒன்றும் இல்லை என்றார்கள். இருக்கும் நிலையை யோசித்து இரண்டு முதல் இருபது சதவிகிதம் வரை போடலாம். அதில் ஆட்சேபிக்க ஒன்றும் இல்லை. 20 சதவிகிதம் வரை என்றால், அதற்குள்ளாக பஞ்சாயத்துத் தலைவர் பார்த்து சரியாகச் செய்வார்கள். எவ்வளவு வரி போட்டால் தாங்குமோ அந்த அளவு போடுவார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அமைப்பு பஞ்சாயத்து. அது நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்றால் இதெல்லாம் அவசியமாகிறது. இப்பொழுது நகராட்சியைப் பொறுத்தவரையில், எவ்வளவு வேண்டுமானாலும் அவர்கள் உயர்த்தலாம். ஆனால் பஞ்சாயத்தில் அப்படியில்லை.

திரு. கலியாணசுந்தரம் சில பஞ்சாயத்துக்களில் தொழில் வரி, வண்டி வரி இவைகளையெல்லாம் விதிக்கவே தெரியவில்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஒன்றும் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை. அங்கத்தினர்கள் கவனத்திற்கும் வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் வண்டி வரி முதலியவை எவ்வளவு, எப்படி போடவேண்டும் என்பதையெல்லாம் தெரிந்திருக்கிறார்கள். அதில் ஒன்றும் தப்பு இருக்கமுடியாது.

இதிலே முக்கியமாக தேர்தலைப் பற்றிப் பேசப்பட்டது. நடைமுறையில் ஏதோ கஷ்டங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். தனக்கு பாக்கியில்லை என்று தேர்தலுக்கு நிற்கிறவர் தெரிந்துகொள்ள வேண்டும். அதை அவர்களே நிரூபிக்கும் நிலைமை இருக்கிறது. அதில் ஒன்றும் தவறு இல்லை. அதை மாற்றவேண்டிய அவசியம்

[திரு. கோ. பூவராகன்] [6th November 1965

ஒன்றும் இல்லை. இன்னும் மூன்று மாதம் என்று இருப்பதிலும், நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே உறுப்பினர்கள் 15 நாட்களில் செலுத்தவேண்டும் என்று இருப்பதால், இப்பொழுது இருக்கும் நிலையை மாற்றவேண்டிய அவசியம் இல்லை.

ஆண்டுக்கு ஒரு முறை வரி விதிப்பதனால் பஞ்சாயத்திற்கு வரும் மாட்சிங் கிராண்ட் ஏதாவது பாதிக்கப்படுமா என்ற பிரச்னை கிளப்பப்பட்டது. மாட்சிங் கிராண்ட் ஒன்றும் பாதிக்கப்படாது. எந்த அளவிற்கு வசூலிக்கிறோமோ அந்த அளவிற்கேற்றபடி, உடனடியாக அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒன்றும் தயக்கம் தெரிவிக்காது என்று கூறி, இந்த மசோதாவிற்கு ஆதரவு தெரிவித்த கனம் அங்கத்தினர்களுக்கு நன்றி கூறி, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Panchayats (Amendment) Bill, 1965, be taken into consideration."

**The motion was put and carried and the Bill was taken into consideration.**

*Clause 2*

MR. DEPUTY SPEAKER: The question is "That clause 2 do stand part of the Bill"

**SRI S. MADHAVAN: Sir, I move—**

*Add* the following proviso at the end :—

**'Provided that if no notice of demand in respect of such arrears was duly served upon him or if no reasonable time was given to him for the payment of such arrears after they became due, he shall not be disqualified.'.**

தலைவர் அவர்களே, இந்தப் பிரிவிலே வரும் கருத்தைக் குறித்து நான் ஏற்கனவே விளக்கினேன். அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொன்னார்கள். நாமினேஷன் போடுவதற்கு முன்பே நோட்டீஸ் கொடுத்து, "உனக்கு பாக்கி இருக்கிறதா" என்று கேட்பதைக் குறித்து அல்ல இந்தத் திருத்தம். அதைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. வரி விதிப்பதற்கு முன்னாலே நோட்டீஸ் கொடுப்பதைப் பற்றியும் நான் குறிப்பிடவில்லை. ஒருவருக்கு பாக்கி ஏற்பட்டுவிட்டால், அந்த ஒரு காரணத்தைக் கருதி டிஸ்க்வாலிபிகேஷன் செய்து, கோர்ட்டுக்குக் கொண்டு செல்கிறார்கள். அப்படிக் கோர்ட்டுக்குக் கொண்டு செல்வதற்கு முன்னால் அவருக்கு இந்த விஷயம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்தத் திருத்தத்தின் அடிப்படை நோக்கமாகும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பாக்கி இருந்தால், அதற்காவது நோட்டீஸ் முன் ஜாக்கிரதையாகக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தையாவது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்னாலே எல்லோருக்கும் ஒரே மாதிரியாக நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர் சொல்கிறார்,



6th November 1965] [திரு. செ. மாதவன்]

அதைப்பற்றி இல்லாவிட்டாலும், தொடர்ந்து பாக்கிகள் ஏற்பட்டு, அவர்கள் மீது இப்படி ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதாக அமைய வேண்டும் என்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய நோக்கமாகும். இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

The amendment was duly seconded.

**கனம் திரு. கோ. பூவராகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்கனவே சொன்ன கருத்திற்குப் பதில் சொல்லும்போது, குறிப்பாக யார் யார் தேர்தலில் நிற்கவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் தாங்கள் வரி பாக்கி வைக்கவில்லை என்று தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொன்னேன். அவரவர்களே பார்த்துக்கொள்ள வேண்டிய விஷயம் இது. இதற்காக தனி நோட்டீஸ் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**The amendment was put and lost.**

**Clause 2 was put and carried.**

***Clause 3***

MR. DEPUTY SPEAKER: The question is:

"That clause 3 do stand part of the Bill."

SRI S. MADHAVAN: Sir, I move—

**Substitute the following for clause 3 :—**

"3. *Amendment of Section 26, Madras Act XXXV of* 1958.—In section 26 of the principal Act, for clause (i) the following clause shall be substituted, namely :—

"(i) fails to pay arrears of any kind due by him (otherwise than in a fiduciary capacity) to the Panchayat or the Panchayat Union Council within three months after such arrears became due:

Provided that he must be given an opportunity to pay the arrears within such time as may be fixed after the expiry of three months; or"

தலைவர் அவர்களே, இந்தப் பிரிவும் முன்னாலே உள்ள பிரிவின் அடிப்படையிலேயே வந்தது. அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரும்போது, 'நான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், நாமினேஷன் போடும்போது' என்று சொன்னார்கள். இதிலுள்ள கஷ்டங்களை நான் எடுத்துச் சொன்னேன். எக்ஸிக்யூடிவ் ஆபீசரிடமிருந்து க்ளியரன்ஸ் சர்டிபிகேட் பெறுவது முதலியவற்றில் இருக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொன்னேன். இப்படிப்பட்ட குழப்பங்களை விதிகள் அமைக்கும் போதாவது நீக்க வேண்டும். இம்மாதிரி பாக்கிகள் ஏற்படும்போது அந்தப் பாக்கிகளை எப்படி வசூலிக்க வேண்டும், அதற்கு எப்படி நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று விதிகளை மாற்றுவதற்கு அரசாங்கம் இந்தச் சட்டத்தை

[திரு. செ. மாதவன்] [6th November 1965

அமுலுக்குக் கொண்டு வரும்போது அந்த இலாக்காவிற்கு யோசனை கூற வேண்டும். அதைவிட இந்தச் சட்டத்திலேயே அமைத்து விட்டால் மிகவும் பாதுகாப்பாக அமையும். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்** : எந்த விதிகளை மாற்றவேண்டும் என்று கனம் அங்கத்தினர் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. செ. மாதவன்** : 'லெவி'க்குத்தான் சட்டம் இருக்கிறது. வசூலிக்கின்ற முறை பற்றியெல்லாம் விதிகளில்தான் வரும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்பொழுது ஒரு வருஷம் என்று ஆக்கிவிட்டோம். ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை நோட்டீஸ் என்று சொல்லலாம். இரண்டு வருஷத்திற்கு ஒரு நோட்டீஸ் என்றும் சொல்லலாம். இப்படி எழுத்திலே உள்ள கஷ்டங்களைப் போக்கும்போது ஏதாவது குறைக்க வேண்டுமே தவிர, முழுவதும் இல்லை என்றால் வேறு மாதிரியாகப் போய்விடும்.

டிமாண்டு நோட்டீஸ் தயாரிப்பது ஒருவர், வசூலிப்பது ஒருவர் என்று இரண்டு பேரும் தனித்தனியாக இருந்து வசூலிக்கும் போது. இருவரும் இரண்டு பார்ட்டிகளுக்கு சாட்சி சொல்லக் கூடிய நிலைமை ஏற்படக்கூடும். கோர்ட் என்றால் சட்டப்படி தான் தீர்ப்பு வழங்க முடியும். விதிகளிலே மாற்றம் இருந்தால் இரண்டு பேர் இரண்டுவிதமான சாட்சி சொல்ல வாய்ப்பு ஏற்பட்டு விடும். ஆக, அந்த விதிகளையாவது மாற்ற அரசாங்கம் முன்வர வேண்டும்.

The amendment was duly seconded.

**கனம் திரு. கோ. பூவராகன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, டிமாண்டு நோட்டீஸ் தயாரிப்பது கர்ணமாக இருக்கலாம். வசூலிப்பது மணியக்காரராக இருக்கலாம். அதை வைத்துக் கொண்டுதான் வசூலிக்கிறார்கள். இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள், ஒரு வருஷம் இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை கூட லெவி செய்யலாம் என்று சொன்னார்கள். வருஷா வருஷம் செய்யவேண்டும் என்று நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். கனம் அங்கத்தினருடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**The amendment was put and lost.**

**Clause 3 was put and carried.**

***Clause* 4.**

MR. DEPUTY SPEAKER : The question is :

"That clause 4 do stand part of the Bill".

**SRI S. MADHAVAN : Sir, I move—**

***Substitute* the following for sub-clause (1) :—**

"(1) in **sub-section (3)**, for the words 'The house-tax shall be levied every half-year', **the words 'The house-tax**



6th November 1965] [Sri S. Madhavan]

which shall be collected in two instalments, shall be levied every year' shall be substituted.".

தலைவர் அவர்களே, இந்தப் பிரிவைப் பற்றிக்கூட, கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். "லெவி போடுவதற்குத்தான் சட்டம் இருக்கிறது, வசூல் பண்ணுவது பற்றி விதிகளில் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொன்னார்கள். அந்தக் கருத்து உண்மையாக இருந்தாலும், சட்டம் தான் கட்டுப்படுத்தும். விதி கட்டுப்படுத்தாது. விதியை எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம். விதிப்படி நடக்காவிட்டாலும் பரவாயில்லை. சட்டத்திற்குப் புறம்பாக நடக்கக் கூடாது. சட்டத்திலே ஒரு சின்ன திருத்தம் தான் செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். வேறு ஒன்றும் கஷ்டமான திருத்தம் அல்ல.

The house-tax which shall be collected in two instalments.

என்றுதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தம் செய்வதால் கெடுதல் இல்லை. எப்பொழுது கருத்தை ஒத்துக் கொண்டார்களோ, அப்பொழுது இரண்டு மூன்று முறை வசூலிக்க உரிமை இருக்கிறது. டிமாண்டு நோட்டீஸ் அனுப்பக் கூடிய அதிகாரிக்கே விட்டுவிடாமல், சட்ட மன்றத்திலேயே ஒப்புக்கொண்டு, சட்டத்தை அமைத்துவிடலாம். இரண்டு முறை என்பதற்குப் பதிலாக, மூன்று முறை, நான்கு முறை என்று அமைச்சர் சொன்னாலும் அதையும் ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். இந்தத் திருத்தத்தையாவது அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

The amendment was duly seconded.

**கனம் திரு. கோ. பூவராகன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு தவணைகளில் வரி வசூலிக்கவேண்டும் என்று திருத்தம் தந்திருக்கிறார்கள். விதிகள் இயற்றும்போது, இரண்டு முறை செய்வதா, நில வரி வசூலிப்பது போல் நான்கு முறையாக வீட்டு வரியை வசூலிப்பதா என்பது பற்றி பரிசீலனை செய்து, அதற்கேற்ப ஏதாவது செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்யலாம். இரண்டா, மூன்றா, நான்கா என்று சட்டத்திலேயே ஏற்றுக் கொள்வதற்கில்லை. விதி செய்கின்ற போது இதையெல்லாம் கவனத்தில் வைத்து, சங்கடம் இல்லாமல் ஏற்படுத்த முடியும் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் திருத்தத்தையும் நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

The amendment was put and lost.

Clause 4 was put and carried.

Clauses, 5, 6 and 7 were put and carried.

[6th November 1965

*Clause* 1.

MR. DEPUTY SPEAKER : The question is :

" That clause 1 do stand part of the Bill."

SRI S. MADHAVAN : Sir, I move—

For sub-clauses 2 (*b*) and (*c*), substitute the following :

" (*b*) Sections 5 and 7 shall come into force on the date of the publication of this Act in the *Fort St. George Gazette.* "

I have not made myself clear on this point. I want to say something to the Hon. Minister.

MR. DEPUTY SPEAKER : The hon. Member must tell the whole House.

SRI S. MADHAVAN : Section 165 has been amended. It relates to limitation. Clause 1 will give retrospective effect to that section. That is my objection. I have no objection to extend the period of limitation. That comes under clause 5. But clause 1 says that clause 5 shall be deemed to have come into force on the 2nd October 1960. I object to giving retrospective effect to the extension of limitation. This House has passed the Sugar Cess Validation Act and certain other Acts to validate certain Acts declared invalid by the Courts. But here we are extending
12-30 p.m. the period of limitation and at the same time we are giving retrospective effect to that limitation.

The amendment was duly seconded.

கனம் திரு. கோ. பூவராகன் : இந்தத் திருத்தம் கொண்டு வருவதன் நோக்கமே பஞ்சாயத்துகளுக்கு அதிக நிதியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். 1960-ஆம் ஆண்டிலேதான் பெரும்பான்மையான பஞ்சாயத்துகள் ஏற்பட்டு இருக்கின்றன. கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் நாம் எந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்தோமோ அது நிறைவேறாது. பழைய பாக்கியை வசூலிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே அவர்களது திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

The amendment was put and lost.

Clause 1 was put and carried.

The Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, I move—

" That the Madras Panchayats (Amendment) Bill, 1965 be passed."

The motion was put and carried and the Bill was passed.



6th November 1965]

## VII.—GOVERNMENT MOTION.

### DRAFT MADRAS LAND REFORMS (DISPOSAL OF SURPLUS LAND) RULES, 1965.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

" That the draft of the rules [a] which it is proposed to issue under sub-section (1) of section 94 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961), be approved under the proviso to the said sub-section. "

The first batch of rules necessary for the implementation of the Land Ceiling Act were finalised and issued in an extraordinary issue of the *Fort St. George Gazette* on 29th September 1962. Rules regrding the mode of payment of compensation and the disposal of surplus lands were pending examination. The rules regarding the mode of payment of compensation have since been finalised. The draft of the rules relating to disposal of surplus land which it is proposed to issue under sub-section (1) of section 94 is placed on the Table of the House for approval under the proviso to the said sub-section.

Under the rules, application for assignment of surplus land should be made to the Authorised Officers within whose jurisdiction the land is situated and District Revenue Officer will pass orders on those applications. Those eligible for assignment will be entitled to preference in the order given in rule 5, the maximum extent to be assigned depending on the extent of other land, if any, already held by them subject to a maximum of 5 standard acres and in the case of a co-operative farming society, the ceiling area of such society. The assignment will be subject to conditions in rule 9 and also subject to the payment of the value of the surplus land assigned and value for the building and trees thereon. The value is payable in lump sum or in 20 equal annual instalments with interest at the rate of 5 per cent per annum on the outstanding instalments.

Provision has been made in the rules for an appeal to the Land Commissioner against the order passed by the District Revenue Officer under rule 8 (5).

Sir, I request the House to accept the Motion.

MR. DEPUTY SPEAKER : The motion is now before the House for discussion. The hon. Members, Sri Madhavan and Sri Alagamuthu have given notice of amendments to certain Rules. I will call them to move their amendments and they will be taken up for discussion. Now I will take up Rule 5. The hon. Member, Sri Madhavan, can move his amendment.

---

[a] Printed as Appendix III on pages 436–452

[6th November 1965

### Rule 5.

SRI S. MADHAVAN : Sir I move the following amendment :—

"Add the following as item (ii) after item (i) renumbering the existing items (ii) to (vii) as items (iii) to (viii) in sub-rule (1) of rule 5 :—

'(ii) a person whose purchase of lands for valuable consideration became void under section 22 of the Act'".

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER : Now the Rule and the amendment are before the House for discussion.

**திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு நீண்ட நாட்கள் சென்று இந்த விதிகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இப்போது எத்தனை ஏக்கரா நிலங்கள் சர்க்கார் கையில் பகிர்ந்து கொடுக்க இருக்கிறது என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே விளக்கம் தந்தார்கள். 94-ஆவது ஷரத்தின் கீழே இந்த நிலங்களைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்பதற்கு இந்த விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே க்ளாஸ் 5-ல் யார் யாருக்குக் கொடுப்பது என்பது பற்றி ப்ரிபரன்ஷியல் ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே

"A person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act".

என்று போட்டிருக்கிறார்கள். எதற்காக அவருக்கு முதல் சலுகை கொடுக்கப்படவேண்டும் என்று புரியவில்லை. இந்த உச்ச வரம்புச் சட்டத்தின் கீழே ஓரளவுக்கு மேலே நிலம் உள்ளவர்களிடத்தில் இருந்துதான் அதிகமாக உள்ளதை எடுத்துக் கொள்ள வகை செய்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது "completely dispossessed' என்ற நிலை எப்படி வரும் என்று தெரியவில்லை, அதற்கு விளக்கம் இல்லை. அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்த்தேன். விளக்கவில்லை.

அடுத்து, எங்கள் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களில் முக்கியமான ஒரு கருத்து இருக்கிறது. இந்தச் சட்டம் கொண்டுவரப்படும் என்று ரொம்ப நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்கப்புறம் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதற்கிடையில் சில சூழ்நிலைகள் ஏற்பட்டன. அந்தச் சூழ்நிலை வரவேண்டும் என்பதாகத்தான் அரசாங்கம் விரும்பியதோ என்பது வேறு பிரச்சினை. ஆனாலும் இடையில் அவர்கள் கொடுத்த காலத்தில் பலர் அதிகபட்ச நிலத்தை விற்கத் தொடங்கி விட்டார்கள். சட்டம் வரும் வரும் என்று சொல்கிறார்களே தவிர வரவில்லை என்று எண்ணி ஏமாந்த சில விவசாயிகள்தான் அகப்பட்டார்கள். அந்தக் காலத்தில் சில விவசாயிகள் அதிகபட்சமான உள்ள நிலத்தை விற்பவர்களிடம் இருந்து நிலத்தை வாங்கி இருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. அந்த விவசாயிகளின் நிலைமை என்ன ஆகும்? குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னாலே



6th November 1965] [திரு. செ. மாதவன்]

Estates Abolition Act 26 of 1948 படி லாண்டு ஹோல்டர் விற்றிருந்தால் அதை வாங்கினவர்களுக்கு ஏற்படுகிற விளைவுகள் உண்டல்லவா, அதுபோல இந்த உச்ச வரம்புச் சட்டத்திலும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முடியாவிட்டாலும் இந்த விதிகளிலாவது அவர்களுக்கு ஒரு முதல் வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பது எங்கள் நோக்கம். அதற்கு அரசாங்கத் தரப்பில் இருந்து வாதிடலாம். சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக சிலபேர் பினாமியாக சேல் டீட் செய்திருக்க முடியும். அந்த பினாமிகளுக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டுமா என்று கூறலாம். அதற்காகத்தான் என்னுடைய திருத்தத்திலே 'for valuable consideration' என்று கொடுத்துள்ளேன். பினாமியாக விற்கப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளதா, வால்யு கொடுத்து வாங்கப்பட்டுள்ளதா என்பதை அதிகாரிகள் தெரிந்து கொள்ள முடியும். பணம் கொடுத்து வாங்கியவர்கள் இருந்தால் அவர்கள் தங்கள் பொருளையும் இழந்து, நிலத்தையும் இழந்து போகாதிருக்க இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. வை. சங்கரன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலிலே திரு. செ. மாதவன் அவர்கள் சொன்னதிலே, புதிதாக ஒரு கேட்டிகரியை சேர்க்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 'A person whose purchase of lands for valuable consideration became void under section 22 of the Act' என்று கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே இதைச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. சேர்க்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் சர்ப்ளஸ் ஆக இருக்கக்கூடிய நிலத்தை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்பதிலே, சட்டப்படி பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் முதலில் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் கோவாப்ரேடிவ் ஃபார்மிங் சொஸைடிஸ், ஆர்ம்டு ஃபோர்ஸஸ் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சப் க்ளாஸஸ் 1, 2 இவைகளைப் பார்த்தால்

(i) A person who is completely dispossessed of his holding, by virtue of the provisions of the Act.

(ii) A person whose extent of holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant, by virtue of the provisions of the Act.

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும்தான் சட்டம் அமுலாக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகளால் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டவை. இந்த சப் க்ளாஸிலே 'Dispossessed of his holdings' என்று இருக்கிறது. இதற்கு விளக்கம் கொடுக்க முடியும். அதாவது அந்த பெர்ஸன் ஓனராக இருக்கவேண்டிய அவசியமில்லை. கல்டிவேட்டராகவோ அல்லது லெஸ்ஸியாகவோ

இருக்கலாம். ஓனரிடம் 30, 40 ஏக்கருக்கு மேல் இருக்கலாம், கன்டிராக்டரிடமும் 30, 40 ஏக்கருக்கு மேல் இருக்கலாம். அப்படியிருக்கும்பொழுது " Either as owner or as a lessee " என்று இரண்டு விதத்திலும் டிஸ்பொஸஸ் ஆகலாம். லெஸ்ஸி உள்ளவரிடம் லீஸ் எடுத்து இருந்தால் 30 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்குமானால் He is completely dispossessed. ஏனென்றால் " A person who is completely dispossessed of his holding, by virtue of the provisions of the Act " என்று போடப்பட்டிருக்கிறது. இதுதான் அதனுடைய விளக்கம் உண்மையிலேயே அது நியாயம்தான். சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலிடம் கொடுத்திருப்பது சரியானதுதான் அதற்கடுத்தபடியாக அதே மாதிரியாக ஆர்ம்டு ஃபோர்ஸஸ் கோவாப்பரேடிவ் ஃபார்மிங் சொஸைடிஸ் இவைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

" agricultural labourers or landless persons or a combination of both."

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த கேட்டிகரியை எடுத்துக் கொள்ளும்பொழுது ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆதரைஸ்டு ஆபீசர்ஸ் யார் யார், அவர்களுடைய ஜுரிஸ்டிக்ஷன் என்ன என்பதைப்பற்றிய விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஒரு குறை இருக்கிறது. 1, 2, 3, 4 கிளாஸ்களின் கீழே வரக்கூடிய பெர்ஸன்ஸ் யார் யார் என்று பார்த்து அவர்களுக்கு இந்த ஆதரைஸ்டு ஆபீஸர்ஸ் நோட்டிஸ் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

' A person who is completely dispossessed of his holding, by virtue of the provisions of the Act "

என்ற மாதிரியான லிஸ்ட் அவர்களிடம் இருக்கும். அதேமாதிரி மூன்று ஏக்கருக்கு மேலே வைத்திருக்கின்றவர்களுடைய லிஸ்ட் அவர்களிடம் இருக்கும். அதே மாதிரி ஆர்ம்டு போர்ஸஸ் கோவாப்ரேடிவ் ஃபார்மிங் ஸொஸைடி சம்பந்தமான லிஸ்ட் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே, இந்த ஆதரைஸ்டு ஆபீஸர்ஸ் இந்த நான்கு கேட்டிகரியைச் சேர்ந்தவர்களிடமிருந்து அப்ளிகேஷன்ஸ் கால்ஃபார் பண்ணினால் நன்றாக இருக்கும். ஏனென்றால் கல்டிவேட்டர்கள் எல்லாம் பொதுவாக வில்லேஜிலே இருக்கக்கூடியவர்கள் கிராமத்தவர்கள், அவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. ஆகவே, தண்டோரா முதலியவைகள் மூலம் அவர்களுக்குத் தெரிவித்து அப்ளிகேஷன்ஸ் கால்ஃபார் பண்ண வேண்டும். ஏனென்றால் இன்டெலிஜென்டாக இருக்கிறவர்களுக்கு எல்லாம் இந்த விவரங்கள் தெரியாது. ஆகவே, இந்த ஆதரைஸ்டு ஆபீஸர்ஸ் . . . . . . .

. . . . . . . . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member has not given notice of any amendment.

SRI V. SANKARAN : I am giving my suggestions so that they may be considered.



ஆகையினாலே, இந்த ஒரு மாறுதல் இதிலே இருந்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். அதாவது இந்த ஆதரைஸ்டு ஆபீஸர்ஸ் அப்ளிகேஷன்ஸ் கால் ஃபார் பண்ணினால் நல்லது. இந்தச் சட்டம் நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் வருவதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டபோதிலும், இது ஒரு நல்ல சட்டமாக வந்திருக்கிறது. இதை நல்லமுறையில் அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இந்தத் திருத்தத்தையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** சார், நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ரொம்பக் கஷ்டப்பட்டு அமைச்சர் அவர்கள் இந்த விதிகளைக் கொண்டு வருகிறார்கள். இதனால் அனுகூலம் அடையக்கூடியவர்கள் எந்த அளவுக்கு அனுகூலம் அடைவார்கள் என்பது சந்தேகமான விஷயம். நிலங்களை விநியோகம் பண்ணுகிற காலத்திலே நிலம் இழந்தவர்களுக்குத் தான் முதலிலே விநியோகம் பண்ணமுடியும் என்று இந்த விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின்மூலம் 30 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கக்கூடியவர்கள் நிலத்தில் சாகுபடி செய்கின்ற குடியானவர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் அவர்களை வெளியேற்ற முடியாது. ஆகவே, நிலத்தை இழந்தவர்கள் என்று சொல்வதற்கே வழி கிடையாது. ஆகவே, இந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக, சொந்த நிலமோ அல்லது சாகுபடி நிலமோ மூன்று ஏகர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு மேலும் 2 ஏக்கர் கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மூன்று ஏக்கர் நிலம்கூட இல்லாத விவசாயத் தொழிலாளர், நிலமே இல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலப் பசியைப் போக்குவதற்கு நிலங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முடியும். அந்தத் தொழிலையே நம்பியிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஒரு நன்மை ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே இதை நிறைவேற்றுகின்றபொழுது அமைச்சர் அவர்கள் இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த விதிமுறைகளைக் கவனிக்கின்றபொழுது, ஒன்று இரண்டு விஷயங்களை மாத்திரம் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் . . .

MR. DEPUTY SPEAKER : I think it will be better if the hon. Member refers to the particular amendments to this rule in the first instance. Therefore, the hon. Member may confine himself to rule 5.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : நிலம் விநியோகம் சம்பந்தப் பட்டமட்டில் ஆர்ம்டு ஃபோர்ஸஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்ம்டு போர்ஸஸ் என்றால், பிரதேச சேனை என்ற முறையில் வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற ஆர்ம்டு ஃபோர்ஸஸ் என்றால் ஆர்மியிலே சேர்ந்து பெர்மனண்ட்டாக இருப்பவர்களைக் குறிக்கிறதா அல்லது பிரதேச சேனையிலே சேர்ந்து வெளியிலே அனுப்பப்பட்டிருக்கின்றவர்களைக் குறிக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த நிலம் விநியோகம் சம்பந்தமாக பர்மாவிலிருந்து வந்தவர்கள், இலங்கையிலிருந்து வந்தவர்கள், கோல்ட் கன்ட்ரோல் ஆர்டரின்கீழ் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கெல்லாம் நிலம் கொடுக்கவேண்டுமென்ற அளவில் "The Government has expressed its pious wish" என்று எண்ணுகிறேன்.

கனம் அங்கத்தினர் சுப்பையா அவர்கள் குறிப்பிட்டது போல் ஐந்து ஏக்கர் வரை தேவை என்று நினைக்கவில்லை. கொஞ்சமாயினும், ஒரு ஏக்கரேனும் ஒரு குடும்பத்திற்கு இருக்கும்படியாகப் பார்த்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். தேச சுதந்திரத்தைப் பந்தோபஸ்து செய்து கொடுக்கிறவர்களுக்கு இந்தச் சலுகைகளைச் செய்து கொடுப்பது அவசியந்தான். அதோடு இந்த தேசத்தின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களையும் இந்த இனத்தில் கொண்டு வந்து சிறு அளவேனும் அவர்களுக்கும் கொடுக்கும் முறையை ஏற்படுத்தவேண்டும். அவர்களுடைய சேவையை அங்கீகரிக்கும் வகையிலாவது இவர்களுக்கும் ஓரளவு கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா** : கனம் அங்கத்தினர் மாதவன் அவர்களும், சுப்பையா அவர்களும் எழுப்பிய சந்தேகத்திற்கு விவரமாக, கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய பல பிரிவுகளின் காரணமாக ஏதேனும் ஒரு கஷ்டம் ஏற்பட்டால் அவர்களுக்கு ஒரு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற இந்தப் பிரிவில் இருக்கக்கூடிய முதல் ஏற்பாடு. ஒரு இடத்தில் 32 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தால் 30 ஏக்கரை அவர்களுக்கு விட்டுவிட்டு இரண்டு ஏக்கரை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். அது போலவே கல்டிவேட்டிங் டெனண்ட்ஸ் ஆக இருக்கக் கூடியவர்களுக்கு மேற்கொண்டு நிலம் வைத்துக்கொள்ள உரிமை ஏற்படுகிற நோக்கில் அந்த நிலத்தை எடுக்க முடியும். பாதுகாப்பு சட்டப்படி எடுக்க முடியாவிட்டாலும்கூட — பாதுகாப்புச்சட்டம் நிரந்தரமாக நிலத்தை எடுக்கக் கூடாது என்ற முறையில் உர்ஜிதப்படுத்தப் பட்டது அல்ல, தற்காலிகந்தான். காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன் வரும்போது என்ன ஆகுமென்று பார்க்கலாம். கல்டிவேட்டிங் டெனண்ட்சிடமிருந்து நிலத்தை எடுத்துவிடும் [illegible]



தில் அவர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த விதி. பாதகம் ஏற்படும் பட்சத்தில் இதனால் தீங்கு வரக்கூடாது என்பதற்காக ப்ரொவிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

செக்ஷன் 22-ல் இருப்பதை எல்லாம் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் உற்றுக் கவனித்திருந்தால் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்திற்கே இடம் ஏற்பட்டிருக்காது. அவருடைய நினைப்பு எல்லாம், இடைக்காலத்தில் டிரான்சாக்ஷன் நடந்து பினாமியாக இருந்தால் விட்டுவிட வேண்டும், வால்யுவபிள் டிரான்சாக்ஷனாக இருந்தால் அதற்கு அங்கீகாரம் கொடுக்க இந்தப் பிரிவில் இடம் கொடுக்க வேண்டும் என்பது. நாம் எந்த விதமான முடிவுக்கும் வருவதற்கு முன்பு, செக்ஷன் 22-ல் யாருக்கு பினாமி டிரான்சாக்ஷன், யாருக்கு வால்யுவபிள் டிரான்சாக்ஷன் நடந்திருக்கிறது, என்ன தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை செக்ஷன் 22-ல் சொல்லியிருக்கிறார்கள். அந்த முடிவு ஒருவருக்குப் பாதகமாக வந்துவிட்டால் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்பது நியாயமாக இருக்க முடியாது. இந்த செக்ஷனால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் இந்தச் சட்டமே தேவையில்லை. கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் நமது முயற்சிகள் பூராவும் வீணாகப் போகும். ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

The amendment was put and lost.

### *Rule 7.*

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

"For rule 7 *substitute* the following :—

"(7) *Applications for assessment of surplus land to be made to the Authorised Officer.*—Applications for the assignment of surplus land shall be in Form C and shall be presented within such time as may be allowed which shall not be less than one month from the date of notice published under Rule 4, in person, to the Authorised Officer within whose jurisdiction the land is situated or sent to him by registered post."

The amendment was duly seconded.

**கனம் திரு. வெ. ராமையா** : கனம் அங்கத்தினர் இந்தத் திருத்தத்தைக் கொடுப்பதற்கு முன்பு ஃபாரம் 'பி'-ல் இருக்கக் கூடிய விரத்தைப் பார்த்தால் இந்தத் திருத்தம் தேவையில்லையென்று நினைக்கிறேன். ஃபார்ம் 'பி'-ல் ஆதரைஸ்டு ஆபீசர் எந்தத் தேதியில் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, 'ஒரு மாதம்' என்று இந்தச் சட்டத்திலே கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. து. ப. அழகமுத்து** : ஸ்பெசிபிக்காக இல்லையே.

[6th November 1965

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அது நிர்வாகம் சம்பந்தப்பட்டது. சில இடங்களுக்குப் 15 நாள் கொடுத்தால் போதும், சில இடங்களில் 2, 3 மாதங்கள் இருக்கும். ஆகையால் நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. செ. மாதவன் :** அமென்ட்மெண்டைப் படித்துப் பார்த்தால் "shall not be less than one month" என்று இருக்கிறது. 4-வது கிளாசில் "Authorised Officer to invite applications for assignment of surplus land" என்று இருக்கிறது, 7-வது கிளாசில் அப்ளிகேஷன் கொடுக்கிறவர்கள் ஃபார்ம்-சி-ல் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதிலே "Till such date" என்று கொடுத்திருக்கிறது. அந்தக் 'காலத்தை' எப்பொழுது பூர்த்தி செய்யலாமென்று குறைந்த பட்சம் நிர்ணயிக்க வேண்டும். இல்லாவிட்டால் திடீர் திடீரென்று கேட்க வாய்ப்பு இருக்கும்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** திடீர் திடீரென்று உத்தரவு போடமாட்டார்கள். அப்படி ஆதரைஸ்டு ஆபீசர்கள் செய்ய மாட்டார்கள். எக்சிக்யூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷனை இது போன்று குறைந்த பட்ச காலத்தை நிர்ணயம் செய்வதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

The amendment was, by leave, withdrawn.

*Rule* 12.

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

"*Add* the following Explanation at the end of sub-rule (1) :—

'"*Explanation*.—For the purpose of calculating five years under the proviso to this rule, the period taken for the disposal of the appeal under rule 10 shall be deducted '."

The amendment was duly seconded.

**திரு. செ. மாதவன் :** இதிலே இரண்டு ரூல்களிலும் ஒரு 'அனுமலி' இருக்கிறது என்று நினைக்கிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டும். கான்ஸலேஷன் அல்லது மாடிபிகேஷனுக்கு உத்தரவு பிறப்பிக்கும் கால அளவாக ஐந்து வருஷம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அப்பீல் புரவிஷன் இருக்கிறது. அப்பீல் எந்தக் காலத்திற்குள் முடிய வேண்டுமென்ற நிலைமை இல்லை. போர்டுக்கு வரும்போது எக்ஸ்டென்ஷன் ஆப் அப்பீல் இருக்கிறது. ஐந்து வருஷம் என்பது அனுமலி ஆக வரும்.

**THE HON. SRI V. RAMAIAH : Assignment is an act which has to be completed by a particular date. I think the hon. Member Sri S. Madhavan will agree with this. An appeal regarding assignment may go to the Land Commissioner. According to the hon. Member Sri S. Madhavan, there is no time limit for the disposal of the appeal. He will dispose it of within a reasonable time. If the assignment is cancelled by the Land Commis-**



6th November 1965] [Sri V. Ramaiah]

sioner and he passes a fresh order, then that particular assignment goes out and a new assignment begins. As for assignment which comes into force on the date of appeal, the date for cancellation will be five years from that date. Thus there will be no confusion.

SRI S. MADHAVAN : rose . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member cannot have the right of making a second speech.

Is the hon. Member Sri Alagamuthu, pressing his amendment?

SRI T. P. ALAGAMUTHU : Yes, Sir.

The amendment was put and lost. 1-00 p.m.

MR. DEPUTY SPEAKER : Now the Government Motion is before the House for general discussion.

* **திரு. கோ. சி. மணி :** கனம் பேரவை மன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கிற உபரி நிலத்தை யார் யாருக்குக் கொடுக்கலாம் என்ற யோசனையையும் அதற்கு பூர்வாங்கமான ஒரு திருத்தத்தையும் இங்கு தந்திருக்கிறார்கள். இதில் முக்கியமாக "நிலம் உழுபவனுக்கே சொந்தம்" என்ற அடிப்படையில் பிரசாரம் செய்தது காங்கிரஸ் கட்சி. அந்த அடிப்படையிலே பல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று அமைச்சர்கள் இந்த மன்றத்திலும் பேசியிருக்கிறார்கள், வெளியிலும் பேசுகிறார்கள். இப்போது ஒரு சிறிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. போனது போக மிச்சம் கிடைத்திருக்கிறது. அவர்களிடமிருந்து நாம் எடுக்கவில்லை. மாற்றிக் கொள்ள முடியாமல் ஏதோ சிறிது கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் அதையாவது கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்தச் சட்டத்தின் விதிகள் செய்யப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்த பிறகும், நியாயவாரச் சட்டம் வந்த பிறகும், சாகுபடிதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் வந்த பிறகும், தர்ம ஸ்தாபனத்தைச் சார்ந்த நிலங்களுக்கு என்று ஒரு சட்டம் வந்த பிறகும், இவ்வளவையும் கொண்டு வந்து விட்டு உபரி நிலத்தை யாருக்குக் கொடுப்பது என்று வரும்போது இந்தச் சட்டங்கள் வந்தபோது உண்மையில் யாருக்கு பலன் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டதை பார்த்து உள் குத்தகைதாரர்கள் என்பது சட்டப்படி செல்லாது என்று உயர்நீதி மன்ற தீர்ப்பு வந்தது. ஹைகோர்ட்டில் இருந்து இப்படி ஒரு தீர்ப்பு வந்த காரணத்தினால் வெளியில் உள்ளவர்கள் இதை ஏற்றுக்கொண்டு வழக்காடப்படாமல் நின்று விட்டது. இதுபற்றி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியபோது ஒரு வழி செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு ரெண்ட் ஆக்டில் இணைத்தார்கள். உள் குத்தகைதாரர்களுக்கு ஒரு வகை

காண்கிறோம் என்று இந்தச் சட்டத்தில் கொண்டு வந்தார்கள். தனிப்பட்டவர்களின் நிலத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, ஒரு 50 வேலி நிலத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அதில் 10 மா. நிலத்தை இன்னொருவருக்கு குத்தகைக்கு கொடுத்து அவர் உள் குத்தகைதாரராக இருந்து இந்த தீர்ப்பு வந்தவுடன் உள்குத்தகைதாரர்களுக்கு உழுகிற பாத்யதை இல்லை என்ற தீர்ப்பால் பல உள் குத்தகைதாரர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இங்கு ஒரு கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் தஞ்சை ஜில்லாவில் மட்டும் ஆயிரத்தி சொச்சம் குடும்பங்கள் இதன் காரணமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று பதில் சொல்லப்பட்டது. ஒருவிதமான தவறும் செய்யாமல், நெல் அளக்காமல் இருந்ததினாலோ அல்லது நிலத்தை கெடுத்து விட்டதினாலோ அவர்கள் வெளியேற்றப் படவில்லை. ஒரு ஜில்லாவில் மட்டும் இப்படி ஆயிரத்திச் சொச்சம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டிருக்கின்றன. அது இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. யாருக்குக் கொடுப்பது என்பதில் இரண்டாவதாக, அல்லது மூன்றாவதாக அல்லது கடைசியாவது இந்த உள் குத்தகைதாரர்களுக்கும் தரப்படவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு வரவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு ஜில்லாவில் மட்டும் ஆயிரத்துச் சொச்சம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. மற்ற ஜில்லாக்களில் இப்படி எவ்வளவு பேர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்களோ? உழுது கொண்டிருந்தவன் ஒரு சட்டம் வந்த பிறகு வெளியேற்றப்பட்டிருக்கிறான். உள் குத்தகைதாரர்களுக்கு சட்டப்படி பாத்தியம் செல்லாது என்று உயர்நீதி மன்ற தீர்ப்புப்படி உள்குத்தகைதாரர்கள் வெளியேற்றப்பட்டிருந்தால் இந்த உபரி நிலத்தைப் பெற தகுதி படைத்தவர்கள் என்று இந்த சட்டத்தை தயவு செய்து திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஃபார்மிங் சொஸைட்டிக்கு நிலம் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அவன் ஒரு விவசாயியாக இருந்து குத்தகை நிலம் வைத்திருந்தால் அப்படி பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சொஸைட்டி அமைக்க நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு ஒத்துக் கொண்டால் அப்படி சொஸைட்டி அமைக்கலாம் என்று கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ரூல்ஸில் இருக்கிறது. பல ஊர்களிலும் அப்படி சங்கம் அமைக்க விரும்பி மனுப் போட்டு நிலச்சொந்தக்காரர்கள் அதற்கு அனுமதி கொடுக்காமல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மற்றைய சங்கங்கள் நிலம் வைத்திருப்பவர்கள்தான் அமைத்திருக்கிறார்கள். அவர்களுக்கே நிலம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நிலம் இருப்பவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டுமா? தினக்கூலி செய்பவர்களை, விவசாயத் தொழில் தெரிந்தவர்களைக் கொண்ட கூட்டுறவு சங்கம் அமைத்து பிறகு நிலம் பெற்ற பின் அந்தச் சங்கத்தை அமைக்கப் போகிறார்களா என்பதற்கு ஒரு விளக்கமும் இல்லை. அடுத்து, டெனன்ட்ஸ்



கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸுக்கு இது பொருந்துமா, அல்லது லேபர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸுக்கு இது பொருந்துமா என்று பார்க்க வேண்டும்.

THE HON. SRI V. RAMAIAH: 4-வது பிரிவில்—

'A co-operative farming society the members of which are landless agricultural labourers or landless persons or a combination of both;'

என்று போட்டிருக்கிறது. பின் என்ன சந்தேகம்?

திரு. கோ. சி. மணி: இவ்வளவு நாட்கள் கழித்து 1960-ல் சட்டம் போட்டு 1961-ல் முடிந்து பிறகு 1965-ல் வருகிறபோது [illegible] எல்லா நடவடிக்கைகளும் முடிந்து விடும் என்றும் அதாரைஸ்டு ஆபீசர் எல்லா ரிப்போர்டுகளையும் சமர்ப்பித்து விடுவார்கள் என்று சொல்லப்பட்டும் இன்னும் பிரச்னை இருந்து கொண்டேயிருக்கிறது. நிலம் இருக்கிறதா, திருத்தியமைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும் வேலைகள் இன்னும் நடக்கிறது. தமிழ்நாடு பூராவும் உபரி நிலம் கிடைத்துவிட்டது, இவ்வளவு தான் என்று ஏன் கூறப்படவில்லை? எந்தவித குற்றமும் செய்யாத உள் குத்தகைக்காரர்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வை. சங்கரன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் முதலில் சொன்னதுபோல் இதைத் திருத்த வேண்டியிருக்கிறது. அதை பரிசீலிக்கவேண்டும். நோட்டீஸ் வில்லேஜ் சாவடியில் போட்டால் போதும் என்றிருக்கிறது. முதல் நான்கு கேட்டிகரி மக்களுக்கும் நோட்டீஸ் அனுப்பி அப்ளிகேஷன் கால் ஃபார் செய்யவேண்டும்.

கனம் திரு. வெ. ராமையா: அங்கத்தினர் அவர்கள் ஒரு சட்ட நிபுணர். அவர்கள் கூறும் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு ஒரு பகுதியில் உள்ள அத்தனை பேர்களுக்கும் நோட்டீஸ் அனுப்ப முயற்சி எடுத்தாலும் ஒருவருக்கு நோட்டீஸ் கிடைக்காமல் போய் விடும். அதனால் அது ஸ்தம்பித்துப் போய்விடாதா?

திரு. வை. சங்கரன்: நோட்டீஸ் ரெஜிஸ்டேர்டு தபாலில் அனுப்பவேண்டும்.

"It is supposed to be a valid notice under law."

அது இருந்தால் போதும். நோட்டீஸ் அனுப்பவில்லை என்றால் இதன் அனுகூலம் கிடைக்காமல் போகும். 'அன்ட்ரேஸபிள்' என்று சொல்லமுடியாது. லாண்ட் ஓனர்ஸுக்கு சீலிங் வந்திருக்கிறது. கல்டிவேட்டிங் டெனன்ட்ஸுக்கு சீலிங் இருக்கிறது. அதை அமுல்படுத்தவில்லை. விவசாயிகளின் குறைபாடுகள் பற்றியும் சொன்னார்கள். பத்து, 12 ஏக்கர் இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்களுக்கு இப்போதுள்ள முறைப்படி நிலச்சுவான்தார்க்கு 40 சத விகிதம் கிடைக்கும். ஆனால் ஐந்து ஏக்கர், ஆறு

ஏக்கர் வைத்திருக்கும் நிலச்சுவாந்தார்களேயும் அவர்களிடம் குத்தகை எடுத்து இருப்பவர்களேயும் எடுத்துக்கொண்டால் பின்னவருக்கு அதிக வரும்படி கிடைக்கும்படியாக இருக்கிறது. அவர்களுக்கு விவசாயச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கிடைக்கும்படியான அளவில் காம்ப்ரஹன்ஸீவ்-வாக சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்மால் லாண்ட் ஹோல்டர்ஸுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று முன்பே இந்த சபையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாகவும் விரிவான சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எந்தெந்த 'கேடிகரி' யிலுள்ளவர்களுக்கு இது பொருந்தும் என்று கேட்கப்பட்டது. இதில் போடப்பட்டிருக்கின்ற விதிகளேப் பார்த்தால் நன்றாகத் தெரியும். ஏற்கனவே நிலம் இல்லாதவர்கள், மற்றபடி பலவகைப்பட்ட இனத்தவர்கள் இருக்கிறார்கள். இவர்களே எல்லாம் 'கேட்டகரி' யில் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இதில் திரு. மணி அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவேண்டிய தேவையில்லை. கனம் செல்வராஜன் அவர்கள் பேசுகிற போது, டெரிட்டோரியல் ஆர்மியில் இருக்கிறவர்களுக்கும் நிலம் கொடுக்கவேண்டும் என்று ரூலில் சேர்க்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது பாதுகாப்பில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எந்தவகையில் முதலிடம் கொடுப்பது என்பதைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். போர்முனையில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுப்பதா, அல்லது டெரிட்டோரியல் ஆர்மியில் இருப்பவர்களுக்கு கொடுப்பதா என்கின்ற விஷயத்தை எல்லாம் ஆலோசிக்கவேண்டும். டெரிட்டோரியல் ஆர்மியில் இருப்பவர்களுக்கு மட்டுமில்லாமல், சிவில் டிஃபன்ஸில் இருப்பவர்களுக்கும் கொடுக்கவேண்டும். இதெல்லாம் இருக்கின்ற நிலைமைக்குத் தகுந்தவாறும், நமக்கு கிடைக்கின்ற உபரி நிலத்திற்கு ஏற்றவாறும், யார் யாருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்கின்ற விஷயங்கள் எல்லாம் சிந்திக்கவேண்டிய விஷயங்கள். இவர்கள் மட்டுமல்ல, பர்மாவிலிருந்து வந்திருப்பவர்கள், இலங்கையிலிருந்து வந்திருப்பவர்கள், பொற்கொல்லர்கள், இவர்களுக்கெல்லாம் பிரையாரிட்டி கொடுக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நிமைரென்று எல்லாவற்றையும் ஒரே ரூத்தாவில் சொல்லிவிட முடியாது. பொதுவாக அரசாங்கத்தினுடைய நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். இதெல்லாம் அரசாங்கம் தொடர்ந்து பரிசீலிக்கவேண்டிய விஷயம். இதற்கெல்லாம் ரூலில் இடமில்லாமல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசாங்கம் எப்போதும் கருத்தில் கொண்டிருக்கிற விஷயம்தான்.

அடுத்து, திரு. சங்கரன் அவர்கள் சொன்னது, இப்போது சொல்லப்பட்டிருக்கும் முறையில் விளம்பரம் செய்வது போதாது என்பது. யார் யாருக்கு இதில் தகுதி இருக்கிறதோ அவர்களுக்கு





அரசாங்க நோட்டீஸ் பற்றி தெரிந்திருக்கவேண்டும். நிலமில்லாத ஏழை மக்கள் ராணுவத்தில் பணிபுரிபவர்கள் மட்டும் அல்ல, எத்தனையோ 'கேட்டிகரி' இருக்கிறது. இதை பரவலாக தெரிவிக்கவேண்டும் என்ற முறையில் விளம்பரம் செய்வதற்கு வகை செய்திருக்கிறோம். பஞ்சாயத்து அலுவலகம், வில்லேஜ் சாவடி போன்ற இடங்களில் நோட்டீஸ் ஒட்டவேண்டும் என்றிருக்கிறது. அதைப்பார்த்துவிட்டு விண்ணப்பங்கள் போடுவதை எல்லாம் எடுத்து முதலில் பரிசீலனை செய்யலாம். ஆகவே, இதில் போதுமான அளவுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்று நினைக்கிறேன். திரு. மணி அவர்கள் இது நீண்ட காலத்திற்கு முன்பே வந்திருக்கவேண்டும் என்று சொன்னார்கள். நில உச்சவரம்புச் சட்டம் வந்ததற்குப் பின்னால் பல சங்கடங்கள் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது, இதுவரை ஏற்பட்ட காலதாமதம் எல்லாம் அவசியமில்லாத காலதாமதம் என்று சொல்வதற்கில்லை. அதிலும் சமீபத்தில் இரண்டு மாத காலமாக எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளேப் பார்த்தால்—அதாவது ரெவின்யூ போர்டும் அரசாங்கமும் சேர்ந்து—எந்த அளவுக்கு இதை துரிதப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பது தெரியும். ரெவின்யூ போர்டு அதிகாரிகள், ஆதரைஸ்டு ஆபீஸர் இவர்கள் எல்லாம் இவ்வளவு காலத்திற்குள் வேலையை முடிக்கவேண்டும் என்று வரையறுத்திருக்கிறோம். அதோடு விநியோகம் சம்பந்தமாகவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் தான் இந்த ரூல்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் முறையாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொண்டு, இதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: Now I will put the Government Motion to the vote of the House.

The Government Motion was put and carried.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 8th November 1965. 1-1… p.m.

The House then adjourned.

### VIII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

296. *Notification issued with G.O. Ms. No. 3243, Home, dated the 10th September 1965 exempting from payment of tax, leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the jeep bearing registration number MDH 3857 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Chingleput.* [*Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).*]

[6th November 1965

297. *Notification issued with G.O. Ms. No. 3201, Home, dated the 7th September 1965 exempting from the payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, goods vehicles of the public carriers and the private carriers and contract carriages plying on inter-State routes between Madras and Mysore. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of* 1931).]

## B. Reports, Notifications and other papers.

* 79. *The Madras Entertainments Tax (Amendment) Bill, 1965 with Annexure.*

† 80. *Committee on Estimates for 1964-65—Eighth Report of the Committee on Community Development Programme (Presented to the Assembly on 10th August* 1965.)

* Despatched on 4th November 1965.

† Placed on the table of the House on 5th November 1965.



6th November 1965]

## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 332 on page 355-357]

*Cases of kidnapping of members during President Election in Panchayats.*

| Name of district. | Number of cases. | Name of Police Station where the case has been registered. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| North Arcot .. .. | 2 | Chengam |
| | 1 | Thanipadi |
| | 1 | Vettavalam |
| | 1 | Cheyyar |
| | 5 | |
| South Arcot .. .. .. | 1 | Thiruppapulyur |
| | 2 | Vridhachalam |
| | 2 | Veppur |
| | 1 | Tirukoilur |
| | 6 | |
| Chingleput .. .. .. | 1 | Sholavaram |
| Coimbatore .. .. .. | Nil | |
| Kanyakumari .. .. | Nil | |
| Madurai .. .. .. | 7 | Not furnished. |
| The Nilgiris .. .. | Nil | |
| Ramanathapuram .. .. | 1 | Nainarkoil |
| | 1 | Tiruvadanai |
| | 1 | Tiruppalakudi |
| | 2 | Devakottai |
| | 2 | Mudukulathur |
| | 1 | Keelathooval |
| | 1 | Sathur |
| | 1 | Vembakottai |
| | 1 | Manamadurai |
| | 2 | Thiruppuvanam |
| | 1 | Rameswaram |
| | 14 | |
| Salem .. .. .. | Nil | |
| Thanjavur .. .. .. | 1 | Vallam |
| | 1 | Vaduvur |
| | 1 | Orathanad |
| | 1 | Thiruthuraipoondi |
| | 1 | Manamelkudi |
| | 1 | Needamangalam |
| | 1 | Natchiarkoil |
| | 7 | |

[6th November 1965

| Name of district. | Number of cases. | Name of Police Station where the case has been registered. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
